# சத்தியோதயம்

## பிரதி அதிபர் திருமதி சத்தியபாமா சிவகுமாரன் அவர்களின்

## மணிவிழா மலர்




யா/முத்துத்தம்பி மகா வித்தியாலயம்

திருநெல்வேலி

# சத்தியோதயம்

*பிரதி அதிபர்*

**திருமதி. சத்தியபாமா சிவகுமாரன்**

*அவர்களின்*

# மணிவிழா மலர்

*யா/முத்துத்தம்பி மகா வித்தியாலயம்*

திருநெல்வேலி

2015

# கல்லூரிக்கீதம்

திரிகரண சுத்தியும் காரிய சித்தியும்
தருவாய் வருவாய் அருள்வாயே
வருமொழி பலவும் சிவநெறி மலரும்
பரவிடும் முத்துத்தம்பி மகா வித்தியாலயம்
வளமுடன் நாமும் வளம் பெற நாளும்
வழிதனைக் காட்டிடும் வித்தியாலயமே

திருநெல்வேலி ஊர் செய் பெருந்தவத்தால்
தண் தமிழ் ஓங்கிட கலை பலவும்
திருவளர் அறிவினைத் திறமுடன் ஊட்ட
திருக்கரம் நீட்டிடும் வித்தியாலயமே

வாழ்க நம் மகா வித்தியாலயமே
பண்புற வாழ்கெனப் பணிந்திடுவோம்
வாழிய வாழிய வாழிய எனவே
வளமுடன் வாழ வாழ்த்தி நிற்போம்

வாழிய எங்கள் வித்தியாலயமே
வாழிய வாழிய வாழியவே
வாழிய வாழிய வாழியவே
வாழிய வாழிய வாழியவே.

# மணி விழா நாயகி




**திருமதி சத்தியபாமா சிவகுமாரன்**

**பிரதி அதிபர் - Sp.Trd. Maths SLTS 1**

# இதழின் உள்ளே....


**மணிவிழா நாயகியின் வாழ்வியற் பதிவுகள்**

**அருளாசிச் செய்திகள்**

நல்லை ஆதீன குரு முதல்வர்
பாடசாலை அதிபர் திரு. இ. பசுபதீஸ்வரன்
பாராளுமன்ற உறுப்பினர் திரு. சி. சிறீதரன்
வாழ்நாள் பேராசிரியர் திரு. திருமதி. சண்முகதாஸ்

**வாழ்த்துரைகள்**

தலைவர் மணிவிழாக்குழு திருமதி .அ.இளங்கோவன்
வலயக்கல்விப் பணிப்பாளர் திரு. ந. தெய்வேந்திரராஜா
பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. பொ. அருணகிரிநாதன்
பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. கோ. வரதராஜமூர்த்தி
பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு சி. மாணிக்கராஜா
கோட்டக்கல்விப் பணிப்பாளர் திரு. அ. அகிலதாஸ்
ஓய்வுநிலை வலயக்கல்விப்பணிப்பாளர் திருமதி. அ. வேதநாயகம்
அதிபர், யா/ வைத்தீஸ்வராக் கல்லூரி திரு. தி. சத்தியபாலன்
ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் ( கணிதம்) திரு. நா. உலகநாதன்
ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் ( கணிதம்) திரு. S. V. மகேந்திரன்
ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர் (கணிதம்) திரு. மா. மகாநாதன்
ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர் (கணிதம்) திரு. பா. இராஜசேகரம்
அதிபர், யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி திரு வே. ஞானகாந்தன்
அதிபர், யா/ கல்வியங்காடு இந்து தமிழ் கலவன் பாடசாலை திருமதி. கௌ. பரந்தாமன்
ஓய்வுநிலை பிரதி அதிபர் திரு. க. சுந்தரகாந்தன்
தலைசர், சைவவித்தியா விருத்திச் சங்கம் திரு. சோ. பத்மநாதன்
ஓய்றிலை ஆசிரியர் திருமதி. சு. மகேஸ்வரன்
செயலாளர் சைவவித்தியா விருத்திச் சங்கம் திரு. தி. செல்வமனோகரன்
தலைவர். ஆசிரியர் நலன்புரிக்கழகம், யா/ முத்துத்தம்பி மகா வித்தியாலயம் திரு. க. கதிரவேல்
செயலாளர், ஆசிரியர் நலன்புரிக்கழகம், யா/ முத்துத்தம்பி மகா வித்தியாலயம்
திரு. தி. ஶ்ரீசந்திரகுமார்
ஆசிரியர், யா/ கோப்பாய் தெற்கு றோ.க.த. பாடசாலை திருமதி. கு. அசோக்கமார்
ஆசிரியர், யா/ கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி திருமதி. கு. கிருஸ்ணராஜ்
ஆசிரியர், யா/ முத்துத்தம்பி மகா வித்தியாலயம் செல்வி ஞா. திருஞானசம்பந்தன்
பகுதித் தலைவர் யா/ முத்துத்தம்பி மகா வித்தியாலயம் திருமதி. வை. கனகராஜா
ஆசிரியர் யா/ முத்துத்தம்பி மகா வித்தியாலயம் செல்வி கா. துரைராஜா
பகுதித் தலைவர் யா/ முத்துத்தம்பி மகா வித்தியாலயம் திருமதி. இ. மகேஸ்வரநாதன்
ஆசிரியர்; யா/ முத்துத்தம்பி மகா வித்தியாலயம் திருமதி. ச. துரைரட்ணம்

ஆசிரியர், யா/ கனகரத்தினம் மகா வித்தியாலயம் திருமதி. கு. யசோதா

ஆசிரியர், யா/ முத்துத்தம்பி மகா வித்தியாலயம் திரு. இ. ஜெயகரன்

ஆசிரியர், யா/ முத்துத்தம்பி மகா வித்தியாலயம் திருமதி. க.கபிலன்

ஆசிரியர், யா/ முத்துத்தம்பி மகா வித்தியாலயம் செல்வி. அ. நளாயினி

ஆசிரியர், யா/ முத்துத்தம்பி மகா வித்தியாலயம் திருமதி. சி. றோய்நேசராஜா

ஆசிரியர், யா/ முத்துத்தம்பி மகா வித்தியாலயம் செல்வி. அ. நளாயினி

ஆசிரியர், யா/ முத்துத்தம்பி மகா வித்தியாலயம் திரு. வ. தயாநிதி

ஆசிரியர், கிளி/ முத்கொம்பன் அ.த.க பாடசாலை

ஆசிரியர், யா/ முத்துத்தம்பி மகா வித்தியாலயம் திருமதி சு. சிவஸ்ரீ

பழைய மாணவன் யா/ முத்துத்தம்பி மகா வித்தியாலயம் திரு. க.துற்ஜெயந்தன்

பாடசாலைப் பணியாளர், யா/ முத்துத்தம்பி மகா வித்தியாலயம் தி. ம. டோம்ராஜ்

சிரேஷ்ட மாணவ தலைவன், யா/ முத்துத்தம்பி மகா வித்தியாலயம் செல்வன் த. விஜிதரன்

பழைய மாணவி யா/ முத்துத்தம்பி மகா வித்தியாலயம் செல்வி. வி. குசலா

பழைய மாணவி யா/ முத்துத்தம்பி மகா வித்தியாலயம் செல்வி. வி. குசலா

பழைய மாணவன் யா/ முத்துத்தம்பி மகா வித்தியாலயம் திரு.சு. யசிதரன்

பழைய மாணவி யா/ முத்துத்தம்பி மகா வித்தியாலயம் செல்வி. செ. சுமதி

பழைய மாணவி யா/ முத்துத்தம்பி மகா வித்தியாலயம் செல்வி. ரா. ரஜீந்தினி

**கட்டுரைகள்**

பேராசிரியர், கு. மிகுந்தன்

ஆசிரியர், யா/ முத்துத்தம்பி மகா வித்தியாலயம் திருமதி. அருட்செல்வன்

ஆசிரியர், யா/ முத்துத்தம்பி மகா வித்தியாலயம் திருமதி. யோ. ஜெயந்தி

ஆசிரியர், யா/ முத்துத்தம்பி மகா வித்தியாலயம் திரு. வ. தயாநிதி

ஆசிரியர், யா/ முத்துத்தம்பி மகா வித்தியாலயம் திருமதி. து. சதீஸ்கரன்

பகுதித் தலைவர் யா/ முத்துத்தம்பி மகா வித்தியாலயம் திருமதி. அ. இளங்கோவன்

ஆசிரியர், யா/ பெரியபுலம் மகா வித்தியாலயம் திருமதி. வ. அம்பிகைபாலன்

**நன்றியுரை**


சிரேஷ்ட புதல்வியின் பூப்புனித நீராட்டு விழா


திருமணத்தின் போது


சிரேஷ்ட புதல்வியின் திருமணம்


கனிஷ்ட புதல்வியின்
பட்டமளிப்பு விழாவின் போது


பேரப்பிள்ளையுடன்


கனிஷ்ட புதல்வியின் மகனின் பிறந்தநாள்
விழாவின் போது


தாய், தந்தை


குடும்பத்தினருடன்

# மணிவிழா நாயகியின் வாழ்வியற் பதிவுகள்

**திருமதி சத்தியபாமா சிவகுமாரன்**

| | |
|---|---|
| பிறந்த இடம்: | கந்தர்மடம், யாழ்ப்பாணம் |
| பிறந்த திகதி: | 1955.09.13 |
| தந்தை: | திரு. சின்னத்துரை திருநாவுக்கரசு |
| தாய்: | திருமதி. மகேஸ்வரி திருநாவுக்கரசு |
| சகோதரிகள்: | திருமதி. சத்தியரூபி சுரேந்திரன் (ஆசிரியை யா/ வேம்படி மகளிர் கல்லூரி) |
| | திருமதி. சத்தியகலா அருணகிரிநாதன் (ஆசிரியை யா/ இந்து மகளிர் ஆரம்பப்பாடசாலை) |
| கணவன்: | திரு. அருணாசலம் சிவகுமாரன் (ஓய்வு பெற்ற தொழினுட்ப உத்தியோகத்தர், யாழ் பல்கலைக்கழகம்) |
| பிள்ளைகள்: | திருமதி அபிரா திவாகரன் ( தொழில் உத்தியோகத்தர், தெரில் திணைக்களம்) |
| | செல்வி சிவஜா சிவகுமாரன் (ஆசிரியை , யா/ சுண்டிக்குளி மகளிர் கல்லூரி) |
| மருமகன்: | திரு. ம. திவாகரன் (உரிமையாளர், மணியம் இம்பெக்ஸ்) |
| பேரன்: | செல்வன் தி. யதுஷனன் |
| ஆரம்பக் கல்வி: | யா/ கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயம் |
| இடைநிலை,உயர்கல்வி: | யா/ வேம்படி மகளிர் கல்லூரி |
| கல்வித்தகைமை: | க.பொ.த (உயர்தரம்) |
| தொழிற்றகைமை: | விசேட பயிற்சி (கணிதம் SLTS I) |
| பதவி: | பிரதி அதிபர், யா/ முத்துத்தம்பி மகா வித்தியாலயம் |

சேவை விபரம்

| | |
|---|---|
| முதல் நியமனம்: | 1977.05.16 |
| யா/ முத்துத்தம்பி மகா வித்தியாயம் | 1977.05.16 – 1980.01.20 |
| பலாலி ஆசிரிய கலாசாலை | 1980.01.21 – 1982.12.31 |
| யா/ வேலணை சரஸ்வதி வித்தியாலயம் | 1983.01.01 – 1985.08.31 |
| யா/ முத்துத்தம்பி மகா வித்தியாலயம் | 1985.09.01 – 2015.09.12 |

கல்விப்புலம் சார்ந்த சேவைகள்

விடைத்தாள் மதிப்பீடு க.பொ.த (சா/த) கணிதம்

| | |
|---|---|
| உதவிப்பரீட்சகர் | 1998 – 2007 |
| மேலதிக பிரதம பரீட்சகர் | 2008, 2009 |
| பிரதம பரீட்சகர் | 2010 - 2014 |

# அருளாசிச் செய்தி



கல்வி சார் பெருந்தகையீர்!


யாழ்ப்பாணம் முத்துத்தம்பி மகா வித்தியாலய ஆசிரியராக 30 வருடங்கள் கடமையாற்றி ஓய்வு பெறும் திருமதி சத்தியபாமா சிவகுமாரன் அவர்களுக்கு பாராட்டு விழா எடுப்பதையிட்டு மகிழ்ச்சியடைகின்றோம்.

எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான். புனிதமான ஆசிரியப்பணியை 38 ஆண்டுகள் நிறைவாகப் பணியாற்றி பல மாணவர்களை நெறிப்படுத்தி கல்வியிலும், ஒழுக்கத்திலும், ஏனைய துறைகளிலும் நெறிகாட்டலிலும் நெறிப்படுத்திய பெருமை இவரையே சாரும். இப் பணியைக் கௌரவித்து விழா எடுக்கும் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரையும் பாராட்டுகின்றோம். திருமதி சத்தியபாமா சிவகுமாரன் ஓய்வு நிலையிலும் சமய, சமூகப் பணிகளையாற்றி பல்லாண்டு காலம் சுகதேகியாக வாழ இறைவனை பிராத்திக்கின்றோம்.

"என்றும் வேண்டும் இன்ப அன்பு"

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்,
இரண்டாவது குருமஹா சந்நிதானம்,
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்.

# பாடசாலை அதிபரின் ஆசிச் செய்தி



எனது பாடசாலையின் கணித பாட ஆசிரியராக, பகுதித் தலைவராக, பிரதி அதிபராக,பதிலதிபராக பல பதவிகளை அலங்கரித்து 30 வருட கால சேவையை வழங்கி 13.09.2015 ஓய்வு பெறுகின்ற திருமதி சத்தியபாமா சிவகுமாரன் அவர்களுக்கு மணிவிழா வாழ்த்துச்செய்தி அளிப்பதில் பெருமிதமடைகிறேன்.

உண்மை, நேர்மை, கடமை, கட்டுப்பாடு, பணிவு, அர்ப்பணிப்பு, பொறுமை ஆகிய உயர் பண்புகளைத் தன்னகத்தே கொண்டு எமது பாடசாலையின் மாணவர்களுக்கு கல்விப்பணியாற்றி ஆசிரியருடனும், அதிபர்களுடனும் சுமுகமான நிர்வாகத்திறன் படைத்த அவர் தனது கடமைகளை உரிய நேரத்தில் சுயமாகச் செய்யும் திறமையால் எல்லோர் மனதிலும் நிலைத்து நிற்கின்றார். இவரது ஓய்வுக்காலம் சீரும் சிறப்புமாக அமைய எல்லாம் வல்ல இறைவனின் ஆசியை வேண்டுகின்றேன்.

திரு. இ. பசுபதீஸ்வரன்,
அதிபர்,
யா/ முத்துத்தம்பி மகா வித்தியாலயம்.

# ஆசிரியப்பணிக்கு இன்னொரு அணிகலன்



யாழ்ப்பாணம் முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தின் ஓர் ஆசிரியப்பணியின் மகத்துவம், சேவை ஓய்வு பெறும் இவ்வேளையில் - நானும் வாழ்த்தும் பேறு பெற்றேன் எனும் போது மகிழ்ச்சி அடைகின்றேன். திருமதி சத்தியபாமா சிவகுமாரன் அவர்கள் முப்பத்தெட்டு வருடங்கள் ஆசிரிய சேவையில் இந்தச்சமூகத்தின் மனம் மகிழும்படியான மாணவச்செல்வங்களை உருவாக்கி ஓய்வு பெறுகின்றார். நானும் ஆசிரிய சேவையில், அதிபர் சேவையில் இருந்தவன் என்ற வகையில், இப்பணியில் இருக்கும் பொறுமை, சகிப்புத்தன்மை, அர்ப்பணிப்பு, திறந்த மனப்பாங்கு, அதன் வழி அமையும் அறுவடைகள் பற்றி நான் நன்கறிவேன்.

ஏணிப்படிகளாய் இருந்து எத்தனையோ மாணவர்களைச் சிகரங்களில் ஏற்றிவிட்டு, அமைதியாய் இருக்கும் ஆளுமை தான் ஆசிரியம். அதை திருமதி. சத்தியபாமா சிவகுமாரன் அவர்கள் முப்பத்தெட்டு வருடங்கள் செய்து முடித்திருக்கின்றார். பலவகையான சமூக, பொருளாதார பின்னணியில் இருந்து வரும் மாணவர்களை - தன் மென்மையான அணுகுமுறையால் - அன்பால் வென்று - நற்பிரஜைகளாக உருவாக அத்திவாரம் இட்டுள்ளார் என்று அறியப்படுகின்றார்.

"தாமின் புறுவது உலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந்தார்"

எனும் வள்ளுவன் கூற்றுக்கிணங்க மற்றவர்களுக்கு தன் ஆற்றலை கொடுப்பதில் இவர் போன்ற ஆசிரியர்கள் இன்புறும் நிலையில் ஆசிரியத்துவ மகத்துவம் பெறுகின்றது.

எமது மண் - போர் மற்றும் எமது இனத்தின் விடிவு நோக்கிய பயணம் என்பவற்றில் பல்வேறு காலங்களை கடந்து வந்துள்ள நிலையில் - அக்காலங்களில் கல்வியும் எங்கள் மூலதனம் என்ற எம் மண்ணின் கோட்பாட்டைக் காக்கப் பாடுபட்டவர்களில் இவரும் பெருமைபடுத்தப்படுகின்றார். முக்கியமான வரலாற்றுக் காலகட்டத்தில் ஆசிரியப்பணியை செய்தார் என்ற பதிவும் திருமதி.ச.சிவகுமாரன் அவர்களுக்கும் சேர்கின்றது. நீண்டதொரு கல்விப்பணியாற்றி ஓய்வு பெறும் இந்த மகத்துவமான ஆசிரியருக்கு என் வாழ்த்துக்களை

தெரிவித்துக் கொள்ளும் வேளையில் உடலுறுதியும் ஆரோக்கியமும் நிறைந்த வாழ்வையும் இறைவன் அவருக்கு அருள் வேண்டி நிற்கின்றேன்.

நன்றி


திரு. சி. சிறீதரன்,

பாராளுமன்ற உறுப்பினர்,

யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டம்,

கிளிநொச்சி.

## மனமார வாழ்த்துகின்றேன்




திருமதி சத்தியபாமா சிவகுமாரன் அவர்கள் யாழ் முத்துத்தம்பி மகா வித்தியாலயம் பெற்ற அருமையான ஆசிரியை. நாம் அறிந்த வரையில் நீண்ட காலமாக அங்கு கல்விப்பணி ஆற்றிவருகின்றார். முத்துத்தம்பி மகா வித்தியாலயம் பல சிறப்புகள் கொண்ட ஒரு கல்விக்கூடம். பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை "அப்பள்ளிக்கூடம் அமைந்த இடம் ஒரு புண்ணிய பூமி" என்று சொல்வார். அங்கு தான் சைவ ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை முன்னர் இயங்கியது. சைவச் சிறுவர் இல்லப் பிள்ளைகள் எல்லோரும் அங்கு தான் படிக்கிறார்கள். இப்பள்ளிக்கூடப் பிள்ளைகளுக்குக் கல்வி கற்பிப்பது ஓர் அறப்பணி என்றே சொல்ல வேண்டும். திருமதி சத்தியபாமா சிவகுமாரன் நீண்ட காலமாக இம் மகாவித்தியாலயத்திலே கல்வி கற்பித்து பெரிய அறப்பணியை ஆற்றி வருகிறார். அவர் அறுபதாண்டு அகவையை அடைந்துள்ளார். அது மணிவிழாவாகக் கொண்டாடப்பட வேண்டியதே. நல்லவை செய்பவர்களை நாடும், சமூகமும், மக்களும் நாமும் வாழ்த்த வேண்டும்.

முத்துத்தம்பி மகா வித்திலாலயம் எத்தனையோ இன்னல்களையெல்லாம் எதிர்கொண்ட போதும் அதன் நிலைப்பாட்டுக்கும் மேம்பாட்டுக்கும் திருமதி சத்தியபாமா சிவகுமாரன் போன்ற ஆசிரியர்களே உழைத்து வந்துள்ளனர். முத்துத்தம்பி வித்தியாசாலையாக இருந்த இப் பள்ளிக்கூடம் மகா வித்தியாலயமாகத் தரம் உயர்வதற்கும் அவர்கள் காலாக இருந்தார்கள். திருமதி சத்தியபாமா சிவகுமாரன் தன்னுடைய மனங் கோணாத உயர்ந்த பணியினால் இந்த மகா வித்தியாலயத்தின் பிரதி அதிபராக இப்பொழுது கடமை செய்கிறார்.

அவருடைய அகவை அறுபது நிறைவை மனங்கொண்டு நம்முடைய பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறோம். அவர் நீண்ட காலம் வாழ்ந்து எல்லா நலன்களும் பெற வேண்டும் என இறையருளை வேண்டி இந்த வாழ்த்துரையை நிறைவு செய்கின்றோம்.

பேராசிரியர் அ. சண்முகதாஸ்
முனைவர் மனோன்மணி சண்முகதாஸ்.

# அன்பினால் யாதுமாகி நின்றவர்




திருமதி சத்தியபாமா சிவகுமாரன் அவர்கள் பற்றிய வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் பேருவகை அடைகின்றேன். இராமரது சரிதம் கூற முற்பட்ட கம்பர் பாற்கடலில் உள்ள பால் முழுவதையும் அற்ப பூனையானது நக்கி, நக்கி வற்ற வைப்பது போல, தான் இராமசரிதம் பாட விளைந்ததாகக் கூறினார். இவ்வாறான ஒரு நிலைப்பாட்டிலேயே மகாலட்சுமியாக விளங்கிய, விளங்குகின்ற எம் பிரதி அதிபருக்கு மூன்று வருடங்களே அவருடன் பழகிய நான் எவ்வாறு வாழ்த்து வழங்குவது எனத் திகைப்புற்றேன். எனினும் இவரது 38 வருட கால கல்விச் சேவையில் இவரது நிறைவான பணி மாணவர் ஆசிரியர்களுக்கிடையிலான தொடர்பு, அறிவார்ந்த செயற்பாடுகள், அதிபர்களுடான ஒத்துழைப்பு, திட்டமிட்ட செயற்பாடுகள், மாணவ அபிவிருத்திக்கான அர்ப்பணிப்பு, ஆசிரியர் நலன்சார்ந்த ஆலோசனைகள் எல்லோருடைய மனதிலும் நீங்காது நிலைத்திருக்க வைத்துள்ளன. வாழ்கின்ற போதே மணிவிழாவினைக் காணுகின்ற பாக்கியம் பெற்றவரை வாழ்த்துவதில் நிறைவும் பேரானந்தமும் அடைகின்றேன்.

மற்றவர் வாழ்க்கைக்குக் கலங்கரை விளக்காய் நின்று வழிகாட்டும் பண்பானது அவர்பால் எல்லோரையும் ஈர்த்தது. எல்லோரும் விரும்புவராக வாழ்வது உலகில் கடினமானது. ஆனால் எம் பாடசாலையில் எல்லோரும் விரும்புகின்ற ஓர் பிரதி அதிபராக மற்றவர்களின் உளம் நோகாத வகையில் தன் பணியை ஆற்றிய பிரதி அதிபர் எம் பாடசாலையின் மைல்கல். தமது மூன்று தசாப்த காலக் கல்விப்பணியை இப் பாடசாலைக்காக அர்ப்பணித்தவர். மகான்கள் வாழ்ந்த இப் புண்ணிய பூமியிலே எங்கும், எதிலும் எல்லோர் மனதிலும் வாழ்ந்து வலம் வருவார். “ஒரு நாட் பழகினும் பெரியோர் கேண்மை இரு நிலம் பிளந்து..........” என்றாங்கு இவரது அன்புப்பணி என்றும் பாடசாலையில் பதிவுகளாக நிற்கிறது, நிற்கும். இவர் தமது ஓய்வுக் காலத்தில் தமது குடும்பத்தாருடன் சீருஞ்சிறப்புமாக வாழ்வதற்கு எல்லாம் வல்ல வண்ணை ஸ்ரீவெங்கடேசவரதராசப்பெருமாள் அருள் பாலிப்பாராக.

திருமதி. அ. இளங்கோவன்,<br>
தலைவர்,<br>
மணிவிழாக் குழு,<br>
யா/ முத்துத்தம்பி மகா வித்தியாலயம்.

# மணிவிழா வாழ்த்துரை



முத்துத்தம்பி மகா வித்தியாலய கணித ஆசிரியை திருமதி சத்தியபாமா அவர்கள் 38 வருட கல்விப்பணியை ஆற்றி 13.09.2015 சேவையில் இருந்து இளைப்பாறுவது தொடர்பான மணிவிழா மலருக்கு வாழ்த்துச்செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.


முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தில் நீண்ட காலமாக பணியாற்றிய திருமதி சத்தியபாமா சிவகுமாரன் அவர்கள் அப் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சியில் தமது அர்ப்பணிப்புச் சேவையை ஆற்றியவர். இப் பாடசாலையில் கல்வி கற்கும் பெரும்பான்மையான மாணவர்கள் பல்வேறு துன்ப துயரங்களுள் வாழ்ந்தவர்கள். மிக அழகான பாடசாலைச்சூழல் இம் மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் ஒரு ஆக்கபூர்வ ஆதரவை வழங்கியிருந்தது.

இப் பாடசாலையில் நீண்ட காலம் பிரதி அதிபராகப் பணியாற்றி வருகிறார். பல்வேறு அதிபர்களின் பணிக்கு இவர் பக்கபலமாக இருந்தவர். மிக அமைதியாக அன்பாக அனைவரையும் அரவணைக்கும் பாங்கு இவரிடம் நிறைந்திருக்கின்றது.

இவரது பணி அரசசேவையில் இருந்து நிறைவு பெற்றாலும் கல்விப் பணிக்கு ஓய்வு என்பது இல்லை. எமது மாணவர்களில் பலர் கணித பாடத்தில் சித்தியடையத் தவறி விடுகிறார்கள். அவர்களுக்கு உங்கள் பணி அவசியமாகிறது. ஓய்வுகாலம் சந்தோசமாகவும் நலமாகவும் நீங்களும் உங்கள் குடும்பத்தாரும் வாழவும் இறைவனை வணங்கி வாழ்த்துக்கூறி மகிழ்ச்சியடைகின்றேன்.

திரு. ந. தெய்வேந்திரராஜா,
வலயக்கல்விப்பணிப்பாளர்,
வலயக்கல்வி அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

# மனம் நிறைந்த மணிவிழா வாழ்த்து



திருநெல்வேலி முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தில் மிக நீண்ட காலம் கணித ஆசிரியராகவும், பிரதி அதிபராகவும் கடமையாற்றிய திருமதி சத்தியபாமா சிவகுமாரன் அவர்கள் 13.09.2015 ல் அரசபணி நிறைவில் ஓய்வு பெற இருப்பது தொடர்பான மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

கல்வி என்பது மனிதர்களின் தலையில் சுமையேற்றி அவர்களை தள்ளாட வைப்பதற்காக அல்ல. அவர்களை "தாள்" என்கின்ற எல்லாம் அற்றவர்களாக ஒரு மலரைப் போல மென்மையாக்குவதற்காகவும் அதே நேரத்தில் பாறையைப் போல திடமானவர்களாகவும் மாற்றுகின்ற ஒரு இனிய வேள்வியாகும்.

முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தில் பணியாற்றுவதற்கு ஆசிரியர்களுக்கு தியாக உணர்வு முக்கியமானது. இங்கு கற்கும் மாணவர்களின் வரலாறு பலருக்கும் தெரிந்திருக்க வாய்ப்பிருக்காது. இங்குள்ள ஆசிரியர்கள் தாயாக, தந்தையாக, சகோதரனாக, சகோதரியாக நடந்து கொள்ளவும் வேண்டும். இங்கு பணியாற்றுவது ஒரு வேள்விக்கு ஒப்பானது. இங்கு கல்விப்பணி கடவுள் பணியாக அணுகப்பட வேண்டும். இங்கு பணியாற்றும் ஆசிரியர்களின் மன ஆதங்கங்களை நான் மிக நன்றாக அறிவேன்.

திருமதி சத்தியபாமா சிவகுமாரன் அவர்கள் தமது கடமையில் அர்ப்பணிப்புடன் செயலாற்றுபவர். எல்லோரையும் அனுசரித்துச் செல்லும் பண்பினைக் கொண்டவர்.

- மிகவும் அமைதியானவர்
- பொறுமை இவரது முக்கிய அடையாளம்
- எத்தகைய சூழ்நிலையிலும் மனம் தளராத சேவை
- எவரையும் பகைத்துக் கொள்ளாத மனப்பாங்கு
- அறியாத விடயங்களை கேட்டு அறிந்து கொள்கின்ற ஆர்வம்
- ஏனையோரைப் புரிந்து கொள்கின்ற அறிவார்ந்த செயற்பாடுகள்
- எதனையும் புன்சிரிப்புடன் ஏற்றுக்கொள்கின்ற பக்குவம்

இவரில் நான் கண்ட பண்புகள். இது இவரது பணிக்கு மேலும் மெருகூட்டின.


சாய்கின்ற புயலாக இல்லாமல் சாமரம் வீசும் தென்றலாகக் கல்வி அமைய வேண்டும். அவ்வாறு மாற்றுவது கல்வித்துறை சார்ந்தோரது கடமையாகும். பாடசாலை என்பது மகிழ்ச்சியான இடமாக விளங்க வேண்டும். பாடசாலைக்குச் செல்வதைப் பிள்ளைகள் நேசிக்க வேண்டும். இயற்கையின் இனிமையை, மௌனத்தின் மகத்துவத்தை, அன்பின் ஆழத்தை மாணவர்களுக்கு எழுத்தூக்கலோடு அறிமுகம் செய்ய வேண்டும். மாணவர்களின் தனிப் பண்புகளை வளர்க்கினற வகையில் கல்வியை வழங்குவது எமது கடமையாகும்.

38 வருட கால கல்விப் பணியை நீங்கள் கடவுள் பணியாக ஆற்றி வந்தீர்கள். இது தங்களின் மாணவர் பரம்பரையில் நல்ல தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கும். ஓய்வு என்பது வயதிற்கு மாத்திரமே மனதிற்கு அல்ல. சாதிப்பதற்கு வயதில்லை. மேலும் ஒரு புதிய அத்தியாயத்தை நீங்கள் ஆரம்பிப்பதற்கு எல்லாம் வல்ல இறைவன் உங்களுக்கும், உங்கள் குடும்பத்தினருக்கும் நீண்ட ஆயுளையும் நீடித்த மகிழ்ச்சியையும் தரவேண்டும் என கேட்டு வாழ்த்துச் சொல்லி மகிழ்வடைகின்றேன்.

வாழ்க வளமுடன்

திரு. பொ. அருணகிரிநாதன்
பிரதிக்கல்விப்பணிப்பாளர்,
வலயக்கல்வி அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

# மணிவிழா நாயகிக்கு மனமார்ந்த வாழ்த்துக்கள்




முத்துத்தம்பி மகா வித்தியாலய பிரதி அதிபர் திருமதி சத்தியாபாமா சிவகுமாரன் அவர்களது 60ம் ஆண்டு நிறைவை ஒட்டிய மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

முத்துத்தம்பி மகா வித்தியாலயம் இந்துப் பாரம்பரியத்தில் உருவாக்கப்பட்ட வித்தியாலயமாகும். இப்பாடசாலையில் தமது சேவைக்காலத்தை நிறைவு செய்யும் பிரதி அதிபர் திருமதி சத்தியபாமா சிவகுமாரன் அவர்கள் தமது 38 வருட கால சேவையில் சேவை மனப்பான்மையில் தன்னிறைவைக் கண்ட ஒருவர். ஒரு தலைமைத்துவவாதி தனது சேவைகளை பூரணமாக ஆற்றுதல் வேண்டும். அவர் கோபப்படாத வகையில் மகிழ்ச்சியுடன் சேவையாற்றுபவராக தனக்கிடப்பட்ட வேலையை உடனுக்குடன் செய்து முடிப்பவராக விளங்க வேண்டும் இத்தகைய நற்பண்புகள் விளங்கப் பெற்ற இவ்வாசிரியராலேயே முத்துத்தம்பி மகா வித்தியால அதிபர்களின் பணி இலகுவில் செய்து முடிக்கக் கூடியதாக இருந்தது. கணிதத்தில் பயிற்றப்பட்ட ஆசிரியர் தனது சேவைக்காலத்தில் பூரணமாக சேவையாற்றியதால் மனத்திருப்தியுடன் பாடசாலையினை விட்டு விடை பெற்றுச் செல்வதையிட்டு மகிழ்ச்சியுடன் வாழ்த்துகின்றேன்.

திரு. கோ. வரதராஜமூர்த்தி
பிரதிக்கல்விப் பாணிப்பாளர்,
வலயக்கல்வி அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

# கல்விப் பயணத்தின் கலங்கரை விளக்கு



யாழ் முத்துத்தம்பி மகா வித்தியாலய கணித பாட ஆசிரியர் திருமதி சத்தியபாமா சிவகுமாரன் அவர்கள் கல்விச்சேவையில் இருந்து ஓய்வு பெறுவதையிட்டு பாடசாலைச் சமூகத்தினால் வெளியிடப்படவுள்ள "சத்தியோதயம்" நூலுக்கு வாழ்த்துரை வழங்குவதில் மகிழ்ச்சி அடைகிறேன். கணிதபாடத்தினை மாணவர்கள் இலகுவாக விளங்கிக் கொள்ளத்தக்க வகையில் கடந்த 38 ஆண்டுகளாக ஆசிரியர் அவர்கள் செயற்பட்டதனால் உயர் நிலைபெற்ற பல மாணவர்கள் சமூகவழிகாட்டிகளாக திகழ்கின்றனர்.

யாழ் முத்துத்தம்பி மகாவித்தியாலயத்தில் ஆசிரியர் அவர்கள் ஆற்றிய பணி காலத்தால் அழிக்க முடியாதது. தனது கற்பித்தல் பணியுடன் நிர்வாகப்பணியாக பிரதிஅதிபர் பணியினையும் மிக நீண்டகாலமாக ஆற்றி அதிபர்களாகப் பணியாற்றியவர்களுக்கு பூரண ஒத்துழைப்பையும் ஆசிரியர்களுக்கு வழிகாட்டியாகவும் திகழ்ந்தது பாராட்டத்தக்கது. ஆசிரியர் அவர்கள் வயதில் ஓய்வுநிலைக்கு வந்தாலும் சேவையால் எம்மாணவர் கணித அறிவிலும் ஒழுக்கத்திலும் சிறந்து விளங்க ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்பது எனது அவாவாகும். எல்லாம் வல்ல இறைவன் ஓய்வுகாலத்தில் நோயற்ற சந்தோஷ வாழ்வை அளிக்க வேண்டும் எனப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

திரு.சி.மாணிக்கராஜா,
பிரதிக்கல்விப்பணிப்பாளர்,
வலயக்கல்வி அலுவலகம்
யாழ்ப்பாணம்.

# கோட்டக்கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துரை



யா/ முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தில் 38 வருடங்கள் ஆசிரியராகவும் பிரதி அதிபராகவும் சேவையாற்றி 2015.09.13 இல் ஓய்வு பெற இருக்கும் சத்தியபாமா சிவகுமாரனின் மணிவிழா மலருக்குக் வாழ்த்துச்செய்தி அனுப்புவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

மணிவிழா நாயகி திருமதி சத்தியபாமா சிவகுமாரன் அவர்கள் அமைதியான சுபாவத்தைக் கொண்டவர். இக் கல்லூரியில் நீண்ட காலம் நிலைத்திருந்து கல்லூரியின் வளர்ச்சியில் பெரும்பங்காற்றியவர். பல அதிபர்களோடு முரண்பாடில்லாது முகாமைத்துவச் செயற்பாடுகளுக்கு வலுவூட்டியவர். கல்லூரியின் சக ஆசிரியர்களோடும், பெற்றோர்களோடும், மாணவர்களோடும் அன்போடும் பண்போடும் பழகிய உத்தமியாக விளங்கியவர். கல்லூரி சார்ந்த தரவுகளையும், தகவல்களையும் உடனுக்குடன் வழங்கக்கூடிய வல்லவராகவும் விளங்கினார்.

நான் கல்லூரிக்கு செல்லுகின்ற பொழுதெல்லாம் கல்வி அபிவிருத்தி சம்பந்தமான கருத்துக்களை அமைதியான முறையில் முன்வைப்பதை அறிந்துள்ளேன். இக்கல்லூரியில் கற்கும் மாணவர்களின் தகுதி நிலை, பெற்றோர்களின் சூழல் போன்ற யாவற்றையும் கருத்தில் கொண்டு நிர்வாகம் சம்பந்தமாகவும் முகாமைத்துவம் சம்பந்தமாகவும் முடிவெடுக்கும் பொழுது தேவையான ஆலோசனை வழங்குவதை அதிபர் மூலம் அறிந்துள்ளேன். அத்தகைய அனுபவம் மிக்க பிரதி அதிபர் இளைப்பாறுவது கல்லூரிக்கு பெருமிழப்பாகவே கருத முடியும்.

மணிவிழா நாயகி கல்விப்புலம் சார்ந்த பின்னணிக் குடும்பத்தைச் சார்ந்தவர். அவருடைய சகோதரியுடன் பணியாற்றிய அனுபவம் எனக்குண்டு. அவர்கள் எல்லோருமே அமைதியாக இருந்து தங்கள் பணிகளைக் கல்லூரிக்கு முழுமையாக வழங்குபவர்கள். பல அதிபர்களின் விருப்பத்துக்குரிய ஆசிரிர்களாக பணியாற்றி வருபவர்கள். அத்தகைய பின்னணியில் சேவையாற்றி ஓய்வு பெறும் திருமதி சத்தியபாமா சிவகுமாரன் அவர்கள் நீண்ட காலம் இவ் வையத்தில் சமூகப்பணி செய்ய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

திரு. அ. அகிலதாஸ்,
கோட்டக்கல்விப் பணிப்பாளர்,
நல்லூர்.

# மனம் நிறைந்த வாழ்த்துக்கள்



எனது அன்புக்குரிய கணித பாட ஆசிரியை திருமதி சத்தியபாமா சிவகுமாரன் அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்த்துரை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

தனது சேவைக்காலத்தின் பெரும்பகுதியை யா/ முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தின் வளர்ச்சிக்காக அர்ப்பணம் செய்த நல்லாசிரியர் திருமதி. சத்தியபாமா சிவகுமாரன் அவர்கள் அன்பும் பண்பும் ஆளுமையும் மிக்க ஆசிரியர். சத்தியபாமா அவர்கள் தனது சேவையின் உயர்வால் பாடசாலைச் சமூகத்தின் நன்மதிப்பையும் அதிகாரிகளின் கணிப்பையும் ஆசிரியர்களின் ஒன்றிணைந்த ஆதரவையும் மாணவச் செல்வங்களின் அன்பையும் ஏழைச்சிறார்களின் ஆசீர்வாதத்தையும் நிறைவாகவே பெற்றுள்ளார்.

நான் கணித விஞ்ஞான பாட உதவிக்கல்விப்பணிப்பாளராக கடமையாற்றிய காலத்தில் கணித பாட பயிற்சிப்பட்டறைகள், சேவைக்கால வகுப்புக்கள், கணித பாட வினாடிவினாப் போட்டிகள், கணித நாடகப் போட்டிகள், கணித தினம், துல்லியம் சஞ்சிகை வெளியீடு, கணித புதிர் போட்டிகள், கணித பாடஓவியப் போட்டிகள், கணித பாடக் கண்காட்சிகள், கணித பாட செயல்நூல்கள் வெளியீடு, கணித மூலவள நிலையத்தின் உயிரோட்டமான செயற்பாடுகள் அத்தனையிலும் உற்சாகமாக இணைந்து பணியாற்றியவர்.

கணிதத்துறையில் உண்மையாய் பணி செய்த எவரும் எத்தொழிலிலும் பொய்த்ததாய் நானறியவில்லை. கணித ஆசிரியர் சத்தியபாமா அவர்கள் தனது சேவைக்காலத்தில் நல்ல கணித ஆசிரியராய், சிறந்த பாட இணைப்பாளராய், நல்லதோர் பகுதித்தலைவராய் சிறந்த பிரதி அதிபராய் பணி செய்து எல்லோராலும் நன்மதிப்பைப் பெற்றவர். எனது மதிப்பீட்டிலும் உயர்ந்து நின்றவர்.

அவரது உன்னதமான சேவையை உளமாரப் பாராட்டுவதுடன் ஓய்வுகாலம் மிகவும் வளமானதாகவும் மகிழ்வானதாகவும் அமைய வாழ்த்துகின்றேன்.

திருமதி. அ. வேதநாயகம்,<br>
ஓய்வுநிலை வலயக்கல்விப்பணிப்பாளர்,<br>
வலயக்கல்வி அலுவலகம்,<br>
யாழ்ப்பாணம்.

# அகமகிழ்ந்து சேவையை பாராட்டுகின்றேன்



உண்மை, நேர்மை, பொறுமை என்பவற்றோடு சேவையாற்றிய சேவையாளர் திருமதி சத்தியபாமா சிவகுமாரன் எனும் பெருந்தகைக்கு சேவை ஓய்வு நன்நாளில் வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

ஆசிரியத்துவத்திற்கு உதாரணமாக விளங்கி தனது சேவையை கண் என நினைத்து யா/ முத்துத்தம்பி மகா வித்தியாலய கல்வி சமூகத்திற்கு, கணித ஆசானாக இருந்து பல நன் மாணாக்கரை உருவாக்கி சேவை புரிந்தவர் என்றால் மிகையாகாது.

மேலும் எனது அதிபர் பணிக்காலத்தில் பொறுமையான நிர்வாகத்திறன் கொண்ட பிரதி அதிபர் என்று இனங்கண்டு வியந்தது இவரை மட்டுமே என்பதுடன் எனது பணிகளை சிறப்பாக மேற்கொள்ள துணைபுரிந்ததுடன் எனது வேண்டுகோளினை ஏற்று பிரதி அதிபராக பணியாற்றியமையையிட்டு என்றும் பாராட்டுகின்றேன்.

அத்துடன் இந்நாளில் தனது நீண்டகால சேவையில் இருந்து ஓய்வுபெறும் இவர் தனது வாழ்நாளில் எல்லாம் வல்ல வண்ணை வைத்தீஸ்வரப்பெருமான் அருள் பெற்று சீரும் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றேன்.



திரு. தி. சத்தியபாலன்,

அதிபர்,

யா/ வைத்தீஸ்வராக்கல்லூரி,

யாழ்ப்பாணம்.

# மனம் நிறைந்த வாழ்த்துச் செய்தி



1977 ஆம் ஆண்டு கணித ஆசிரியையாக நியமனம் பெற்ற திருமதி சத்தியபாமா சிவகுமாரன் அவர்கள் யா/ முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தில் ஆசிரியராக 1985 ஆம் ஆண்டு இணைந்து கொண்டார். பின்னர் இப்பாடசாலையில் பகுதித்தலைவராக, பிரதியதிபராக இவரது பணி தொடர்ந்தது.

கணித வித்துவமும் நுட்பமும் கொண்டு விளங்கிய இவர் கண்ணியம் மிக்க கணித ஆசானாக கரிசரனையுடன் மாணவர்களுக்குக் கற்பித்ததால் மாணவர் மனதில் நல்லாசிரியர் என்ற மதிப்பைப் பெற்றிருந்தார்.

சொல்லிலும், செயலிலும் உறுதியுடனும், கண்டிப்புடனும் விளங்கிய இவரது கற்பித்தல் நடவடிக்கைகள் மாணவர்களுக்கு ஆரம்பத்தில் கடினமாக இருந்தாலும் காலப்போக்கில் மாணவர்கள் இலகுவாகவும், இயல்பாகவும் கணிதத்தைக் கற்கக் கூடியதாக இருந்தது.

எக்குடிப் பிறப்பினும் யாவரேயாயினும் அறிவை விரும்பும் அனைவரையும் அன்பால் அரவணைத்து ஆதரவுடன் கணிதம் கற்பிக்கும் திறன் இவரது தனித்துவமாகும்.

கல்விச் செயற்பாடுகள் மட்டுமன்றி இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் மாணவரைப் பங்குபெறச் செய்தலில் ஆசிரியரின் பங்களிப்பு அளப்பரியது.

இத்தகைய தொடருறு சேவையாற்றிய இவரது ஓய்வு கல்வியுலகிற்குப் பேரிழப்பாகும் என நான் கருதுகின்றேன். இவர் தனது ஓய்வு காலத்தில் தனது குடும்பத்தினருடனும் நண்பர்களுடனும் சீரும் சிறப்பும் பெற்று மகிழ்வுடன் வாழ மனமார வாழ்த்துகின்றேன்.


திரு. நா. உலகநாதன்

ஓய்வுநிலை உதவிக்கல்விப் பணிப்பாளர் (கணிதம்)

வலயக்கல்வி அலுவலகம்

யாழ்ப்பாணம்.

# வாழ்த்துச் செய்தி



யா/ முத்துத்தம்பி மகா வித்தியாலய கணித பாட ஆசிரியை திருமதி சத்தியபாமா சிவகுமாரன் அவர்களின் மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

திருமதி சத்தியபாமா சிவகுமாரன் அவர்கள் கணிதத்தை நீண்டகாலமாக கற்பித்த ஓர் ஆசிரியர். பிள்ளைகளின் நிலையறிந்து உரிய முறையில் பாடத்தின் விளக்கத்தை மாணவர்க்கு வழங்குவதில் வல்லவர். உரிய முன்னாயத்தத்துடன் கணிதத்தை வகுப்பறையில் கற்பித்த ஓர் ஆசிரியர். நீண்டகால கணிதப் பணியின் பின் சேவையிலிருந்து இளைப்பாறுகின்றார். மிக நலிந்த பிள்ளைகளிற்கு கணித சேவையை வழங்கிய மனநிறைவுடன் ஓய்வு பெறுகின்ற திருமதி சத்தியபாமா சிவகுமாரன் அவர்களின் ஓய்வுகாலம் சிறப்புற அமைய இறைவனை இறைஞ்சுகின்றேன்.

திரு. S. V. மகேந்திரன்
ஓய்வுநிலை உதவிக்கல்விப் பணிப்பாளர் (கணிதம்)
வலயக்கல்வி அலுவலகம்
யாழ்ப்பாணம்.

# பண்புடன் பழகி பிள்ளைகளினதும், பாடசாலையினதும் முன்னேற்றத்திற்கு உழைத்தவர்

திருமதி சத்தியபாமா சிவகுமாரன் ஆசிரியை அவர்கள் தான் கற்ற கல்வியறிவையும், பட்டறிவையும் கருவியாகக் கொண்டு கடந்த முப்பத்தெட்டு ஆண்டுகளுக்கு மேலாக கணித ஆசிரியராகப் பணியாற்றியவர். தான் சார்ந்த நிர்வாகத்துறையிலும், ஆசிரிய குழுமத்திலும், மாணவர்கள் மத்தியிலும் மிகவும் பண்பாகவும், அன்பாகவும் பழகி சிறியவர் முதல் பெரியவர் அனைவரது பாராட்டையும் பெற்றவர்.

கற்பித்த காலங்களில் CIDA, Unicef ஆகிய நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்ட கணிதம் சார்ந்த செயற்றிட்டங்களில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி அனைத்து தரங்களிலும் உள்ள மாணவர்களின் கணிதம் சார்ந்த திறன்களை மேம்பாடடையச் செய்வதில் முன்னின்று உழைத்தவர் என்றால் அது மிகையாகாது. திருமதி சத்தியபாமா சிவகுமாரன் ஆசிரியை அவர்கள் தனது ஒவ்வொரு செயற்பாடுகளிலும் மாணவர்களின் மேம்பாட்டையே இலட்சியமாகக் கொண்டவர். இவ்வாசிரியையின் ஓய்வுகாலம் குடும்பத்தினருடன் நீண்டகாலம் சிறப்பாக அமைய மனமார வாழ்த்துகின்றேன்.

திரு. மா. மகாநாதன்
முன்னாள் கணித ஆசிரிய ஆலோசகர்
வலயக்கல்வி அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

## வாழ்த்துச் செய்தி

எமது சேவைக்காலத்தில் சேவையாற்றிய கணித ஆசிரியர்களுள் கடமை, கண்ணியம், பொறுமை, அமைதி என்பவற்றைத் தன்னகத்தே கொண்ட குறிப்பிடத்தக்க ஒருவர் திருமதி சத்தியபாமா சிவகுமாரன் ஆவரார். மாணவர் நிலையறிந்து அதற்கேற்பக் கற்பித்தலில் வல்லவர். பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணியை மிகவும் பொறுமையாகச் செய்து பின்னர் பிரதம பரீட்சகராக கடமையாற்றி ஆசிரியர்களிடையே மிகுந்த நன்மதிப்பைப் பெற்றவர். செயலமர்வுகளில் தனது ஆழ்ந்த அறிவை சக ஆசிரியர்களுடன் பகிர்ந்து வினாத்தாள்கள் தயாரிப்பதில் மிகவும் சிறப்பாகச் செயற்படுவார். அவரின் ஓய்வு காலம் சிறப்பாக அமைய எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவாராக.

திரு. பா. இராஜசேகரன்,
முன்னாள் கணித ஆசிரிய ஆலோசகர்,
வலயக்கல்வி அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

# தெளிவானதும் உறுதியானதும் நம்பிக்கைக்குரிய பணியாளர்



அன்பும் பண்பும் அடக்கமும் அமைதியும் தன்னகத்தே கொண்டு, சிறப்பார்ந்த கணித ஆசிரியையாகவும், பகுதித் தலைவராகவும், உப அதிபராகவும், அக்கல்லூரியிலே தன்னலமற்ற சேவையாற்றிய திருமதி சத்தியபாமா சிவகுமாரன் அவர்களுக்கு அறுபதாண்டு சேவை நிறைவில் மனமுவந்த மணிவிழா வாழ்த்துக்களை சொரிவதிலே அளவற்ற ஆனந்தம் அடைகின்றேன்.

அவரது சேவைக் காலத்தை எனது பணியில் இரண்டு கட்டங்களாக பிரித்துப் பார்க்க வேண்டியவனாகின்றேன். நான் ஆசிரியராக கல்லூரிக்குச் செல்லும் போது அவர் சிறந்த கணித ஆசிரியையாக சேவையாற்றிக் கொண்டிருந்ததோடு அங்கு கற்கும் மாணவர்களை மிகவும் தாய்மை உணர்வுடன் கருத்தூன்றிக் கற்பிப்பதிலே அதிக கவனம் செலுத்துபவராகவும் இருந்து வந்துள்ளார். எந்தப் பாடசாலை மாணவர்களையும் விட இங்கு விடுதியில் தங்கியிருந்து கற்கும் மாணவர்களின் தேவைகள் அதிக அளவில் மாறுபட்டவையாக இருந்த காரணத்தால் அவர்களை அன்பு கூர்ந்து தாய்மை உணர்வுடன் கற்பிக்க வேண்டிய தேவை நிறைவாகக் காணப்பட்டமையைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். ஏனைய பாடங்களைப் போல் அல்லாமல் கணித பாடம் என்பது பாகற்காய் போன்று துவர்ப்பாக இருந்த வேளையில் இவரது கற்பித்தல் பாங்கு இருவேறு நிலைகளையும் வென்றெடுத்ததாக அமைந்திருந்தமையை பாராட்டாமல் இருக்க முடியாது. அந்தவகையில் சிறந்த ஆசிரியத்துவத்தை அக்கல்லூரியில் வெளிப்படுத்திய ஓர் ஆசிரியை என்பது நோக்காக அமைகின்றது.

அக்கல்லூரியிலே பல்வேறு ஆசிரியக் குழுக்கள் தமது நலன் சார்ந்த விடயங்களிலே இயங்கி வந்த போதெல்லாம் எவ்வித வேறுபாடுகளையும் காட்டிக்கொள்ளாமல் அந்நியோன்னியமாகத் தனது பணியை ஆற்றி இயைவுபட்டுச் சென்றமை அனைத்து ஆசிரியர்களின் கௌரவத்திற்கும் உரியவராக மதிப்பளித்திருந்தமையும் இன்னொரு நோக்காகக் கருத முடியும். மேலும் கல்லூரிச் சமூக நிலைகளுக்குள் பகுத்தாய்ந்து பணியாற்றியமையால் தனது நீள் சேவையை மதிப்புடன் ஆற்றி நிறைவு செய்வதற்கு வழிவகுத்தது எனலாம். அத்துடன் ஐந்திற்கும் மேற்பட்ட அதிபர்களின் கீழ் ஆற்றிய சேவையின் அடிப்படையில் பார்க்குமிடத்து நிர்வாக ரீதியில் தெளிவானதும் உறுதியானதும்

வழிவகுத்தது எனலாம். அத்துடன் ஐந்திற்கும் மேற்பட்ட அதிபர்களின் கீழ் ஆற்றிய சேவையின் அடிப்படையில் பார்க்குமிடத்து நிர்வாக ரீதியில் தெளிவானதும் உறுதியானதும் நம்பிக்கைகுரியதுமான நிறைவான பணிகளைப் புரிந்துள்ளார். சகல அதிபர்களின் பாராட்டிற்குரியவராகவே போற்றப்பட்டிருக்கின்றார். பாடசாலை இயக்கத்தின் மூலமாக விளங்கும் நேரசூசியை தயாரித்தல் தொட்டு பல்வேறு கருமங்களிலும் நிர்வாத்திற்கு உறுதுணையாக இருந்துள்ளார். எனவே தான் அவரோடு சக ஆசிரியராகப் பணியாற்றிய காலகட்டத்தையும், அதிபராகவும் கடமையாற்றிய காலகட்டத்திலும் நிறைகுடமாகவும் விளக்கொளியாகவுமே அவரது காட்சிப்புலம் விளங்கியிருக்கின்றது.

சலனமற்ற அமைதியான பண்பும் நடத்தையும் அவர் இருக்கின்றாரா? என்பதை வெளிக்காட்டாமலே பணிகள் நிறைவாகப் பெருகியிருக்கின்றன. சூழலோடு ஒத்திசைவாக இயங்கிச் செல்கின்ற உன்னதமான இவரின் பாங்கினை இப்போது ஆசிரியசேவையில் இருப்பவர்கள் உள்வாங்கிக் கொள்வார்களாயின் முரண்பாடுகளற்ற இணக்கத்துடன் கூடிய சமூக ஒட்டுறவு பெருகும் என்பது எனது கருத்து. ஒருவனின் வாழ்க்கை அல்லது சேவை மற்றவர்களுக்கு புரிந்துணர்வை விளைவிக்குமாயின் அத்தகு வாழ்வியலில் அல்லது பணியில் தனது அன்புப் பண்பாட்டின் மூலம் விளக்கம் தந்த திருமதி சத்தியபாமா சிவகுமாரன் அவர்களும் முன்னுதாரண புருஷராக விளங்கி இன்று வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் பெற்றுக்கொள்கின்றார்கள் அந்தப் பெருமையில் அவரோடு இணைந்து *பணியாற்றிய காலகட்டத்தை நினைவிருத்தி பெருமகிழ்ச்சியுடன்* ஓய்வுகாலம் குடும்ப நலத்துடனும் சிறப்புடனும் நிதமும் மகிழ்ச்சி பொங்க வாழ்ந்திட இறைவனை இறைஞ்சி நிற்கின்றேன்.

திரு. வே. ஞானகாந்தன்,
அதிபர்,
யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி.

## வாழ்த்துச் செய்தி

ஆசிரிய சேவையினை நிறைவாக பூர்த்தி செய்து ஓய்வு பெறுகின்ற திருமதி. சத்தியபாமா சிவகுமாரன் அவர்களின் சேவையை கௌரவிக்கும் முகமாக வெளிவரும் மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வு அடைகின்றேன்.

முப்பத்தெட்டு வருட ஆசிரிய சேவையில் கற்பித்தலுடன் பாடசாலை முகாமைத்துவ கடமைகள் மற்றும் பதில் அதிபர், பிரதி அதிபர் போன்ற பொறுப்புகளையும் சிறப்பாக மேற்கொண்டமை பாராட்டுதற்குரியது. மேலும் சிறந்த பண்புகளைத் தன்னகத்தே கொண்ட ஆசிரியை அவர்களின் மணிவிழா சிறப்பாக நடைபெறவும் சேவையின் பாராட்டுகளைத் தாங்கி வரும் மலர் இனிது வெளிவரவும் எனது வாழ்த்துகளைத் தெரிவிக்கின்றேன்.

திருமதி. கௌ. பரந்தாமன்,
அதிபர்,
யா/ கல்வியங்காடு இந்து தமிழ் கலவன் பாடசாலை.

# வாழ்த்துச் செய்தி



38 வருடங்களாக கல்விப்பணியாற்றி இளைப்பாற உள்ள திருமதி சத்தியபாமா சிவகுமாரன் அவர்களின் மணிவிழா நிகழ்வின் போது வெளியிடப்பட உள்ள மணிவிழா மலருக்கு வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

கணித ஆசிரியராக பல்வேறு பாடசாலைகளில் மாணவர்களுக்கு பிரச்சினைகளுக்கு தீர்வுகாண வழிகாணும் இப்பாடத்தை மிகவும் எளிய முறையில் கற்பித்தோடு மட்டுமல்லாமல் எமது யா/ முத்துத்தம்பி மகாவித்தியாயத்தில் ஆசிரியராகப் பணிபுரியும் காலத்தில் நிர்வாகக் கடமைகளில் ஈடுபட்டு சிறப்பாக செயற்பட்ட இவர், பின்னர் பிரதிஅதிபர் பதவியில் அமர்த்தப்பட்ட பின்பும் கற்பித்தற் பணியில் சோர்வடையவில்லை. பாடசாலை ஆசிரியர் குழாத்துடன் நிர்வாக ரீதியில் ஒருபோதும் மனமுறிவின்றி பொறுமையுடன் செயற்பட்டுள்ளார். பாடசாலை அதிபர் இடம் மாற்றலாகிச் சென்ற போதும் மனச்சோர்வின்றி பதில் அதிபராகக் கடமையாற்றி பாடசாலையின் கல்விப்பணிக்கு பெரிதும் பணியாற்றியுள்ளதை அறிந்து பேருவகை கொள்கின்றேன்.

எந்தவொரு செயலையும் செய்து முடிப்போரின் பெருந்திறமை பிறருக்கு பணிந்து நடப்பதேயாகும். அப்பணிவே பகைவரைப் பணிய வைக்கும் படைக்கருவியாகும் எனும் வள்ளுவனின் கூற்றுக்கமைவாக பணிவைப் பண்பாகக் கொண்டு சாதனைகள் பல புரிந்த திருமதி சத்தியபாமா சிவகுமாரனின் ஓய்வுகாலம் இனிதாகவும் மகிழ்ச்சிகரமாகவும் குடும்பத்தினருடன் இணைந்து அமைய எல்லாம் வல்ல ஓடயம்பதி கற்பக விநாயகரை வேண்டி எனது வாழ்த்துச் செய்தியை நிறைவு செய்து விடைபெறுகின்றேன்.

திரு. க. சுந்தரகாந்தன்,
ஓய்வுநிலை பிரதிஅதிபர்,
யா/ முத்துத்தம்பி மகா வித்தியாலயம்.

# மணிவிழா நாயகிக்கு வாழ்த்து



திருமதி சத்தியபாமா சிவகுமாரன் மணிவிழாக் காணும் செய்தி மகிழ்ச்சியளிக்கிறது. தமது சேவைக் காலத்தில் 30 ஆண்டுகளை முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தில் கழித்த இந்நல்லாசிரியை மிக முக்கிய பாடமாகிய கணிதத்தை சிறப்புறக் கற்பித்துப் பேரெடுத்தவர்.


நகர்ப்புற முன்னணிக் கல்லூரிகளில் கற்பிப்பதை விட கிராமப் புறச் சூழலில் கற்பிப்பது சவால் மிக்கது. அதுவும் பலவித பாதிப்புக்களுக்கும் உள்ளான பிள்ளைகளைப் பயிற்சித் தேர்வுகளில் தேர்ச்சி காணச் செய்வது சிரம சாத்தியமான பணி.

அந்த நற்பணியை அர்ப்பணிப்புடன் செய்த சத்தியபாமாவுக்கு முத்துத்தம்பி மகா வித்தியாலய சமூகம் பெரிதும் கடமைப்பட்டுள்ளது.

இந்நல்லாசிரியை தமது ஓய்வு ஆரோக்கியமாக, மகிழ்ச்சியாக கழிக்க இறையருள் முன்னிற்பதாக!

திரு. சோ. பத்மநாதன்,
தலைவர்,
சைவவித்தியா விருத்திச் சங்கம்,
திருநெல்வேலி.

# வாழ்த்துச் செய்தி



இன்று அகவை அறுபதில் தடம் பதித்து மணிவிழா காணும் எனது உற்ற நண்பி திருமதி சத்தியபாமா சிவகுமாரன் அவர்களை வாழ்த்துவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.


கல்விப் பாரம்பரியம் மிக்க குடும்பத்தில் பிறந்த ஆசிரியை ஆளுமை மிக்க கணித ஆசிரியராகவும் உப அதிபராகவும் தனது சேவையை ஆற்றியுள்ளார். இளம் வயதிலேயே ஆசிரியப்பணியில் இணைந்த ஆசிரியை 38 வருடங்கள் சிறப்பாக தனது பணியை ஆற்றி இன்று ஓய்வு பெறுகின்றார். 38 வருட சேவையில் 30 வருடங்கள் யா/ முத்துத்தம்பி மகா வித்தியாலயத்துக்கு அரும்பணியாற்றியுள்ளார்.

அன்பு, அமைதி, சாந்தம் ஆகிய சீரிய பண்புகள் நிரம்பப்பெற்றவர் ஆசிரியை. கற்பித்தலுடன் நிர்வாகத்திறனும் பெற்ற ஆசிரியர் தமது பணியை அர்ப்பணிப்புடன் ஆற்றி யாவரினதும் பாராட்டுதல்களைப் பெற்றுள்ளார்.

இவர் ஓய்வு காலத்தில் தனது குடும்பத்தாருடன் இன்னலற்ற இன்பமான நீண்ட ஆயுளுடன் கூடிய வளமான வாழ்வு பெற எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துகின்றேன்.

திருமதி. ச. மகேஸ்வரன்,
ஓய்வு பெற்ற ஆசிரியை,
யா/ முத்துத்தம்பி மகா வித்தியாலயம்.

# மனமார்ந்த மணிவிழா வாழ்த்துக்கள்



யாழ் முத்துத்தம்பி மாகவித்தியாலயம் யாழ்ப்பாண சைவத் தமிழ்ச் சமூகத்திற்கு அளப்பரிய பணிகளை ஆற்றி வந்திருக்கிறது. நல்ல கல்விமான்களை உருவாக்கி, இச்சமூகத்தின் அசைவியக்கத்திற்கு பல்வேறு உந்துதல்களை ஏற்படுத்தியிருக்கிறது.

இவ்வித்தியாலயத்தின் வரலாற்றில் கடந்த முப்பது வருடங்களாக பணியாற்றி ஓய்வு பெற இருப்பவர் திருமதி சத்தியபாமா சிவகுமாரன் அவர்கள் ஆசிரியராய், பிரதி அதிபராய், அவரின் வகிபாகம் இவ்வித்தியாலய வளர்ச்சிக்கு உதவியுள்ளது எனில் அது மிகையாகாது. சிறந்த கணித ஆசிரியராக மாணவர்களால் அடையாளப்படுத்தப்படும் இவர் இன்முகத்துடன் அனைவருடனும் பேதமற்றுப் பழகும் இயல்பினர் என்பது யாவரும் அறிந்ததே.

ஆசிரியர் என்பவர் யார்? கல்வித் தகுதியோடு கற்பிக்கும்ஆற்றலும் உடையவர் ஆவார். மாணவர் தகுதி அறிந்து தன்னை அதற்கேற்ப தயார்ப்படுத்திப் பாடத்தோடு ஒழுக்கம் முதலான பண்புகளை அன்போடு போதிப்பவர் அப்பண்புகள் வெளிப்படத் தானும் வாழ்பவர். மாணவர்களுக்கு தாயாய், தந்தையாய், நண்பராய், நல்வழிகாட்டியாய், கண்டிப்பும், கனிவும் நிறைந்த ஆசானாய் இருத்தல் வேண்டும். இவ்வாறு இருப்பவர் நல்லாசிரியர்.

திருமதி சத்தியபாமா சிவகுமாரன் அவர்களிடம் இவ்வளவும் இருக்கிறது. உள்ளத்தில் உண்மையொளியும் இருக்கிறது. நல்லாசிரியரான அவரது வாழ்வு மாணவர்களினது வாழ்த்துக்களால் என்றும் நிறைவுடையதாகவே அமையும். எமது இல்லக் குழந்தைகளையும் தன் குழந்தைகளாய்ப் பேணிய இப்பெருந்தகையின் உள்ளம் என்றும் போற்றுவதற்குரியது. தன் ஓய்வுக்காலத்தில் நோயற்ற வாழ்வும் நிறைவுற்ற செல்வமும் பெற்று நன்றேவாழ நாமும் வாழ்த்துகிறோம்.

திரு. தி.செல்வமனோகரன்,

செயலாளர்,

சைவவித்தியா விருத்திச்சங்கம்.

# நிறைகுடம் தளம்பாது

முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தில் முப்பது வருடங்கள் பணியாற்றிய மூத்த ஆசிரியை திருமதி சத்தியபாமா சிவகுமாரன் அவர்களை ஆசிரியர் கழகத்தின் சார்பில் வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

ஆசிரியர், பகுதித்தலைவர், பிரதி அதிபர், பதில் அதிபர் எனப் பல பதவிகளை எமது பாடசாலையில் வகித்துள்ளார். பதில் அதிபராகத் திறம்படச் சேவையாற்றினார். பொறுமைக்கு இலக்கணமாகத் திகழ்ந்தவர். எப்போதும் புன்முறுவல் பூத்த முகம். அதிபர் , ஆசிரியர்கள் , மாணவர்கள், ஊழியர்கள் அனைவருடனும் நல்லுறவை பேணிய சீமாட்டி.

ஏதாவது உதவி அல்லது ஆலோசனை கேட்டு நான் செல்லும் போதெல்லாம் தனது வேலையை இடையில் விட்டு, உடனடியாக எங்களுக்கு இன்முகத்துடன் உதவி செய்த "சிவகுமாரன் மிஸ்" ஐ என்றும் மறக்க மாட்டோம்.

அவரது ஓய்வு குடும்பத்தினருடன் சீரும் சிறப்புமாக வாழ எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

திரு. க. கதிரவேல்,<br>
தலைவர்,<br>
ஆசிரியர் நலன்புரிக் கழகம்,<br>
யா/ முத்துத்தம்பி மகா வித்தியாலயம்.

## மனமார்ந்த வாழ்த்துக்கள்

மணிவிழாக் காணும் மகத்தான பெருமைக்குரிய திருமதி சத்தியபாமா சிவகுமாரன் அவர்கள் 16.05.1977ம் ஆண்டு கல்விப் பணியில் காலடி எடுத்து வைத்தார். ஆரம்பக்கல்வியை யாழ் கந்தர்மடம் சைவப்பிரகாசா வித்தியாலயத்திலும் உயர்கல்வியை யாழ் வேம்படி மகளிர் கல்லூரியிலும் முடித்து சிறந்த கணித பாட ஆசிரியராக தனித்தடம் பதித்துக் கொண்டவர். அனைத்து மாணவர்களின் தேவையை அறிந்து கணித புலமையை மட்டுமன்றி நிர்வாக திறமையையும் அதனை சிறப்பாக நடாத்தும் ஆற்றலும் கொண்ட இவர் தனக்கே உரித்தான சிரிப்பை எந்நேரமும் வெளிப்படுத்தி தனது நிர்வாகத்தை திறம்பட ஆற்றி வந்தார். எல்லா ஆசிரியர்களுடனும் சரளமாக கதைத்தும் புன்முறுகல் செய்தும் ஆசிரியர்களின் தேவை அறிந்து சேவை ஆற்றும் உத்தமி. இவர் எமது பாடசாலையில் உப அதிபராக திகழ்வது சாலவும் சிறந்ததாகும் எதற்கும் சிரித்தபடி தலை அசைத்து எல்லோர் மனதையும் கொள்ளை கொண்டவர். இவர் தனது கல்வி நிர்வாக சேவைகளை 38 வருடகாலமாக ஆற்றி தற்போது அறுபதாவது வயதினிலே ஓய்வினைப் பெற்று செல்லும் எமது வித்தியாலயத்தின் பிரதி அதிபர் தொடர்ந்தும் சிரித்த முகத்துடன் தனது குடும்பசகிதம் பேரன் பேத்திகளுடன் கூடிக்குலாவி இருக்க எல்லாம் வல்ல கந்தப்பெருமானை வேண்டி அவர் பற்பல புகழ் பெற்று வையகத்தில் வளமுடன் வாழ்வதற்கு ஆசிரியக் கழகம் சார்பாக வாழ்த்துவதில் பெருமிதம் கொள்கிறேன்.

திரு. தி. ஸ்ரீசந்திரகுமார்,

செயலாளர்,

ஆசிரியர் நலன்புரிக் கழகம்,

யா/ முத்துத்தம்பி மகா வித்தியாலயம்.

# வாழ்த்துச் செய்தி

யா/முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தில் மிக நீண்ட காலம் ஆசிரியராக, பிரதி அதிபராக கடமையாற்றி இன்று மணிவிழா காணும் திருமதி சத்தியபாமா சிவகுமாரன் அவர்களை வாழ்த்துவதில் பெருமையடைகின்றேன்.

"கற்க மறுப்பவர் வாழ மறுப்பவர் !
என்றார் சுவாமி இராமகிருஷ்ணர்.
மனித வாழ்வின் மகத்தான ஆதாரம் கல்வி !
கல்விப்பணி கடவுட் பணி
கடந்த முப்பத்தெட்டு ஆண்டு காலமாக
எம் மண்ணின் பல ஆயிரம் மாணவர் வாழ்விற்கு
வழிகாட்டியவர் எம் ஆசான்.

அமைதியான தோற்றம், கடமை, கணீர் என்ற தொனி, அன்பான பேச்சு யாவரையும் அவர்பால் ஈர்த்திடும். மாணவர் மத்தியில் கணித பாடம் கடினமானது என்ற உணர்வினை நீக்கி அனைவருக்கும் கணித பாடத்தினை தெட்டத் தெளிவாய்ப் புரிய வைப்பதில் அவருக்கு நிகர் யாருமில்லை.

மாணவர் மனதில் தனியிடம் பதித்த முன்மாதிரியான வழிகாட்டியான ஆசானாக அவரை நோக்கலாம். வினைத்திறனுள்ள பாடசாலை ஒன்றினை உருவாக்குவதற்காக தரமான கல்வியை வழங்குவதற்கான திட்டமிடலில் பங்கேற்று , அதிபருக்கு பக்கபலமாக இருந்து பிரதி அதிபர் பதவியை மிகத் திறம்பட ஆற்றிய ஆசானுக்கு பாடசாலை மணிவிழா மலரை வெளியிடுவது அவரின் சேவைக்கு தக்க சான்று .மாணவர்களின் அறிவுக் கண்ணை திறக்க அரும்பணியாற்றிய ஆசானின் ஓய்வுக்காலம் சிறக்கவும், நீண்ட ஆயுளுடன், எண்ணைப் போல் என்றும் இனிமையாக வாழ எல்லாம் வல்ல இறையருள் என்றும் கிடைக்க வேண்டும் என பிரார்த்திக்கிறேன்.

திருமதி கு. அசோக்குமார்
ஆசிரியர்,
யா/ கோப்பாய் தெற்கு றோ.க.த.பாசாலை

# அமைதியின் சொரூபமே!

ஏணிப்படிகளில் ஏற்றி வைத்த

ஏணிப்படிகளில் ................

அமைந்தபடி – அது

நீங்கள் !

ஏனெனில் நீங்கள்

என் கணித ஆசான்

அமைதியைக் கண்டதுண்டா?

ஆம்! நான் கண்டேன்

நம் கணித ஆசான்!

திருமதி சத்தியபாமா சிவகுமாரன்

எமக்கு வராதா அவர் அமைதி

பெறப்பட்ட நாட்களுண்டு

இல்லை ! இல்லை! பேராசை

பட்டநாட்களுமுண்டு.

ஆனாலும்,

அது தகுமா மஞ்சு?

என என்னை நானே

கேள்விகளும் பல கேட்டதுண்டு!

அது கிட்டாதென

வெட்டென மறந்த

தருணங்களைக் கூறவா?

அவர் மாணவியாய் இருந்த நான்

ஆசிரியராய் வந்த போது

உவகையுடன் வரவேற்ற

உத்தமியே நீவீர் வாழ்க !

திருமதி. கு. கிருஷ்னராஜ்,
ஆசிரியர்,
யா/ கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி

## முத்தான எம் அன்னை!

அன்பின் எம் அன்னையே! பெண்மையின் இலக்கணமே!
பண்பால் உயர்ந்தவரே! பாரினிலே நல்லன்பால் வளர்ந்தவரே!
பொறுமையின் பொக்கிஷமே! நற்சாதனையால் நம்மிடமே உறைந்தவரே!
முத்துத்தம்பியின் முத்தும் நீங்கள் தானம்மா!
எம் மாணவரின் சொத்தும் நீங்கள் தானம்மா!

உள்ளக்கமலமதை உத்தமமாய்க் கொண்டவரே..
தண்மொழியால் கரும்பு மொழி தந்தவரே! நல்லவரே!
நாம் அணுகுவதில் ஆற்றலுடமை நிகர்த்தவரே!
அறிவால் எம்மை ஆதரவாய் அரவணைத்தவரே!
தெம்பால் தெவிட்டாத மொழி பகர்ந்தவரே!
நல்லறத்தின் நல் ஆசான்! சொல் திறம்பாப் பேராசான்!

கடமைக் கணக்கில் கண்ணியம் கண்டவரே!
எம்பால் கருணையால் உம்பால் புண்ணியம் குடி கொண்டவரே!
பூமி நோகாத பொன் அடிகள் உம் வாழ்வில் எடுத்து வைத்தீர்!
புரிந்துணர்வில் பலர் மனதை வென்றெடுத்தீர்!

அன்னசத்திரத்தின் சரித்திர நாயகியே!
முத்துத்தம்பியின் மாணாக்கரின் கலங்கரை விளக்கமே!
நன்னெறி பேசி உறவாடி உள்ளங்களைக் கொள்ளை கொண்டவரே!
பண்பாட்டுத் திறனெல்லாம் உம் நடப்போடு பயில்கின்றவரே!

தோள் கொடுக்கும் தோழியும் இவரன்றோ
சக உதிரமாய் பாசமழை பொழியும் சோதரியும் இவரே தான்
சேயாய் எமை அணைத்து தாயாய் பரிவூட்டும் அன்னையும் இவரே தான்
பிரியாமல் விடை தந்தோம்! பிரியமானவரே! என்றென்றும் பிரிய மாட்டோம்
கடமையின் வீராங்கனையே! கலை வாணி வரங்கள் தந்தாள்!
உந்தனுக்கே கவி வடிக்கப் பெரும் பேறு பெற்றேன்!
சத்தியத்தின் தேவதையே! சாந்த சொரூபி!

சத்தியபாமா எனும் திருநாமம் நயக்க வாழ்ந்தவரே!'

தாயே! உங்கள் நல்வார்த்தை நன்னெறிகள் இசைக்கிறதே!

சீர் பெற்றுயர்ந்த சிவகுமாரன் ஆசிரியையின் நற்கரங்கள் நான் பொறித்தேன்

பல்திறனும் பதினாறு பேறதுவும் உம் வாழ்வில் பெற்றீர்!

சீருடனே சிறப்புடனே உம் குடும்பமதில் நல் வாழ்வு கண்டீர்!

நலமுடனே நம் ஆசான்! நல் அதிபர் பல்லாண்டு பல்லாண்டு வாழியவே!

செல்வி ஞா. திருஞானசம்பந்தன்,

ஆசிரியர்,

வழிகாட்டலும் ஆலோசனையும்,

யா/ முத்துத்தம்பி மகா வித்தியாலயம்.



2003 இல் அதிபர், ஆசிரியர்களுடன்



2014 இல் இல்ல மெய்வல்லுநர் போட்டி
மங்கல விளக்கேற்றலின் போது



ஆசிரியர் தினம் 2004



2003 இல் ஆசிரியர்களுடன்



2001 இல் ஆசிரியர் தினத்தின் போது



கணித, விஞ்ஞான மன்றத்தின் போது



நவராத்திரி விழா பரிசளிப்பின் போது



சக ஆசிரியையின் பிரிவுபசார விழாவின் போது

# மணிவிழா நாயகி திருமதி சத்தியபாமா சிவகுமாரன்

இந்துவின் முத்தான இலங்காபுரியின் நந்திக்கொடி ஓங்குபுகழ் யாழ் நகரின் வடபால் சைவமும் தமிழும் தழைத்தோங்கும் கந்தர்மடப்பதியில் அவ்வூரின் உயர்வழித் தோன்றலாகிய புகழ் பூத்த சித்த வைத்தியர் கந்தையா வம்சத்தில் திரு திருமதி திருநாவுக்கரசு மகேஸ்வரி தம்பதிகளின் மூன்று புதல்விகளுள் சிரேஷ்ட புதல்வியாக சத்தியபாமா அவர்கள் பிறந்தார். இவர்களது குடும்பம் பாரம்பரிய பண்பாட்டுப் பழக்க வழக்கங்களை மிக இறுக்கமாகப் பின்பற்றும் குடும்பத்தைச் சேர்ந்த இவரின் துணைவர் திரு. அருணாசலம் சிவகுமாரன் (ஓய்வுபெற்ற தொழில் உத்தியோகத்தர், யாழ் பல்கலைக்கழகம்) பிள்ளைகள் இரு புதல்விகள் அபிரா, சிவஜா. மூத்த புதல்வி திருமதி அபிரா திவாகரன் விவசாய விஞ்ஞானப்பட்டதாரி தொழில்நுட்ப உத்தியோகத்தராக தொழல் திணைக்களத்தில் உள்ளார். இளைய புதல்வி சிவஜா கலைப்பட்டதாரி யா/ சுண்டிக்குளி மகளிர் கல்லூரி ஆசிரியராக உள்ளார்.

இத்தகைய பெருமைமிக்க குடும்பத்தில் பிறந்த இவர் தனது ஆரம்பக்கல்வியை யா/ கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயத்திலும், இடைநிலை, உயர்கல்வியை யா/ வேம்படி மகளிர் பாடசாலையிலும் பெற்றுக் கொண்டார். பாடசாலைக் கல்வியை நிறைவு செய்த பின்னர் 1977.05.16 யா/ முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தில் கணித பாட ஆசிரியராக தனது முதல் ஆசிரியப் பணியை ஆரம்பித்தார். கடமையைப் பொறுப்பேற்றதில் இருந்து பாடசாலையின் வளர்ச்சிக்காக பல்வேறு படிநிலைகளிலும் தன்னை அர்ப்பணித்து பணியாற்றியவர் என்றால் மிகையாகாது.

இன்று போல் அன்றும் மாணவர்களுக்குக் கணித பாடம் சிக்கல் நிறைந்தொன்றாக விளங்கியது. இந்நிலையில் மாணவர்களிடம் கணித பாடம் தொடர்பாக இருந்த பயத்தை நீக்கியவர். பலர் உயர்தர வகுப்புகளில் கற்பதற்கு கணித பாடச் சித்தியின்மை தடையாக இருந்தது. அத்தடையைத் தனது கற்பித்தல் அணுகுமுறையால் அகற்றினார். இதனால் அதிகமான மாணவர்கள் கணித பாடத்தில் சித்தியடைந்து உயர்தரத்தில் கல்வி கற்கக் கூடியதாக இருந்தது. கணித பாடத்தில் சித்தி எய்துவதன் மூலம் பலருக்கு உயர்கல்வி வாய்ப்பு என்ற ஏணிப்படிகளில் ஏறுவதற்கு முதற்படியாக உழைத்தவர். இதனை அவரிடம் கல்வி கற்ற அனைவரும் பெருமையுடன் நினைவு கூறுவர். பயிற்சி , மீட்டல் பயிற்சி, தொடர் பயிற்சி என்பன மாணவர்கள் பரீட்சையில் வெற்றி பெறுவதற்கான வழிகள் என்பதை கண்டறிந்து அவர்களிடம் இவற்றை ஊக்குவித்துள்ளார். இற்றைக்கு 38 வருடங்களுக்கு முன்பே தனது

கற்பித்தலில் இத்தகைய நுட்பங்களைக் கையாண்டுள்ளார். இவ்வழியில் நன்மை பெற்றவர்கள் பல ஆயிரக்கணக்கான மாணவர்கள் ஆவார்.

"அன்னயாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்"

எனும் பாரதியின் வாக்கை மெய்ப்பித்துப் பெருமைப்படுத்தும் வகையில் இவர் அரும்பணியாற்றியவர் என்றால் அது மிகையாகாது.

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்னும் மூன்று தாரக மந்திரங்களையும் பின்பற்றி ஆளுமை மிக்க ஆசிரியராகச் செயற்பட்ட இவர் 2012.04.05 இல் பிரதி அதிபராக நியமிக்கப்பட்டார். தனது கடமையையும் பொறுப்பையும் சரியாக உணர்ந்து செயற்பட்ட காலத்தின் தேவைகளையும் சமூகத்தின் தேவையையும் உணர்ந்து துரிதமாக செயற்படல், தெளிவான பேச்சு, மனிதநேயப்பண்பு, தளராத மனம், பிறரைக் கௌரவித்தல், தூரநோக்கு சிந்தனைகள் என்பன நிர்வாகப்பணியிலே இவரின் அணிகலன்களாக விளங்கின.

தனது 38 வருட கால ஆசிரிய சேவையிலே 3 தசாப்த காலங்களை எமது பாடசாலையின் கல்விப் பணிக்காக அர்ப்பணித்துள்ளார். இது எமது பாடசாலை பெற்ற பெரும்பேறு என்றே குறிப்பிட வேண்டும்.

சேவை விபரம்

| | |
|---|---|
| முதல் நியமனம்: | 1977.05.16 |
| யா/ முத்துத்தம்பி மகா வித்தியாயம் | 1977.05.16 – 1980.01.20 |
| பலாலி ஆசிரிய கலாசாலை | 1980.01.21 – 1982.12.31 |
| யா/ வேலணை சரஸ்வதி வித்தியாலயம் | 1983.01.01 – 1985.08.31 |
| யா/ முத்துத்தம்பி மகா வித்தியாயம் | 1985.09.01 – 2015.09.12 |

யா/ முத்துத்தம்பி மகா வித்தியாலய சேவை விபரம்

| | |
|---|---|
| ஆசிரியராக | 1977.05.16 – 1980.01.20 |
| | 1985.09.01 – 2008.01.04 |
| பகுதித் தலைவர் | 2008.01.05 – 2012.04.04 |
| பிரதி அதிபராக | 2012.04.05 – 2015.09.13 |

இவர் தனது 38 வருட கால ஆசிரிய சேவையிலே பல இணைபாடவிதானச் செயற்பாடுகளிலே சிறந்து விளங்கியுள்ளார். கணித மன்றப் பொறுப்பாசிரியராக, ஆசிரியர்

கழகத் தலைவராக, செயலாளராக, பாடசாலை அபிவிருத்திச் சங்கப் பொருளாளராக, விளையாட்டுக்கழகப் பதிவாளராக, இந்துமன்றப் பொறுப்பாசிரியராக இருந்து சிறந்த மாணவ சமுதாயம் ஒன்றை உருவாக்கிய பெருமைக்குரியவர் ஆவார்.

சிறந்த இறைபக்தி நிறைந்த இவர் எல்லோருக்கும் உதவ வேண்டும் என்ற நேரிய சிந்தனை உடையவர். மாணவர்களின் நிலையறிந்து அவர்களுக்கு பல்வேறு வழிகளிலும் உதவிகளை வழங்கி அவர்களின் கற்றற் செயற்பாடுகளுக்கு உதவியவர். தனது மாணாக்கர் மீது மாறாத அன்பும் அக்கறையும் கொண்டவர். பாடசாலைக்கல்வி, நிர்வாகப் பணியோடு கல்விப் புலம் சார்ந்த ஏனைய சேவைகளை செய்வதற்கும் இவர் என்றும் பின்னிற்பதில்லை.

க.பொ.த சாதாரண தர விடைத்தாள் மதிப்பீட்டுப் பணியிலே பிரதம பரீட்சகராக இருந்து செவ்வனே பணியாற்றியிருக்கின்றார். இவர் தான் முதல் நியமனம் பெற்ற பாடசாலையிலேயே பிரதி அதிபராக உயர்வு பெற்று மணிவிழாக்காணும் பாக்கியம் பெற்றிருப்பது ஸ்ரீ வெங்கடேசவரதராஜப் பெருமாள் அருளிய பெரும் பேறாகும். எல்லோருக்கும் இவ்வாறான சந்தர்ப்பம் கிடைப்பது மிக அரிது. இந்தப் பேறு இவருக்குக் கிடைத்திருக்கின்றது.

இவர் கல்விப் பணியில் இருந்து ஓய்வு பெற்றாலும் இவருடைய சமூகப்பணிகள் தொடரவும் அவர் தனது குடும்பத்தாருடன் சிறந்த உடல் உள ஆரோக்கியத்துடன் நீண்ட காலம் வாழவும் எல்லாம் வல்ல இறைவனின் அருளாட்சி கிடைப்பதாக.

திருமதி. வை. கனகராஜா,
பகுதித் தலைவர் (10 -11),
யா/ முத்துத்தம்பி மகா வித்தியாலயம்.

# நம்பிக்கை

வாழ்க்கை என்னும் சக்கரம்
நம்பிக்கையில் தான் சுழல்கிறது
யானைக்கு தும்பிக்கை போல
மனிதனுக்கு நம்பிக்கை
மனதில் கவலை இருந்தாலும்
உதட்டில் சிரிப்பிருக்கவேண்டும்

இறைவன் இருக்கிறார்என்பதுநம்பிக்கைபோல
மனிதர்களது வாழ்க்கையிலும் நம்பிக்கை வேண்டும்
எதையும் நம்பவேண்டும் என்றல்ல வாழ்க்கைக்குத்
தேவையானதை மட்டும் நம்ப வேண்டும்

பசுமையான நினைவுகளில்
நீண்டு பரந்திருக்கும் கபடமற்ற சிரிப்புடன்
கல்வி கற்பித்த காலங்களில்
வட்டமிட்டு திரிந்தகாலம் சொல்லிவிட முடியாது
உளம் உவந்த பள்ளிக்காலம்
மீண்டும் இனிவராத இனிமைக் காலங்கள்
மீட்டிப் பார்க்க வல்ல மெல்லிய வைரங்கள்
அனைத்துமே பசுமரத்தாணி போல

பாசம் மிக்க நட்புடனே
கவலை என்றால் முகம் புதைக்க
இன்று நாம் மகிழும் காலங்கள்
இன்றைய நிஜங்கள் அனைத்தும்
நாளைய நினைவுகளாக?
நெஞ்சு வலிக்கிறது.
நம்பிக்கை தான் வாழ்க்கை

திருமதி. இ. மகேஸ்வரநாதன்,
பகுதித்தலைவர் (1-5),
யா/ முத்துத்தம்பி மகா வித்தியாலயம்.

# அன்பில் சில வரிகள்

அகவை அறுபதில் அகமகிழும் எம் ஆசானே
அகமே வெண்மையின் உறைவிடமாய்
அவதரித்தீர் இவ்வுலகில் அகல் விளக்காய்
ஆனந்தமாய் வாழ வாழ்த்துகின்றேன் இந்நாளில்

கண்டிருப்பீர் பணியில் திறமை வந்ததோ
வென்றீர் அவையெல்லாம் ஏணிப்படிகளாய்
பதித்தீர் உம் பாதம் முப்பது ஆண்டுகள் முத்துத்தம்பியில்
பதிந்தன அவையெல்லாம் அழியாய்ச் சின்னமாய்

பெறுமையால் திறமை வந்ததோ?
திறமையால் பொறுமை வந்ததோ?
பொறுமையும் திறமையும் சேர்ந்தே?
செயல் மிகு ஆளுமை வந்ததோ

அற்புதம் நிறைந்த பணியை
அழகுற அமைத்துக் கொள்ள
அறிவை நீர் விருத்தி செய்தீர்
அனைவரும் வியந்து நிற்க!

வாழ்க வாழ்க வையகம் போற்றிட
வளமுடன் நீரும் வாழ்ந்திடுக!
மன மகிழ்வுடனே மதிப்பாலுயர்ந்து
மாண்புடன் நீரும் வாழ்ந்திடுக!

வாழ்க நின் சேவை! வாழ்க நின் கீர்த்தி!
வாழிய வாழியவே!

திருமதி . ச.துரைரட்ணம்,
ஆசிரியர்,
யா/ முத்துத்தம்பி மகா வித்தியாலயம்.



2015 இல் வீதி ஓட்டத்தில் வெற்றி பெற்றவர்களுக்கு
வெற்றிக் கிண்ணங்கள் வழங்கும் போது



2013 இல் இல்ல மெய்வல்லுநர்
போட்டியில் சான்றிதழ் போது



2015 முத்தமிழ் விழாவில் விருந்தினரை
அழைத்து வரும் போது



2014 இல் ஆசிரியர் தினத்தில்
மங்கல விளக்கேற்றலின் போது



2015 இல் தைப் பொங்கல் தினத்தின் போது



பாடசாலை சரஸ்வதி சிலையின் அருகில்




2015 இல் முத்தமிழ் விழா



அதிபர், பழைய மாணவர் சங்க
உறுப்பினர்களுடன்

# நிறைவான பணியை நினைந்து....



உள்ளத்தை உள்ளவாறே உறுதி பட எடுத்தியம்பும்
கள்ளமில் உள்ளத்தவர் கல்வியாளர் - என்றும்
நல்வார்த்தை கூறி நயமுடன் உறவாடிடும்
நல் உள்ளத்தவர் நீங்கள்

கற்ற கல்வியினைப் பாங்காய் மாணவர்க்கு
தெட்டத்தெளிவாக்குவதில் கை தேர்ந்தவர்
வற்றாத உம் அறிவுமாணவர்,
ஏற்றமுடன் வாழ வழியமைத்தது

எண்ணறிவு நமது கண்ணுக்கு நிகர் என
கனிவாய் எடுத்தியம்பி கணிதமதை
மகிழ்வாய் கற்றிட வழிகாட்டி
எம்மவர் கண்ணிற்கு ஒளியூட்டினீர்
அமைதியின் சொரூபமே சக ஆசிரியையே
உம் ஓய்வுக் காலமது உவப்பாய் அமைந்திட
உளமார வாழ்த்தி உவகையடைகின்றேன்.

திருமதி. கு. யசோதா
ஆசிரியர்,
யா/ கனகரத்தினம் மகா வித்தியாலயம்.

# பழைய மாணவர் சங்க செயலாளர்களின் எண்ணத்திலிருந்து .........

யாழ்/ முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கத்தின் செயலாளர் என்ற வகையில் "சத்தியோதயம்" என்ற மணிவிழாச் சிறப்பு மலரை யாழ் முத்துத்தம்பி மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கம் வெளியிடுவதில் பெரும் மகிழ்வடைகின்றோம்.

யாழ்/ முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்கமானது கடந்த கால கட்டங்களில் பாடசாலையின் பல்வேறு அபிவிருத்திச் செயற்பாடுகளிலும் தனது கணிசமாக பங்களிப்பினை வழங்கி வந்தது. ஆனாலும் கடந்த ஒரு சில வருடங்களில் ஏற்பட்ட சிறு தடங்கல்கள் மற்றும் தளர்வுகள் காரணமாக தனது செயற்பாடுகளை தொடர முடியாத நிலை காணப்பட்டது. எனினும் தற்போதைய பாடசாலை அதிபர் மற்றும் பழைய மாணவர்களின் பெரு முயற்சியால் கடந்த 20.06.2015 அன்று பழைய மாணவர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் இடம் பெற்று நடப்பாண்டுக்கான நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டது.

அந்தவகையில் எமது பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்திக் நடப்பாண்டுக்கான முதலாவது செயற்பாடாக எமது பாடசாலையின் முன்னாள் கணித பாட ஆசிரியரும் தற்போதைய பிரதி அதிபரும் ஆன திருமதி சத்தியபாமா சிவகுமாரன் அவர்களின் மணிவிழாவினை சிறப்பிக்கும் முகமாக "சத்தியோதயம்" என்னும் மணிவிழாச் சிறப்பு மலரினை வெளியிடுகினறோம்.

திருமதி சத்தியபாமா சிவகுமாரன் அவர்களின் கல்விச்சேவை மிகவும் பாராட்டப்படக் கூடியது. அவரின் மாணவர்கள் என்ற வகையில் அவரிடம் கல்வி கற்ற அனுபவங்கள் எம் வாழ்விலும் மிக முக்கியமான பசுமையான நினைவுகள் ஆகும். இவர் மிக நீண்ட காலமாக யாழ்/ முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தில் கணித பாட ஆசிரியராக இருந்து திறமையும் ஆளுமையும் மிக்க பல்வேறு மாணவச் செல்வங்களை உருவாக்கியவர் ஆவார். அது

மட்டுமன்றி தனது சேவையினது இறுதி வருடங்களை எமது பாடசாலையின் பிரதி அதிபராக இருந்து நிர்வாகச் செயற்பாடுகளை திறம்பட நடாத்தியவர்.

எனவே இத்தகைய அளப்பரிய சேவையினை ஆற்றிய திருமதி சத்தியபாமா சிவகுமாரன் அவர்களை கௌரவிக்கும் முகமாக இன்று (13.09.2015) நடைபெறகின்ற மணிவிழாவில் அவரின் கடந்த கால பதிவுகளையும் தாங்கிவரும் இவ' சத்தியோதயம் மணிவிழாச் சிறப்பு மலரினை வெளியிடுவதில் யாழ்/ முத்துத்தம்பி மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கம் பெரும் மகிழ்வடைகின்றது.

மேலும் இந்நூல் உருவாக்கம் பெறுவதற்கான பல்வேறு ஆக்கங்களினை தந்துதவிய அனைவருக்கும் எமது மனம் நிறைந்த நனடறிகள்.அத்தோடு இம் மலரினை நூல் உருவாக்கம் செய்து வெளியிட நிதி உதவி புரிந்த பாடசாலையின் பழைய மாணவர்கள், வர்த்தக நண்பர்கள், நலன்விரும்பிகள் மற்றும் பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசாரா உத்தியோகத்தர்கள், கல்வி சாரா உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் எமது நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி

திரு. மு. விஜிதரன், திரு.இ. பாலமுரளி
இணைச் செயலாளர்கள்,
பழைய மாணவர் சங்கம்,
யா/ முத்துத்தம்பி மகா வித்தியாலயம்.

# மனமார வாழ்த்துகின்றேன்

ஆசிரிய சேவைக்கு இலக்கணம் வகுத்த ஆசிரியப் பெருந்தகைக்கு இந்நாளில் நன்றிகளையும் வாழ்த்துக்களையும் வழங்குவதில் உவகை கொள்கின்றேன்.

“ஆசிரியராகிய நாம் எவ்வாறு செயலாற்ற வேண்டும்” எவ்வாறு வாழ வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்கி வழிகாட்டியவர் திருமதி சிவகுமாரன் அவர்கள். இவர் ஆசிரியத்துவத்தின் பண்புகளான சேவை, உண்மை, நேர்மை என்பவற்றுடன் வாழ்ந்து கல்விச் சமூகத்தினரின் மனங்களில் இடம் பிடித்துள்ளார்.

மேலும் எனது ஆசிரியப்பணியில் பல சவால்கள், தடைகள், இடர்கள் வந்த போதெல்லாம் நல் ஆலோசகராக, நல் ஆசிரியராக, நல்ல தாயாக இருந்து வழிகாட்டி எனது பணி சிறக்க உதவிகள் செய்தமையை இட்டு உளமார நன்றிகள் பாராட்டுக்கள் கூறுவதுடன் எனக்கு மட்டுமன்றி தனது சேவைக்காலத்தில் யா/ முத்தத்தம்பி மகா வித்தியாலயத்தில் பல சேவைகளை வழங்கியுள்ளார் என்றால் மிகையாகாது.

மேலும் இவர் ஓய்வுகால வேளையில் தனது குடும்பத்தினருடன் சகல சௌபாக்கியங்களையும் பெற்று மகிழ்வுடன் வாழ எல்லாம் வல்ல பரம்பொருளாம் ஆஞ்சநேயப்பெருமானையும் சக்தியையும் வேண்டி வாழ்த்துகின்றேன்.

திரு. இ. ஜெயகரன்,
ஆசிரியர்,
யா/ முத்துத்தம்பி மகா வித்தியாலயம்.

# வேண்டுகோள்

பூமியில்,

பெற்றோர்க்கு மகவாய்
உற்றோர்க்கு உறவாய்
சத்திய சிருஷ்டியாய்
பா(வை)மா வலம் வந்தீர்
பல கலைகள் கற்று
பண்புடனே வளர்ந்தீர்

தொழிலில்

கணித ஆசிரியரானீர்
பணிதனில் பலருக்கு வழிகாட்டினீர்
இனியது இத்தொழில் என்று பிறர்
இயம்பிட ஓர் நெறி கூறினீர்
பிரதி அதிபராய் உயர்ந்து நின்றீர்.

பாடசாலையில்,

அவனியில் ஆயிரம் பாடசாலைகள் - ஆனால்
உமக்கென இருப்பது இப்பாடசாலை
பாடசாலைகளால் சிறப்புற்ற ஆசிரியர்கள் பலர்
உம்மைப் போன்ற ஆசிரியர்களால் சிறப்புற்றது இப்பாடசாலை
மூன்று தசாப்தமாய் முன்னின்றுழைந்தீர்
சான்றுபகரும் மாணவரே சாட்சி
அர்ப்பணித்தீர் உம் சேவையை இங்கு
ஆலமரமாய் விழுதுகள் கோடி
உம்மைத் தாங்கும் கூடி - இன்று

இல் வாழ்க்கையில்

சிவமைந்தனைத் துணையாகக் கொண்டீர்
சிறப்புடனே வளம் பல பெற வாழ்ந்தீர்
இரு மகளைத் திருமகளாய் பெற்றீர்
அபிராவாக சிவஜாயாக கண்டு மனம் குளிர்ந்தீர்
மருமகனாய் "திவர்த் தேடினீர்
மணவாழ்க்கை புனைந்தீர் மூத்தவளுக்கு — நற்
குணமதனை கொண்டொழுகி
குலம் போற்ற நலம் காக்க — பேரக்
குழந்தை யதுவின் மழலை கேட்டீர்

சேவையில்

ஓய்வென்பதை உமதகராதியிலிருந்து
எடுத்து விடுவீர் - ஏனெனில்
முத்துவின் முத்துக்கள் ஆரமாய் மிளிர
உங்கள் ஆதரவு தேவை — அதை
அள்ளி வழங்கும் தருணம்
ஆழ் கடலாய் பரந் (பார்த்) திருக்கு இங்கு
நிறை வேற்றும் தகுதியும் கடப்பாடும்
மற்றவர்களை விட
குறைவேதும் இன்றி உமக்குண்டு

இவ்வாண்டில்

அகவை அறுபது கண்டீர்
தெளிந்த நல் அனுபவம் கொண்டீர்
சூரியக் கதிராய் ஒளிவீசி — முத்துவின்
மைந்தர்கள் முழுநிலவாய் ஒளிர்ந்திட
ஆற்றிய சேவையில் அகம் மகிழ்ந்து
போற்றியே உம் புகழ் பாடுகின்றோம்

இம்முத்தின்

வெண் முத்து நீவிர்
மழைத் துளியாய் கருணை பொழிந்து
ஏழைக் குழந்தைகளின் இருளைக் களைந்து
நாளை உலகை வென்றிடவே
தோள் கொடுத்து துணையிருந்தீர்

முத்துவின் பாதையில் தடம் பதித்த
மணி விழா நாயகி
திருமதி சத்தியபாமா சிவகுமாரனின்
பணி நயந்து வாழ்த்தி மனம் நிறைகின்றேன்.

திருமதி. க. கபிலன்,
ஆசிரியர்,
யா/ முத்துத்தம்பி மகா வித்தியாலயம்.

# கலங்கரை விளக்கு

முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தில்
புத்தொளி பரப்பிய — ஆசிரியை
நற்பண்பு கமழ்கின்ற நறுமலராய்
ஆசிரியத்துவத்தின் கலங்கலைர விளக்காய்
பிரதி அதிபராகி ஆசிரியர்க்கெல்லாம்
உயரிய அன்னையானீர்கள்

பாடசாலை வாழ்க்கை என்பது
பட்டாம் பூச்சியாய் பறந்து திரிவது
பாடும் மாணவர் குழாத்தை
பக்குவமாய் பதப்படுத்தி பாரினிலே உயரச்செய்து
ஏணியாய் வழி சமைத்த வழிகாட்டியே
எண்ணிய கருமமும் எடுத்தகாரியமும்

திண்ணிய நெஞ்சுடன் முடித்தீர்கள்
சீரிய நெறிதனை சிந்தையில் பரப்ப
சிரித்த முகத்துடன் பழகினீர்கள்
கற்றிடக்கற்றிட ஊறிடும்
கணிதத்தை கவினுடன் ஊட்டினீர்கள்
பொறுமை எனும் பொக்கிசத்தை
போதித்தே வழிநடந்தீர்கள்
அறிவெனும் சுடர் பரப்பி
அன்பெனும் நெறிகாட்டி
நல்லொழுக்கம் நன்னெறிகளை
நல்க வழிகாட்டினீர்கள்

மாணவர்க்கு மட்டுமல்ல — ஆசிரியர்
எம்மத்தியிலும் தூண்டா விளக்கானீர்
வானத்தில் நட்சத்திரமாய் நாமிருக்க
வானில் நடுவே தண்மதியாய்

ஒளிதந்தீர்!

பெற்றோர்க்கும் உற்றோர்க்கும்

பெருமையாக ஆலவிருட்சம் ஆனவரே - உம்.

விழுதுகளெல்லாம் கிளை பரப்பி

உலகெங்கும்

வியாபித்து நிற்க வழிசெய்தீரே

உங்கள் சேவை தனைக்கண்டு

ஊர்மக்கள் போற்றினரே!

நாம் பெற்ற பெரும் பேறே

தம்மை வாழ்த்திட வாய்த்தநிலை

இனிய நினைவுதனை சுமந்த நிலையோடு

இதயம் நிறைந்தே வாழ்த்துகிறேன்

எல்லா நலன்களும் பெற்று

ஒய்வு நிலையிலும் சிறந்திடுக.

செல்வி. அ. நளாயினி,

ஆசிரியர்,

யா/ முத்துத்தம்பி மகா வித்தியாலயம்.

# ஆசிரியத்துவத்திலிருந்து..............

"அன்னசத்திரமாயிரம் அமைத்தல்.........யாவினும் புண்ணியங்கோடி ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்......" என்பதற்கு இணங்க ஆசிரியப்பணியின் மேன்மை விளங்குகின்றது. ஆசிரியர் என்பவர் மனித உயிரினங்களின் வழிகாட்டி மாணவர்களை சிறந்த வழியில் ஆற்றுப்படுத்தி உயர்ந்த பண்புகளைக் கொண்ட நற்பிரஜையாக்குவது என்னும் பாரிய பொறுப்புக்குள்ளானவர். தனிமனிதனிலிருந்து சமூகம் தழுவிய நல்ல விழுமியங்களை உருவாக்கி நற்பண்பாடு கலாச்சார பழக்க வழக்கங்களை மதிக்கின்ற மனிதனை வளர்த்தெடுப்பது மிக எளிதான காரியமல்ல இத்தகைய தன்னிகரற்ற பணியை செவ்வனே செய்பவர் ஆசிரியர் எம்மால் போற்றப்படும் ஐங்குரவர்களில் இறைவனுக்கு அடுத்தபடியாக திகழ்பவரும் ஆசிரியர் தான்.

எனவே சமூகத்தின் முதுகெலும்பாக ஆசிரியர் இருப்பதோடு முன்மாதிரியாகவும் திகழுகின்றார் இன்றைய பூவுலகில் பிறந்த அனைத்துக் குழந்தைகளும் ஆசிரியத்துவத்தின் வழிகாட்டலின் கீழ் வளர்ந்தவர்கள். வளர்ந்து வருபவர்கள் அவ்வளவு உன்னதமானதும் கடினமானதுமான பணி ஆசிரியப்பணி. மானிட உயிரினங்களின் உள்ளத்தில் இடம்பிடித்து அவர்களை நன்னெறியில் ஆற்றுப்படுத்தி நற்பிரசை என்னும் உயர்நிலைக்கு கொண்டு வருபவர் ஆசிரியர் ஆசிரியத்துவத்தின் மகத்துவத்தை மதித்து உயர்ந்தவர்கள் பலர் உயராதவர் சிலர். எனினும் மனிதப்பண்புகள் நிறைந்த ஒரு குடிமகன் நல்லாசிரியத்துவத்திலிருந்து உருவாக்கப்படுகின்றான் என்பது தான் நியதி இந்த வகையில் இன்று மணிவிழாக் காணும் எம்ஆசானும் நிறைவான ஆசிரியத்துவப்பணியை இவ்வித்தியாலயத்திற்கு ஆற்றியிருக்கின்றார் என்பதற்கு இந்நிகழ்வு சான்றாகும். வித்தியாலய மாணவர்களின் உடல், உள அறிவுத் தேவைகளை இனங்கண்டு பூர்த்தி செய்தமையால் தம்மனம் குளிர அவரை வாழ்த்துகின்றனர். மாணவர் மட்டுமன்றி சமூகத்துடன் சிறந்த தொடர்பாடலுடையவராக விளங்கியவர் என்பதற்கு அவர்களின் சூழல் பின்னணிகளை இனங்கண்டு செயலாற்றியமை சான்றாகிறது.

பாடசாலையில் நிர்வாக செயற்பாடுகளிலும் சரி தனது கல்வி செயற்பாடுகளிலும் சரி தனது ஏனைய பணிகளையும் ஒதுக்கிவிட்டு கடமையில் கண்ணும் கருத்துமாக செயற்பட்டார். ஆசிரிய உறவுகளில் மிகுந்த அன்புடன் நேரிய மனமும் கொண்டு அவர்களின் தேவைகளை மிகுந்த விருப்பத்துடன் நிறைவேற்றினார் உருவு கண்டு எள்ளாமை வேண்டும் என்பதற்கேற்ப தனது சிறிய உருவுக்குள் எவ்வளவு நற்குணங்களை உள்ளடக்க முடியுமோ

அவ்வளவையும் உள்ளடக்கி பாடசாலையின் ஒளிச்சுடராக விளங்கினார். இவரது சேவையை நாம் இன்னும் பெறமுடியவில்லை என்று வருந்தும் அளவிற்கு ஆசிரிய உலகம் கவலைப்படுகின்றது.

இருப்பினும் ஓய்வுநிலை என்பது அனைத்து அரச ஊழியர்களுக்கும் சொந்தமானது. ஓய்வாகவும் இருக்க வேண்டும் என்ற நியதியில் அவரது வாழ்நாட்காலம் நலன்கள் நிறைந்ததாகவும் அவரது குடும்பம் மகிழ்ச்சியுடன் வாழவும் இறைவனின் நல்லாசிகள் என்றும் கிடைக்குக.

திருமதி. சி. றோய்நேசராஜா,
ஆசிரியர்,
யா/ முத்துத்தம்பி மகா வித்தியாலயம்.

## நினைவழியாத நாட்கள்

முப்பது ஆண்டுகள் முழுவதுமாய் சேவை
பார் போற்ற வாழ்ந்திட்ட புண்ணியவதியே
வயதில்லை என்றாலும் வாழ்த்துகின்றேன்
வாழ்த்தி வணங்குகின்றேன்.

அற்புதமோ சிவனருளோ! .......
முன்செய்த தவப் பயனோ! தவப்
ஏதும் அறிந்திலேன் ..................
உம்மிடத்தே தந்தவரை
உமைத்தேடி வந்தவரை
அன்பு மொழி வார்த்தைகளால்
ஆரத்தழுவி அன்போடு முத்தமிட்டு
நேசக்கரம் நீட்டி நின்றவரே
பாசப் பிணைப்புக்குள் கட்டுண்டோம்
திமிற முடியவில்லை ............

கனக்கக் கணக்குகளை
கணக்கு கணக்காய் தந்து
கணக்காய் முதுகிலே தட்டித் தந்ததினால்
கணக்கு விட முடியவில்லை உமக்கு ....
முழுவதுமாய் ஜீரணித்தோம்.
.................... ஆதலால் ................
அதோ பாரும்
அப்பன் சுப்பன் சுந்தரனின் பிள்ளைகளை ..........
நம்ப முடியவில்லை முழுதும் உண்மை

ஏதிலர் வாழ்வு செழித்திடவே
எதிலும் முன்னின்று உழைத்தவரே
தோணியாய் கரை சேர்க்க
துடுப்பாய் நின்று உழைத்தவரே

துடிப்பாய் நின்று உழைத்தனையே
தலை வணங்குகின்றோம் நின் பணிக்காய் ..........
யார்க்கும் இனியனாய்
சேவையில் கண்ணியமாய்
என்றும் இருந்தனையே
உம் நினைவைச் சுமப்பதனால்
நெஞ்சம் கனப்பதில்லை
வஞ்சப் புகழ்ச்சியில்லை
வாயார வாழ்த்துகிறேன்.

ஆசிரியத்துள் அதிகாரியாயிருந்தும்
உம் குளிர் முகத்தில் ஒரு நாளும் சினமறியோம்
ஆசிரியம் நீர் ஆசிரியத்துள் நீர்
சாந்த சொரூபியே பொன்மனச் செம்மலே
நீவீர் வாழ்க! வாழ்க!!
பல்லாண்டுகள் இன்னும் அதிகமாய் ......................

திரு. வ. தயாநிதி,
ஆசிரியர்,
யா/ முத்துத்தம்பி மகா வித்தியாலயம்.

# முதுபெரும் ஆசானுக்கு மணிவிழா ......

கல்விக்கு கலங்கரை விளக்காகிய எம் ஆசானே!

மூன்று தசாப்தங்களாக அழியாக் கல்வி புகட்டிய சிகரமே!

கற்பித்தலையும், ஒழுக்க நெறியினையும் புகட்டிய கலங்கரை விளக்கே!

கல்வியே கண்ணெனத் துடித்து அரிய கல்வியை விதைத்த குருவே!

எமது ஆசிரிய சமூகத்திற்கு விடிவெள்ளியாய் திகழ்ந்த ஆசானே!

பாடசாலை வளர்ச்சியிலும், எழுச்சியிலும் தோள் நின்று உழைத்த விடி விளக்கே!

உங்கள் சேவையை நினைத்து

உள்ளம் பூரித்து உவகையுடன் வாழ்த்துகின்றேன்!

இறுதிவரை உங்கள் ஆசி எமக்கு கிடைக்க

இறையாசி உங்களுக்கு என்றும் கிட்ட

பல்லாண்டு காலம் சீரும் சிறப்பும் பெற்று வாழ வாழ்த்தி நிற்கின்றேன்.

திருமதி. கி. பிரசாந்தி,

பழைய மாணவி, ஆசிரியர்,

கிளி/முட்கொம்பன் அ.த.க பாடசாலை.

# அன்பும் பண்பும் நிறைந்த எங்கள் பிரதி அதிபர்

எல்லா நெஞ்சங்களையும் தன் அன்பாலும் பண்பாலும் ஆளுமையாலும் அரவணைத்து இன்று மணிவிழாக்காணும் எமது பிரதி அதிபர் திருமதி சத்தியபாமா சிவகுமாரன் அவர்களுடன் ஒன்றாகப் பணியாற்றும் வாய்ப்பை அளித்தமைக்காக இறைவனுக்கு நன்றி கூறுகின்றேன். எளிமையான சுபாவம்,எல்லோருடனும் நட்புறவுடன் பழகும் பண்பு, எந்த நேரமும் இன்முகத்துடன் காணப்படும் அவரின் குணப்பண்புகள், என அவரைப் பார்த்து முன்னுதாரணமாக கொள்ள வேண்டியவை ஏராளம்.

கணித பாடத்தை மிகக் கண்ணியமாக கற்பித்து மாணவருக்குத் துல்லியமாக விளக்கத்தை ஏற்படுத்தியதுடன் பிரதி அதிபராக நிர்வாகப் பணிகளை தனது அழகிய கைவண்ணத்தில் மிகவும் நிதானமாகவும் நேர்த்தியாகவும் நிறைவேற்றியவர். மேலும் அனைத்து ஆசிரியர்களையும் அரவணைத்து முகாமை செய்வதோடு சகல மாணவர்களையும் தாய் போல் அன்பால் அரவணைத்து வழிகாட்டும் ஆற்றலுடையவர்.

இவ்வாறாக எமது பாடசாலையில் 30 வருடங்களாக சேவையாற்றிய எமது பிரதி அதிபரைப் பாராட்டி அவருக்கு நன்றி தெரிவிக்க நாம் கடமைப்பட்டிருக்கிறோம். எம் பாடசாலை சமூகத்திற்கே தாயாக இருந்து வழிநடத்திய ஒரு நல்லவரை வாழ்த்துவதில் பெருமையடைகின்றேன். இவ்வாறாக தனது வாழ்வினை எமது பாடசாலைக்காகவே அர்ப்பணித்த எமது பிரதி அதிபர் அவரது குடும்பத்தாருடன் தனது ஓய்வுக்காலத்தை மிகவும் மகிழ்ச்சியாகவும் நிம்மதியாகவும் வாழ இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

திருமதி. சு. சிவஸ்ரீ
ஆசிரியர்,
யா/ முத்துத்தம்பி மகா வித்தியாலயம்.

# அமைதியின் உறைவிடம்

13.09.2015 அன்று மணிவிழாக் காணும் எமது
அன்புக்கும் மரியாதைக்கும் உரிய ஆசிரியர்
திருமதி சத்தியபாமா சிவகுமாரன் அவர்களிற்கு
நீண்ட காலம் நோய் நொடி இன்றி வாழ
எல்லாம் வல்ல பழங்கிணற்றடிப் பிள்ளையார்
அருள் வேண்டி இவ் வாழ்த்துச் செய்தி
வழங்குவதில் பெரும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

திருத்தலங்கள் சூழப் பெற்றதும் சைவசமயம்
கட்டி வளர்க்கப்பட்ட புண்ணிய பூமி திருநெல்வேலிப் பகுதியாகும்
இத் திருநெல்வேலியின் கண் கலாசாலை வீதியில்
அமையப்பெற்ற இந்து போட் ராஜரட்ணம் அவர்களினால்
கட்டி வளர்க்கப்பட்ட முத்துத்தம்பி மகா வித்தியாலயத்தில்
இந்து சமயமும் தமிழும் இன்றும் அழியாமல் பாதுகாக்கப்
பட்டு வரும் இவ்வித்தியாலயத்தில் சேவையாற்றிய
பெருமக்கள் இன்றும் உலகளாவிய ரீதியில்
வாழ்ந்து வருகிறார்கள் பண்டிதமணி சி. கணிபதிப்பிள்ளை
ஐயா அவர்களின் வழிப்படுத்தப்பட்ட சைவப் பாரம்பரிய
ஆசிரியர்களும் உருவாகிய இவ்விடத்திலே
சேவையாற்றுகின்ற பெருமையை பெற்றவர்களில்
மணிவிழா நாயகியும் பேறு பெற்றவர் ஆவார்.

முப்பத்தெட்டு ஆண்டுகளாய் ஆசிரியப் பணியாற்றி
மூன்று ஆண்டுகளிற்கு மேலாக பிரதி அதிபராகவும்
ஆறு மாதங்களாக பதிலதிபராகவும்
முத்துத்தம்பி மகா வித்தியாலயம் எனும் பாடசாலையில்
முதல் நியமனம் தொடக்கம் மணிவிழாக் காணும் வரை
சேவையாற்றிய பெருமைக்குரியவர்
மூன்று தசாப்த காலங்களிற்கு மேலாக
பல ஆயிரம் மாணவ சமூகங்களை உருவாக்கி

கணித பாடத்தினை ஐயம் திரிபுற கற்பித்து
பல ஆசிரியர்களையும் பல கல்விமான்களையும்
உருவாக்கிய பெருமை இவரையே சாரும்
இவரது காலத்தில் மாணவனாகக் கல்வி பயின்று
இன்று ஆசியராக பணியாற்றும் பேறு கிடைத்தமையை
இட்டு நாம் பெரும் பேறு பெற்றிருக்கின்றோம்.
இப் பெருமையும் மணிவிழா நாயகியையே சாரும்

"ஈன்ற பொழுதில் தன்மகனை சான்றோன்
எனக்கேட்ட தாய்" என்பதற்கிணங்க
அன்னையாய் அன்பிற்கினிய கணித பாட
ஆசிரியராய் பண்பிலே அமைதியின்
உறைவிடமாய் எம்மை யெல்லாம்
உயர்வடைய தலை தடவி நல்புத்திமதிகள் கூறி
இன்று ஆசிரியராக நாம் உயர்வடைய
வழிகாட்டிய ஆசிரிய பெருந்தகையாய்
இருந்தவர் எம் மணிவிழா நாயகி

இப் பாடசாலையின் அதிபர்களாகப் புகழ் பூத்த
திரு முத்துலிங்கம் திருமதி சிதம்பரநாதம்
பதிலதிபராக திரு. சுந்தரகாந்தன் அதிபராக
திரு. ஞானகாந்தன் அமரர் த. சிவராஜா
ஆகியோரது காலத்தில் கணித பாட ஆசிரியராகவும்
அதிபர் திரு. தி. சத்தியபாலன் காலத்தில் பிரதி அதிபராகவும்
ஆறு மாதங்கள் பதிலதிபராகவும், அதிபர் திரு பசுபதீஸ்வரன் காலத்தில்
பிரதியதிபராகவும் கடமையாற்றி
மணிவிழாக் காணும் நாயகியை
நாமும் வாழ்த்துவதுடன் அவர்களின் ஓய்வு
காலம் மேலும் சிறப்புற அமைய எல்லாம் வல்ல
இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.

என்றென்றும்
பழைய மாணவன், ஆசிரியர்,
திரு.க. துற்ஜெயந்தன்

# உறவும் பிரிவும்

பிரியாத விடை கேட்டுத்
தடுமாறுதே — நெஞ்சம்
பிரிவொன்றைத் தாங்காமல்
அலைமோதுதே

கானல் நீரைப் போலே
கண்ணில் நீர் வந்தது
காற்றில் வந்த
தூசி கண்ணில் திரை போட்டது

உறவுக்குள் பிரிவிருக்கும்
ஊருக்குள் பிரிவிருக்கும்
வாழ்ந்த நாள் ஒன்றாய்
வாழ்ந்த வெற்கெல்லாம்
பிரிவிருக்கும்

இன்முகம் காட்டும் உன்
சொற்களெல்லாம்
இனிதே பேசும் உன்
மொழிகளெல்லாம்
பணிவாய் அழைத்து
பணிவிடை கேட்குமுன்
பௌவியமான
செயல்கள் கண்டேன்

நீடிய காலம்
தேடிய உறவு நீர்
நீண்டதோர் வாழ்வில்
நிலவாய் இருந்தாய்
தாய் என்ற சொல்லிற்கு

குருவாய் இருந்தாய்
அறிவு தனையூட்டும்
அருமருந்தாய் இருந்தாய்

பிணியோடிருக்கும்
காலமெல்லாம்
பணிவோடு என்வாசல்
தேடிவந்தாய்
நன்மைகள் செய்திட
நாடி நின்றாய்
நாளும் பொழுதுமாய்
ஓடிவந்தாய்

வந்து துயர் கேட்கவும்
வாவென்றழைக்கவும்
வாடா மலர் இந்த உறவு
நாளும் நல்லதே பெற்றிட
நன்மைகள் செய்திடு சாமி
வாழ்க தமிழ் வளர்க குருகுலம்

திரு. ம. டோம்ராஜ்
பாடசாலைப் பணியாளர்,
யா/ முத்துத்தம்பி மகா வித்தியாலயம்.



2015 இல் அதிபர், ஆசிரியர்களுடன்



2014இல் அதிபர் ஆசிரியர்களுடன்



2004இல் சின்னம் சூட்டும் நிகழ்வின் போது



2014 இல் செயற்பட்டு மகிழ்வோம்
நிகழ்வின் போது




2014 இல் ஆசிரியர் தினத்தின் போது



தமிழறிவு வினாடிவினா வெற்றி பெற்ற
மாணவிகளுடன்



2015 இல் இல்ல மெய்வல்லுநர்
போட்டியின் போது



2015 இல் இல்ல மெய்வல்லுநர் போட்டியில்
சான்றிதழ் வழங்கும் போது

# எம் அன்னை

எமது பாடசாலையில் இன்று மணிவிழாவைக் காணும் பிரதி அதிபர் திருமதி சத்தியபாமா சிவகுமாரன் அம்மா அவர்கள் கணித பாட ஆசிரியராக 16.05.1977 ல் எமது வித்தியாலயத்தில் கால்தடம் பதித்துள்ளார். அவருடைய பணிக்காலம் முழுவதையும் எமது வித்தியாலயத்திற்கே ஒப்படைத்து எம் மாணவர்களின் கல்விப்பணியில் ஈடுபட்டு கணித பாடத்தை மிக விருப்புடன் கற்பித்தார். தனது விசேட பயிற்சிக்காக ஆசிரியர் கலாசாலைக்குச் சென்றும் எம் வித்தியாலய மாணவர்கள் மீது கொண்ட விருப்பின் காரணமாக மீண்டும் எமது பாடசாலைக்குச் தனது சேவைக் காலம் எல்லாம் அர்ப்பணித்தது மகிழ்ச்சியாகும்.

அன்றிலிருந்து தம் பணியைச் சிறப்புடனும் உற்சாகத்துடனும் ஆற்றி எமது மாணவர்களின் கணித அறிவுத்திறனை மிக அக்கறையுடன் வலுப்படுத்தினார். அன்றிலிருந்து ஒவ்வொரு மாணவர்களும் எம் ஆசானிடம் கல்வி கற்க முன்வந்தனர். கல்விச் செயற்பாடுகள் மட்டுமன்றி பாடசாலையில் நடைபெறுகின்ற நிகழ்வுகள், விழாக்கள் முதலியவற்றிலும் மாணவர்களுக்கு முன்மாதிரியாக வழிகாட்டிச் செயற்பட்டவர்.

பின்னர் பிரதி அதிபராக மிக விருப்பின்றி பொறுப்பேற்றாலும் மிகத்திறம்படச் செயற்பட்டவர். எமது பாடசாலைக்கு 01.02.2014 முதல் 15.05.2014 வரையான காலப்பகுதியில் எமது பாடசாலையை நிர்வகிக்கும் பெரும் பொறுப்பான அதிபராகவும் செயற்பட்டவர். எமது பாடசாலையின் இவ்வளவு பாரிய பொறுப்புக்களையும் சுமந்து எம்மையும் சுமந்து சிறந்த ஆசானாகவும் சிறந்த நிர்வாகியாகவும் சிறந்த தாயாகவும் விளங்கியவர் என்றால் மிகையாகாது. இவரது ஓய்வானது எம்மால் ஏற்க முடியாத ஒன்றாக இருந்தாலும் அரச நிர்வாக செயற்பாடுகளின் நியதிப்படி தவிர்க்க முடியாததும் ஒன்றாகும். எம் ஆசானின் ஓய்வுக்காலம் சிறப்பாகவும் மகிழ்வாகவும் அவரது குடும்பத்தினரும் சகல நலன்களும் பெற்று சிறப்பாக வாழ இறை அடியை பணிந்து வேண்டுகின்றேன்.

செல்வன். த. விஜிதரன்,<br>சிரேஷ்ட மாணவ தலைவன்,<br>யா/ முத்துத்தம்பி மகா வித்தியாலயம்.

# மனமார வாழ்த்துகிறேன்........

மணிவிழாக் காணும் ஆசிரியரே எங்கள்
பாடசாலையின் விடி வெள்ளியே
மாணவர் மனதில் பசுமரத்தாணியாய்
கல்விச் சிந்தனையைப் பகிர்ந்தவரே வாழ்க.

பள்ளி பருவத்தில் தடம்பதித்த மாணவர்கள் நாம்
பாசமுடன் கல்வி கற்றிடவே
அன்னை வடிவில் எமை அரவணைத்து
அறிவின் புகலிடமாய் நல் மாணக்கர்களாக
எமை உருவாக்கிட நாம்
பார் போற்ற உயர்ந்திடவே — வழிகாட்டிய
எம் அழகிய ஆசானே — உன்
புகழ்மொழி எட்டுத்திசையும் ஓங்கிட
வாழ்த்துகின்றோம்.

ஆசான் என்ற சொல்லுக்கு அடிநாதமா
அர்ப்பணித்த பெருந்தகையே!
அமைதியின் வடிவமாய் உருவெடுத்த
அன்பான ஆசிரியையே
எங்கு கண்டாலும் எளிமையாய்
எதிர் நின்றாலும் புன்சிரிப்பையே
ஆபரணங்களாக அணிந்து நிற்கும்
ஆலம் விழுதாக தாங்கி நிற்கும் திசை காட்டியே
கால மெல்லாம் கழிந்தாலும்
கடன் என்றும் தீராத, வற்றாத
கல்வி என்னும் கடலை கற்பித்து
எமையெல்லாம் கற்றதன்
பயனைத் தந்திட்ட தவச் செல்வமே
தரணியெங்கும் தலை நிமிர்த்தி

நடந்திட தலை வணங்குகின்றோம்.

60 வது வயதினில் மணிவிழா

நாயகியாய் - எம்

பாடசாலையில் விளங்கும் ஆசானே!

உம் அறிவுதனைக்கண்டு — எம்

பாடசாலை வியக்கிறது

கணித பாடந்தனை

மாணவர்க்குப் பக்குவமாய் விளங்க வைத்து — எம்

உயர்வு தனில் - தான்

அகமகிழ்ந்து பெருமை கொண்டு

எமக்கெல்லாம் நல்லறிவூட்டி

வழி நடத்துபவர் - பின்னர்

பிரதி அதிபராய் உயர்வு பெற்று - எம்

பாடசாலை உயர்வு பெற

அர்ப்பணிப்புடன் - தன்

பணிகளை திறம்படவே ஆற்றி

இன்று மணிவிழா நாயகியாய்

எம்முள் திகழ்பவரே — உம்

பணி சிறந்து நல்வாழ்வு பெற

இவ்வேளைதனில் உமை நாம்

வாழ்த்துகின்றோம்.

செல்வி. வி. குசலா,

கலைப்பீட மாணவி,

யாழ் பல்கலைக்கழகம்,

# மனமார்ந்த வாழ்த்துக்கள்

முத்துத்தம்பி மகாவித்தியாலயத்தில் 30 வருடங்களுக்கு மேல் கணித பாட ஆசிரியராக, பிரதி அதிபராக கடமையாற்றி ஓய்வு பெற்றுள்ள எமது ஆசிரியரான திருமதி. சத்தியபாமா. சிவகுமாரன் அவர்களுக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் பெருமிதமடைகின்றேன். இப் பாடசாலையில் நான் கல்வி பயின்ற காலத்தில் எனக்கு கணிதபாடத்தை கற்பித்த எனது ஆசிரியர் மிகவும் அன்பானவர் ஒவ்வொரு மாணவனையும் தன் பிள்ளை போன்று கண்காணித்து கற்பித்தவர். இவரிடத்தில் கோபத்தையும் கண்டிப்பையும் தடியெடுத்து எம்மை தண்டித்ததையும் எம் கல்விக் காலங்களில் கண்டதில்லை இவரிடம் கற்ற கணித கல்வி அறிவே இன்று எனக்கு என் தொழில் முன்னேற்றப் பாதையில் உதவி வருகின்றது. என் முன்னேற்றத்தில் பங்கு கொண்டமைக்காக நன்றி உள்ளவனாக என்றும் இருப்பேன் எமது ஆசிரியர் இன்று போல் என்றும் சிறந்த ஆரோக்கியத்துடனும் இறையருளுடன் கூடிய நீண்ட ஆயுளுடனும் வாழ இவருடைய இந்த 60வதாவது பிறந்ததினத்தில் வாழ்த்திநிற்கின்றேன்.

திரு.சு.யசிதரன்,

பழைய மாணவன்,

முத்துமாரிசட்டப்பொருள் உதிரிகள் வாணிபம்,

# பல்லாண்டு வாழ்க

பட்சிகள் பாட்டிசைக்க
பாரும் விழித்தெழ
புஸ்பங்கள் மணம் பரப்ப
பூமியர் மகிழ்ந்திட
புதுமை கதிர் பரப்பும்
கதிரோனாய் நீ உதித்தாய்!

கள்ளம் கபடமில்லா
கவலை சிறிதுமில்லா
குணம் குறையுமில்லா
குழப்பும் மனமுமில்லா
காண்டீபன் தனுசு எய்திடும்
கணையாய் நீ விரைந்தாய்

ஓடும் நதியும்
கூடும் முகிலும்
பாடும் குயிலும்
ஆடும் மயிலும்
உம் புகழ் பேச
உலகை எம்கையில் நீ தந்தாய்!

கண்டம் கடந்தும்
அண்டம் அளந்தும்
அறியும் ஞானம்தனை
எமக்குரைத்த மேதையாய்
எண்திசை போற்றும்
ஞானியாய் நீ சிறந்தாய்
அல்லலின் கண்படா ஆனந்தம் பெற்று
அகிலத்தார் யாவரும் போற்ற
அகவை அறுபது காணும்

அன்பாசானை வாழ்த்த

வார்த்தைகளின்றி தவிக்கும்

வஞ்சமற்ற மழலைகள் நாம்

நம் மாணாக்கர் - நாம் பொழியும்

வாழ்த்து மலர்ச் சொல் ஒன்றே!

வாழ்க! வாழ்க!

அறுபதும் கடந்து வாழ்க!

காண்க! காண்க

நூற்றாண்டு நீர் காண்க!

வாழ்க! வாழ்க!

பல்லாண்டு நீர் வாழ்க!

காண்க! காண்க!

இவ் வாழ்வில் இன்பங்களையே நீர் காண்க.

செல்வி. செ. சுமதி,

கலைப்பீட மாணவி,

பேராதனைப் பல்கலைக்கழகம்.



2014 இல் இல்ல மெய்வல்லுநர்
போட்டியில் மங்கல விளக்கேற்றும் போது



2015 இல் இல்ல மெய்வல்லுநர்
போட்டியில் மங்கல விளக்கேற்றும் போது



2014 இல் ஆசிரியர்களின் பிரவுபசார
விழாவின் போது



2014 இல் அழகியல் கண்காட்சியின் போது



2015 இல் முத்தமிழ் விழாவின் போது



அதிபர், பாடசாலை பணியாளர்களுடன்



2015 இல் நவராத்திரி விழாவின் போது



2014 இல் அழகியல் கண்காட்சி
மங்கல விளக்கேற்றலின் போது

# அன்பான வாழ்த்துக்கள்

எம் பள்ளியிலே
அன்பான ஓர் ஆசான்
அவர் தான் எமது ஆசானான
திருமதி ச. சிவகுமாரன்
தனது 60 வது வயதினிலே
மணிவிழாக் காண்கின்றார்.
அறிவாலே தன்னை அலங்கரித்து
ஆக்கபூர்வமாய் தன்
கடமைகளை நிறைவேற்றி
கணித ஆசானாய் நம்முன்னே
வலம் வந்தவர் - கணிதம்
எனும் வாழ்க்கைக் கணக்கை
கண்ணியமாய் எமக்கு ஊட்டி
தம் அறிவை வளப்படுத்தியது
மட்டுமன்றி — எம்
அறிவையும் தன்னறிவு போல்
வளப்படுத்த அயராது
பாடுபட்டவர் - இப்போது
எம் பள்ளியிலே பிரதி அதிபராய்
செம்மையுடன் தன் பணியை
செவ்வனே ஆற்றி
அனைவர் உள்ளத்தையும்
அன்பால் ஆட்கொண்டவர்
அமைதியின் உருவமாய்
அன்பின் வடிவமாய் அறிவின் உறைவிடமாய்
எம்முன்னே நடமாடி - இப்போ
மணிவிழா நாயகியாய் விளங்கும் - எம்
ஆசான் எல்லோர் ஆசியும்
இனிதாகப் பெற்று
நல்லதோர் வாழ்வு பெற்று
நலமுடன் வாழ்ந்திடவே — உம்
மாணவர்களாய் உம்மை நாம்
வாழ்த்திடுவோம்.

செல்வி. ரா. றஜீந்தினி.
பழைய மாணவி (A/L 2013)
யா/ முத்துத்தம்பி மகா வித்தியாலயம்.

# யாழ்ப்பாணப்பல்கலைகழகத்தின் உயர்பட்டப்படிப்புகள் பீடமும் எதிர்பார்ப்புக்களும் !

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஒன்பது பீடங்களுள் ஒன்றாக சமூகத்தினை உயர் கல்வியினூடாக முழுமையாக இணைக்கின்ற பீடமாக உயர்பட்டப்படிப்புகள் பீடம் 1999ம் ஆண்டில் தோற்றம் பெற்று பதினைந்து வருடங்களையும் தாண்டி தனது சேவைகளை இயன்றளவிற்கு ஆற்றி வருகின்றது என பெருமையுடன் கூறிக்கொள்ளலாம். ஆனாலும் இப்பீடத்தின் சேவைகள் எந்தளவிற்கு எம்மினிய உறவுகளிடம் சென்றிருக்கின்றது என்பதனை அறிய ஆவலாயுள்ளோம். அநேகமாக பல்வேறுபட்ட பணியிலுள்ளவர்களை உள்வாங்கும் பீடமாக இருப்பதனாலும் பலர் தமது பணியில் சிறந்து விளங்க, அறிவினை பெருக்கிக்கொள்ள, திறன்களை விருத்தி செய்ய இன்னும் உயர்பதவிகளுக்கு விண்ணப்பிக்க உயர் பட்டபடிப்புகள் பீடத்தில் இணைந்து பெற்றுக்கொள்ளும் உயர்கல்வி ஒருகாரணமாக இருப்பதனாலும் எமது பிரதேசத்து உயர்கல்வியினை முன்னெடுக்கும் முக்கியமான கல்விக்கூடமான யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஒரு பீடமாக உயர்ந்திருப்பதனாலும் எமது மக்களினுடைய கருத்துக்களுக்கும் மதிப்பளித்து உங்களின் கருத்துக்களையறிந்து மேலும் உயர்ந்தெழ இப்பீடம் தயாராகின்றது. இது பலர் இணைந்து அசைக்கின்ற கல்வித்தேராகும்.

வடகிழக்கு மற்றும் மேல் மாகாணங்களினது மக்களின் கல்வித்தேவைகளை பூர்த்திசெய்கின்ற உயர்கல்வி நிறுவனமாக திகழும் அதே நேரத்தில் எமது நாட்டின் பல பகுதிகளில் வாழும் அனைத்து மக்களுக்குமான உயர்கல்வி நிறுவனமுமாகும். எதுவிதமான பிரதேசவாதத்திற்கும் இடமளிக்க உயர் பட்டப்படிப்புகள் பீடம் இடங்கொடுக்காது என்பதனை இவ்விடத்தில் வலியுறுத்தி இங்கு உள்வாங்கப்படும் அனைத்து கற்கைநெறிகளையும் நிர்ணயிக்கும் குறித்த காலப்பிரமாணத்தை கருத்திற்கொண்டு கல்வியின் ஆராய்ச்சியின் தரத்தினை முக்கியத்துவப்படுத்தி குறிப்பாக இலங்கை கல்விக்கான தரக்கட்டுப்பாட்டினை முழுவதுமாக உள்வாங்கியதாக இப்பீடம் எதிர்காலத்தில் செயலாற்றும் என நிச்சயமாக எதிர்பார்க்கலாம். அதற்கான வழிவகைகளையும் ஆலோசனைகளையும் உங்களிடமிருந்தும் எதிர்பார்க்கின்றோம். உங்களது கருத்துக்களை, எண்ணங்களை இன்னும் ஆலோசனைகளை பீடாதிபதி, உயர்பட்டப்படிப்புகள்பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி என்னும் முகவரிக்கோ அல்லது fgsjaffna@yahoo.com என்னும் ஈ.மெயிலுக்கோ அனுப்பி வைக்கலாம்.

உயர்பட்டப் படிப்புகள் பீடத்தின் தற்போதய செயற்பாடுகளை www.jfn.ac.lk/gradvdனும் இணையத்தளத்தில் நீங்கள் அறிந்து கொள்ளலாம். இப்பீடத்தின் வளர்ச்சியில் பங்களித்த முன்னை நாள் பீடாதிபதிகளினது சேவையினையும் பீடவளர்ச்சிக்காக உழைத்த துணைவேந்தர்கள் அனைவரையும் இவ்விடத்தில் நினைவு கூர்ந்து அந்த வளர்ச்சியின் அடுத்த அத்தியாயத்தினுள். சேவையாற்ற எழுதும் இக்கைகளுக்கும் சிறியசந்தர்ப்பம் கிடைத்ததை நன்றியுடன் நினைந்து பீடத்தை வளர்ச்சியின் உயரிய பரிமாணத்தினுள் இழுத்து செல்ல முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன.

உலகளாவிய பல்கலைக்கழகங்களுடன் இணைப்பை ஏற்படுத்திக்கொள்ள உயர்பட்டப்படிப்புகள் பீடம் இருக்கின்ற அனைத்து வழிகளிலும் முயற்சிகளை எடுத்து முன்னகர்கின்றது. அதற்கான முயற்சியொன்று தற்போது எடுக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவின் மிச்சிகன் நகர பல்கலைக்கழகத்துடன்(MichiganState University)2011 இல் துணைவேந்தராயிருந்த பேராசிரியர் சண்முகலிங்கன் அவர்களுடன் விவசாய பீடத்தினை மையப்படுத்தி ஆரம்பிக்கப்பட்டஉயர்கல்விக்கான இணைப்பொன்றுவிரிவாக்கப்பட்டுஏனையபீடங்களுக்கானஉயர்கல்வி இணைப்பாகமாற்றம் பெற்றுரெக்ஸாஸ் மாநிலத்திலுள்ள ஹேஸ்ரன் (Houston)மற்றும் ரெக்ஸாஸ் (Texas) மற்றும் இலினொயிஸ்(Illinois) பல்கலைக்கழகங்களில் சிறப்பாகபணிபுரியும் எம்மவர்களின் இணைப்பையும் உள்வாங்கிஉடுக்கமுயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. உயர்பட்டபடிப்புகள் பீடத்தின் கற்கைகளுடன் உலகளாவியபல்கலைக்கழகங்களை இணைக்கும் முயற்சி அமெரிக்காவின் மிச்சிக்கன் பல்கலைக்கழகத்தின் புரிந்துணர்வு ஒப்பந்தத்துடன் ஆரம்பமாகியிருக்கின்றது. இவற்றுடன் ஹேஸ்ரனிலுள்ளஎம்.டி. அன்டர்சன் மருத்துவத்துறையில் சிறப்புக்குரியதும் இங்கு பணிபுரியும் புற்றுநோய் சிகிச்சையில் புகழ்வாய்ந்த பல ஆய்வாளர்களையும் துறைத்தலைவர்களுடனான இணைப்பும் முக்கியத்துவம் பெறுகின்றது. இங்கே உயிரியல் மருத்துவ விஞ்ஞானத்தில் (Biomedical Engineering) விஞ்ஞானியும் சிறந்த ஆய்வாளராயுமிருக்கும் கலாநிதி திவ்யநாதன் அவர்களின் மூலமான உயர்கல்வி வாய்ப்புக்களும் அதன் மூலமான ஆய்வுகளும் உயர்கல்விக்கு இன்னும் உரமூட்டும் எனலாம். எம்மவர்களால் குறிப்பாக பொறியியலாளர்களினால் உருவாக்கப்பட்டுள்ள CareforEducation நிறுவனம் பற்றியும் அதன் மூலம் எமது மாணவர்களுக்கு உயர்கல்விக்கான பயன்பாடுகளும் அதிகரித்துள்ளன எனலாம்.

யாழ்ப்பாணத்திலமைந்துள்ள இந்திய துணைத்தூதுவராய் உள்ளஶ்ரீ நடராஜன் அவர்களும் இந்தியாவின் தென்மாநில பல்கலைக்கழகங்களுடன் எமது பல்கலைக்கழகத்தை இணைத்து உயர்கல்வியை முன்னெடுக்க உதவியளிப்பதாக தெரிவித்திருப்பது உயர்பட்டப்படிப்புகள் பீடத்தினை இந்தியப்பல்கலைக்கழகங்களோடு இணைத்துக் கொள்ளவும் உலகளாவிய துறைசார் நிபுணர்களையும் கல்வியியலாளர்களையும் இணைத்து உயரிய கல்வியை வழங்க வாய்ப்புக்கள் கிடைத்துள்ளது எனலாம்.

தற்போது கல்வியியல் முதுகலைமாணி, சைவசிந்தாந்த முதுகலைமாணி மற்றும் தமிழில் முதுகலைமாணி ஆகிய கற்கைநெறிகள் வழங்கப்படுகின்றன. இவற்றை விட முதுதத்துவமாணி (ஆய்வினூடாக) மற்றும் கலாநிதி பட்டப்படிப்புக்களும் வழங்குவது நடைமுறையிலிருக்கின்றன. இவை பற்றிய விபரங்களை மேற்குறிப்பிட்ட இணைய தளத்திற்கு வருகை தந்து அறிந்துகொள்ளலாம். நீண்டகாலத்திற்குப் பின்பு வவுனியாவளாகத்தில் வவுனியா வளாக நிர்வாகத்தினுதவியுடன் கல்வியியல் முதுகலைமாணியினை மீண்டும் ஆரம்பிக்க விருக்கின்றது. இதனை விடஆங்கிலத்தில் உயர்கல்வி டிப்புளோமாவினையும் நடாத்துவதற்கு விண்ணப்பப்படிவங்கள் கோரப்பட்டுள்ளன. இதற்கு முன்னர் சூழலியல் முகாமைத்துவத்தில் முதுவிஞ்ஞானமாணி (M.Sc in Environmental Management) சுகாதாரமுகாமைத்துவத்தில் முதுவிஞ்ஞானமாணி (M.Scin Health Management) கற்கைநெறிகளையும் மீண்டும் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இக்கற்கை நெறிகளுக்குள் உள்வாங்கப்பட்ட முதலாவது அணிமாணவர்களின் கருத்துக்களை செவிமடுத்து தற்போது இவற்றுக்கான பாட அலகுகளில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படுகின்றன. விரைவில் மறுபரிசீலனை செய்யப்பட்ட மாற்றங்களுடனான பாடத்திட்டத்தை பீடத்தின் இணையத்தளத்தில் பார்க்கமுடியும். மேலும் மீண்டும் ஆரம்பிக்க இருக்கின்ற புதியகற்கைநெறிக்கான அறிவித்தல்கள் விரைவில் வெளியிடப்படும். இவை தவிர மேலதிகமாக எந்தகற்கைநெறியினை ஆரம்பிக்க வேண்டும் என்பதனை மக்களின் கருத்துக்களையும் உள்வாங்கி நடைமுறைப்படுத்தபீடம் முயற்சிக்கின்றது. இதுவரையிலும் நேரடியாகவும் கடிதமூலமாகவும் பலகருத்துக்கள் வந்தடைந்திருக்கின்றன. ஊடகவியலில், சித்தமருத்துவத்தில் மற்றும் சுற்றுலாத்துறையில் உயர்கல்வி டிப்புளோமாக்களினை ஆரம்பிக்க வேண்டுமென மக்களின் கருத்துக்கள் கிடைத்திருக்கின்றன. மக்களின் கருத்துக்கள் முழுமையாக உள்வாங்கப்பட்டு அவற்றை அடிப்படையாக கொண்டு முன்மொழியப்படுகின்ற கல்விநெறிக்கான திட்டமுன்மொழிவு பல்கலைக்கழக மூதவையின் சிபார்சில் பல்கலைக்கழக ஆணைக்குழுவினதும் உயர்கல்வி அமைச்சினதும் அனுமதியைப் பெற்று நடாத்துவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. கடந்த

ஆண்டு செப்டம்பர் மாதம் பலாலி வீதியிலுள்ள புதிய கட்டடத்தினுள் கால்பதித்துள்ள உயர்பட்டப்படிப்புகள் பீடம் விரைவில் மூன்றாவது மாடியினை முழுமை செய்து கருத்தரங்குகளை ஒழுங்கு செய்வதற்கு ஆயத்தமாகின்றது. இங்கே கல்விகற்கும் மாணவர்களினது ஆய்வு, பகுப்பாய்வுமற்றும் ஒப்புவித்தல் திறனை விருத்தி செய்வதற்கான வழிகளை தற்போது உள்வாங்க ஆயத்தமாகும் இப்பீடம் விரைவில் இதற்கான சிறந்த அடித்தளத்தை உருவாக்கிவிடும் என எண்ணலாம். மேலும் இங்கே வழங்கப்படுகின்ற கற்கைநெறிகள் இலங்கை தரப்படுத்தல் பொறிமுறைக்குள் முழுமையாக உள்வாங்கியே நடாத்தப்பட இருப்பதனால் இலங்கையிலுள்ள அனைத்து பல்கலைக்கழகங்களினதும் தரத்துக்கிணையாக இக்கற்கைநெறிகள் இருக்கும். 2015க்கான இலங்கைதரப்படுத்தல் பொறிமுறை பல்கலைக்கழகமானிய ஆணைக்குழுவினால் அனுமதிக்கப்பட்டுள்ளநிலையில் உயர்பட்டப்படிப்புகள் பீடத்தின் சட்டதிட்டங்களும் இதற்கமைவாக மாற்றியமைக்கப்பட்டு கற்கைநெறிகள் சிறந்ததரத்துடன் வழங்கப்படுவது உறுதி செய்யப்படும். அத்துடன் மாணவர்கள் தமது ஆய்வு கண்டுபிடிப்புக்களை பிரசுரிப்பதற்கான வாய்ப்பையும் அதற்கான அறிவுறுத்தல்களையும் பீடத்து சட்டதிட்டங்கள் வரையறை செய்துள்ளது. இது ஆய்வினை வெறுமனே செய்து அதற்கான கோவைகளினுள் மட்டுப்படுத்தாதுகருத்தரங்குகளில் ஒப்புவிப்பதற்கும் தரமான ஆய்வுசஞ்சிகைகளில் பிரசுரிப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிசெய்யும். துரமான கற்கைநெறிகளுடன் பீடம் மேலும் மெருகேற்றி சிறந்தபீடமாக விரைவில் பரிணமிக்கும் என்பதில் உறுதியாக இருக்கின்றது. மேலும் பீடத்தின் வளர்ச்சி அதற்குரிய நிலத்தேவையுடன் மட்டுப்படுத்தப்பட்டிருப்பது பல இடர்ப்பாடுகளை தோற்றியிருக்கின்றது. இப்பீடம் அமைந்திருக்கும் நிலப்பகுதியுடன் கூட இருக்கின்ற நிலப்பகுதி பீடத்திற்கு கிடைக்கப்பெறுமானால் இதற்காக கல்விமற்றும் வணிகசமூகமும் இன்னும் பெரியஉள்ளங்களும் முன்வருமானால் பீடத்துக்கெனசுற்றுச்சூழல் பாதுகாப்புபற்றியஆய்வுக்கெனஒருஆய்வு கூடத்தையும் உருவாக்கிஅதன் மூலம் எமதுமாணவர்களைசுற்றுச்சூழல் பற்றியஆய்வுகளைசெய்வதற்கு உலகளாவிய நிறுவனங்களுடன் இணையமுடியும். நல்ல உள்ளங்களின் நற்செயலை உதவியை உயர்பட்டபடிப்புகள் பீடம் எதிர்பார்த்திருக்கின்றது. இது உங்களுடைய உயர்கல்விப் பீடம். இது இச்சமூகத்தின் கல்விச்சொத்து. இதனை வளர்த்தெடுப்பதற்கு உங்கள் உதவியை நாடி நிற்கின்றோம். புதியஉயர்கற்கைநெறிகளினைநடாத்துவதற்குபரிந்துரைக்கும் போது ஆகக்குறைந்தது ஐம்பது மாணவர்களையாவது குறிப்பிட்ட கற்கைநெறி கொண்டிருத்தல் வேண்டும். ஆனால் செய்முறை வகுப்புக்களை உள்ளடக்கிய கற்கைநெறியாயின் அவற்றுக்கான காலநேர அளவுகள் கவனத்தில் எடுக்கப்பட்டே கற்கைநெறிக்காக மாணவர்கள் உள்வாங்கப்படுவர். குறிப்பாகMA in School Management, MA in Education Management,

M.Sc in Biosystem Technology, Postgraduate Diploma in Counseling என பல தரப்பட்ட கற்கைநெறிகள் இனங் காணப்பட்டுள்ள போதிலும் இவற்றைமுன்னெடுப்பதற்குஉங்களின் கருத்துக்களைஎதிர்பார்க்கின்றோம். உயர்கல்விக்கான சிறப்பானபொறிமுறையை உருவாக்கி எதிர்காலத்தில் உயர்பட்டப்படிப்புகள் பீடம் அனைத்து துறைகளிலும் உயர்பட்டப்படிப்பினை வழங்குவதற்கு அதீத முயற்சி மேற்கொண்டிருக்கின்றது என்பதனை மகிழ்வோடு தெரிவிப்பதோடு இப்பீடம் சமூகமயப்பட்டுள்ளதனால் சமூகத்தின் அங்கத்தவர்களது கருத்துக்களை செவிமடுத்து மேலும் உயர்வடைய எண்ணியிருக்கின்றது. உங்களது கருத்துக்களும் பரிந்துரைகளும் நிச்சயமாக உயர்பட்டப்படிப்புகள் பீடத்தின் வளர்ச்சிக்கு உந்துசக்தியாக இருக்கும்.

பேராசிரியர் கு.மிகுந்தன்
பீடாதிபதி
உயர்பட்டப்படிப்புகள் பீடம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

# வீரசைவமும் பஞ்சாசாரமும்

அறிமுகம்

சைவம் சிவனுடன் சம்பந்தமாகும் நெறியாகும். சைவசமயத்துக்கு நீண்டதொரு வரலாற்றுப் பாரம்பரியம் உண்டு. இற்றைக்கு ஐயாயிரமாண்டுகள் பழமையான வரலாற்றினைக் கொண்ட சைவசமயம், காலத்துக்குக் காலம் ஏற்பட்ட புறச் சூழல்களால் பல்வேறு மாறுதல்களினூடாக வளம்பெற்று நிலைபெற்றுள்ளது. இச்சிறப்பு வாய்ந்த சைவநெறியில் பாசுபதம்,காபாலிகம், வீரசைவம், மாவிரதம், பைரவம், சித்தாந்த சைவம், போன்றபலஉட்பிரிவுகள் காணப்படுகின்றன.

சைவ உட்பிரிவுகளில் வீரசைவம் ஒரு புரட்சி நெறியாகத் தோன்றிய சிறப்பிற்குரியது. சமயத்தை சமூகக் கண்ணோட்டத்துடன் உற்று நோக்கிய தன்மையில் இச்சமயத்தின் சீர்திருத்தம் அமையப்பெற்றுள்ளது. வீரசைவ சரணர்களின் வசனங்கள் இச்சமயசீர்திருத்தக் கருத்துக்களை தெளிவாக எடுத்தியம்புகின்றன. சைவசமயக் கொள்கைகளில் இருந்துவீரசைவக் கொள்கைகள் வேறுபட்டமைகின்றனஎன்பதனை உணர்த்துவதற்காகவே 'வீர' என்னும் அடைமொழி சேர்க்கப்பட்டிருப்பது நினைவிற்கொள்ளற்பாலதாகும்.

உலகச் சமயங்களில் சைவசமயத்தில் மட்டுமே வீரசைவம் என்றொரு வகையுண்டு. இங்கு வீரம் என்பது படைவீரம், ஆயுதவீரம், உடல் வீரம் அன்று. உள்ளத்துணர்வால் உந்தப்பட்ட ஆன்மீக வீரம், உள்ளத்து வீரம் என்பதேயாகும். சைவத்தவர் உள்ளத்தில் கொண்ட வீரத்தின் தன்மையால் அச்சமய நெறி வீரச்சமய நெறி எனப்பட்டது. இதுவே சைவ வீரமுமாகும். என்ற ஊரன் அடிகளின் கருத்து மனங்கொள்ளத்தக்கது.

திருக்கூட்டச் சிறப்பால் உணர்த்தப்படும் வீரமே 'வீரம்'ஆகும் என்பதனை சேக்கிழார்,

"ஆரம் கன்டிகை ஆடையுங் கந்தையே
பாரம் ஈசன் பணியலது ஒன்றிலர்
ஈர அன்பின் யாதும் குறைவிலர்
வீரம் என்னால் விளங்கும் தகையதோ"

என்று விளக்கியிருக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்..

சமய வளர்ச்சிக்குத் தடையாகசமூகத்தில்காணப்பட்ட சீர்கேடுகளை அல்லது சீரற்ற தன்மைகளைஉள்ளத்து வீரத்தால் எதிர்தெழுந்த சைவ உட்பிரிவாக 'வீரசைவம்' விளங்குகின்றது. வீரசைவ நெறியினை 'இலிங்காயத நெறி' என்றும் அழைப்பர். இந்நெறிக்குரியவர்கள் இலிங்காயதர், வீரமாகேஸ்வரர் என்று அழைக்கப்படுவர்.வீரசைவத்தின் தொன்மைச் சிறப்பு அச்சமயநெறி சார்ந்த மூல இலக்கியங்களிலே விளக்கப்பட்டுள்ளன. வீரசைவமரபு இருவகையினதாக எடுத்தாளப்படுகின்றது. தொன்மையான மரபு பஞ்சாசாரியார் மரபுவழிப்பட்டதாகவும், கி.பி பன்னிரெண்டாம் நூற்றாண்டில் ஏற்பட்ட வீரசைவ மறுமலர்ச்சி பசவமரபு சார்ந்தாகவும் அமைகின்றது.

சைவத்தின் தனிப் பிரிவாக விளங்கும் வீரசைவம் சமயம், தத்துவம்,மற்றும் சமூகக் கோட்பாடுகளையும், வழிபாட்டு முறைகளையும்,தன்னகத்தேகொண்டு விளங்குகிறது.

வீரசைவம் பொருள் விளக்கம்

வீரசைவம் என்ற சொல்லுக்கு அறிஞர்கள் பலரும் பலவாறு பொருள் விளக்கம் கண்டுள்ளனர். சைவ மதத்தில் இலிங்கதாரணஞ் செய்து கொள்ளும் சமயம் வீரசைவமாகும்என்று தமிழ் லெக்சிகன் (Tamil lexicon)விளக்கம் தருகிறது.

வீரம், சைவம் என்னும் இருசொற்களின் சேர்க்கையே வீரசைவமாகும். 'வீர' என்ற சப்தம் 'வித்யா' என்ற பொருளைக் குறிக்கின்றது. 'சிவனும் சீவனும் வேறல்ல'என்ற ஐக்கிய பாவத்தை உணர்த்தும் வித்தையை 'வீ' புலப்படுத்துகின்றது. 'ர' என்ற சொல்லுறுப்பு,'ரம்' என்ற தாதுவைக் குறிப்பது இதற்குத் 'துய்த்தல்' அல்லது 'மகிழ்தல்'என்பது பொருளாகும். முடிவாக,'சிவனும், சீவனும் வேறல்ல' என்னும் அந்நிய உணர்வில் திளைக்கும் சைவனை 'வீர' என்ற அடைச்சொல் உணர்த்தும்"[3]

வேதாந்தம் என்னும் உபநிடதங்களால் உண்டாகும் ஞானமே அரிய வித்தையாகும். அவ் வித்தையால் கலந்தவன் யாரோ (வீ –வித்தை ர- ரமிப்பவன்) அவன் வீரசைவனாவான்.[4] என்று, பேராம் இரேவணசித்தர் குறிப்பிடுகின்றார். இதனை அரண் செய்வதாக,

"அரிய வேதாந்தத்தினோடு ஞானமே
மருவரும் வித்தையென்றுரைப்பர் மற்றதில்
விரவினோன் யாவன் மற்றைனையன்வீரரென்
றுரைதரு கிற்பர் மெய்யுணர்ந்து ளோர்களே"[5]

எனவரும்சித்தாந்தசிகாமணிச் செய்யுள் அமைந்துள்ளது. மேலும்,

"தீதகன்ற சிவசீவஅயிக்கியமாம்
வீதரும்பெருவித்தையில்நன்குறச்
சாதமின்றி ரமிக்கும் அச்சைவன்மற்று
ஓதில் அன்னோன் உயர்வீர சைவனே"[6]

எனவரும் செய்யுட்கருத்தின் படி சிவனையும், சீவனையும், ஒன்றித்துணரும் நெறியே வீரசைவம் என்பது புலனாகும்.

வீரசைவ நெறியினை'நல்நெறி' என்றும்,'கற்புடைச் சைவம்' என்றும் சிவப்பிரகாசர் எடுத்தாள்கின்றார். சித்தாந்த சிகாமணி, பிரபு லிங்கலீலை போன்ற நூல்களில் இதன் விளக்கத்தை அவர் தெளிவுபடுத்தியுள்ளமை குறிப்பிடற்பாலதாகும்.

## வீரசைவத்தின் அடிப்படைகள்

ஆன்மீக நோக்கில் இன்பவியலை அடிப்படையாகக் கொண்டு கோட்பாடுகள் பலவற்றை வீரசைவம் உருவாக்கியிருக்கின்றது. மனித இனநலம் சார்ந்த வகையில் அத்தகைய கோட்பாடுகள் அச்சமய நெறியில் முக்கியம் பெறுகின்றன. மனித இனத்தின் துன்பங்களையும் துயரங்களையும் நீக்கி அல்லது குறைத்து இன்பவியல் தன்மைகளை அதிகரிப்பதனைமனித இனநலக் கோட்பாட்டின் (Humanism) அடிப்படைஎன்றுரைப்பர்.மனித இனநலக் கோட்பாடானது மதக்கோட்பாடாகவே தோன்றியது என சமூகவியலாளர்கள் எடுத்துரைப்பர்.ஆயினும், மதக்கோட்பாடாக மட்டுமன்றி சமூகக் கோட்பாடாகவும்மனித இனநலக் கோட்பாடுகருதப்படுகின்றது.

சமயம் என்பது சமூகம் சார்ந்ததாகவே இருந்து வருகின்றது. சமூகத்தில் உள்ள ஒரு நிறுவன அமைப்பே சமயமாகும். அவ்வமைப்பின் செயல்கள் யாவும் சமூகம் சார்ந்ததாக அமைவதுடன்சமூக மேம்பாட்டில் உச்சப் பங்காற்றுவதாகவும் விளங்குகின்றது. சமூகப் பிராணியான மனிதனின் தொடர்பாடல் ஊடகமாகவும் சமயம் என்னும் அமைப்பு உள்ளது. தனிமனிதனின் நடத்தைக் கோலங்களைத் தீர்மானிப்பதிலும் சமயத்தின் வகிபாகம் அளப்பரியது. சமூகத்தில் பொறுமை, இரக்கம்,அன்புநெறி,ஜீவகாருண்யம், கல்வி, கொல்லாமை, பொய்யாமை, விருந்தோம்பல், பொதுத்தொண்டு போன்ற அறப்பண்புகள் உருவாகி வளரவும், ஆரோக்கியமானசமூக வாழ்வினை நிலைப்படுத்தவும்சமயம் என்னும் அமைப்பு காரணமாக அமைகின்றது.

இந்து பிராமணீய சமூக அமைப்பு தனது முக்கிய அம்சங்களான சாதி அமைப்பு பரிசுத்தம், சமயம் சார்ந்த மந்திரங்கள், அவற்றோடு கூடிய சடங்குகள் என்பவற்றைக் கொண்டிருந்தது அதற்கு முற்றிலும் மாறாக லிங்காயத சமூகஅமைப்பு அதைப் போன்ற சமூகக் கட்டுப்பாடுகளில் இருந்து விடுவித்து மனிதனுக்கு சமூகப்,பொருளாதார, கலாசார,கட்டுப்பாடுகளில் போதிய சுதந்திரத்தையும், பாதுகாப்பையும், அளிக்கின்றது.[7] ஆகவே ஆரம்பகால இந்து சமூகத்தில் வேரூன்றியிருந்த பிராமணீயசமயம் சமூகத்தில் முரண்நிலைகளையும்,பாகுபாடுகளையும் ஏற்படுத்தியிருப்பதன் மூலம் இந்துசமூகக் கட்டமைப்பின் ஊடாட்டத்திற்கும், பிறசமய நெறிகள் உருவாகி வளரவும்வழிசமைத்தது எனலாம். இத்தகைய பின்புலத்தில் இந்துப்பிராமணீய சமயக் கட்டமைப்புக்களை எதிர்க்கும் முயற்சியுடன் வீரசைவம் சமூக நலனில் கருத்தூன்றிச் செயற்படும் நோக்குடன் மறுமலர்ச்சி கண்டிருந்தது என்பது கவனிக்கற்பாலதாகும்.

இதனடிப்படையில் சமூக வாழ்வின் நிலைப்படுத்தலுக்கு அவசியமான கோட்பாடுகளை வீரசைவம் தனக்குள் ஏற்படுத்திக்கொள்ள வேண்டியதாயிற்று.. சமயம், தத்துவம், சமய வாழ்வியல் என்னும் வடிவங்களில் அக்கோட்பாடுகள் உருவாகின.இந்த வகையில்,வீரசைவத்தின் அடிப்படைகளாக இலிங்கதாரணம், பஞ்சாசாரம், அட்டாவரணம், சடுத்தலம் என்பன முக்கியம் பெறுகின்றன. இவையேஆன்மா இறைவனுடன் ஐக்கியமடைவதற்கான வழிகளாகவும் கூறப்படுகின்றன. அதாவது இலிங்காங்க சாமரஸ்யத்துக்கான மார்க்கங்களாக இவை காணப்படுகின்றன. இவற்றுள் பஞ்சாசாரம் பற்றி இங்கு நோக்குவது சிறப்பாகும்.

### பஞ்சாசாரம்

பஞ்ச என்பது ஐந்துனவும்,ஆசாரம் என்பது ஒழுக்கம் எனவும் பொருள்படும். ஆகவே ஐவகை ஒழுக்க நெறிகளே பஞ்சாசாரங்கள் எனப்படும். வீரசைவகளிடையே அன்பு, அறம், ஒற்றுமை, நற்பணி, நற்பண்பு, நற்செயல் என்னும் அறப்பண்புகளை உருவாக்கி வளர்க்கும்நோக்குடன் சமூகத்தை உள்ளீடாகக் கொண்டு இவ்வொழுக்கங்கள் கட்டமைக்கப்பட்டுள்ளன. இலிங்காசாரம், பிருத்யாசாரம், சதாசாரம், கணாசாரம், சிவாசாரம் ஆகியன பஞ்சாசாரங்களாகக் கொள்ளப்படுகின்றன. இவை முறையே, இலிங்க ஒழுக்கம், பணிவென்னும் ஒழுக்கம், தன்னிறுத்தல் ஒழுக்கம், கூட்டமைப்பு ஒழுக்கம், சிவ ஒழுக்கம் எனவும் கூறப்படும்.

### இலிங்காசாரம்

பரம் பொருளாகிய சிவனை இலிங்க உருவில் வழிபடும் ஒழுக்க முறைமையே இலிங்க ஒழுக்கமாகும். இலிங்கத்தினை வீரசைவர்கள், இட்டலிங்கம், பிராணலிங்கம், பாவலிங்கம், என மூன்று வகையிற் கூறுவர். இட்டலிங்கம் என்பது சற்குருவினால் தீட்சை செய்து உடலில் அணிந்து, தினமும் ஒரு வேளையோ, இருவேளையோ, அல்லது மூன்று வேளையோ பக்தி பூர்வமாக பூசிக்கப்படும் பொருளாகும்.

வீரசைவர் போற்றும் இட்டலிங்கமானது ஐம்பொறிகளுக்கும், உள்ளத்துக்கும் இன்பம் அளிப்பதாகுமென சிவப்பிரகாசர் குறிப்பிடுகின்றார். இதனை,

"குறிபல பலமுறை கொண்டு பல்வகைப் பொறிதொரு
மருவி ஒண் புலன் நுகர்ந்து மாய்ந்து
அறிவரு நிலைய ஆதாரம் மேவியும்
நிறைவுறும் அங்கையின் இட்டலிங்கமே"[8]

என்னும் பாடலின் மூலம் உடலில் உளவியல் முறையால் உணரப்படுகின்ற ஆறு ஆதாரங்களிலும் இலிங்க தாரண உண்மையினை சிவப்பிரகாசர் உணர்த்துகின்றார். காகத்தின் இரு விழிகளுக்கும் ஒரு மணியே அமைந்து நோக்கும். அவ்வாறே இட்டலிங்கமும் அகமும்,புறமும்இருந்து அருள்புரியவல்லதாகின்றது. இக்கருத்தினை,

"கருங்கொடி இருவிழிக் கண்ணு மோர்மணி
திரிந்திடு செயலெனத் திரிதலின்றியே
பொருள் தூறு மகமொடு புறமுந் தீர்வற
இருந்தில குறுமருளிட்ட **லிங்கமே**"[9]

என்னும் சிவப்பிரகாசர் பாடலால் அறியலாம்.

பல பிறவிகளில் தொடர்ந்து வந்த வினைகள் நீங்க யான், எனது என்னும் அகங்காரம் தோன்றும். இதனால் விளைகின்ற துன்பமில்லாத இன்பம் கைகூடுவதற்கு இட்டலிங்க வழிபாடு துணைபுரியவல்லது என்றகருத்தினை,

"....தொடர்ந்துள வினை வாவி தொலையாதென்னும்
இடும்பையி லின்பரு ளிட்ட லிங்கமே"[10]

எனவும் குறிப்பிடுகின்றார்.

இட்டலிங்க ஆசார சீலர்களான வீரசைவர்கள் சாதி வேறுபாடுகள், தீட்டுக்கள், உயர்வு தாழ்வு போன்றவற்றை கைக்கொள்ளாது தவிர்த்தலும், அனைத்து உயிர்களையும் இறைவன் திருவுருவான இலிங்கங்களாகவே கருத்திற்கொள்வதும், இலிங்க ஒழுக்கத்தில் அடங்கும். ஒவ்வொரு உயிரையும் இறைவனின் கூறாக எண்ணிப் பரப்பிரமாவாகிய இறைவனுடன் இரண்டறக் கலப்பதற்குரிய பயிற்சி இலிங்க ஆசாரத்தினூடாக வீரசைவத்தவருக்கு அறிவுறுத்தப்படுவதனை அவதானிக்க முடிகின்றது.

இட்டலிங்கத்தைத் தவிர வேறுபிற இலிங்க வடிவங்களிடத்து வீரசைவர்கள் அதீத பக்தியும்,ஈடுபாடும் கொள்ளமாட்டார்கள். கற்புடைய பெண்ணொருத்தி தன் கணவனைத் தவிர பிற ஆடவரை மனதினாலும் நினையாது வாழ்வது இயல்பாகும். அதுபோன்றே தனக்குரிய இட்டலிங்கம் தவிர, வேறு எதிலும் அன்பும் நாட்டமும் செலுத்தாத உறுதிப்பாடு கொண்டொழுகுவதிலேயே வீரசைவர்களின் வாழ்வு அமைந்திருக்கும். என்ற உயரிய கொள்கையினைச் சிவப்பிரகாசர்,

"கணையன் பால் இன்பமுறும் கற்புடையாள் வேறோர்
கணவன் பால் இன்புறச் சிந்தித்து- அணைவுறாள்
ஆங்கது போல் இட்டலிங்கத் தாகுமன்பு வேற்றுலிங்கத்

தோங்க விடா தாங்கதும் வீரம்."[11]

என்று எடுத்தாண்டிருக்கின்றார். இட்டலிங்க ஒழுக்கத்தைக் கடைப்பிடிப்பதற்கு மனவைராக்கியம் இன்றியமையாத ஒன்றாகக் காணப்படுகின்றது.

பிருத்யாசாரம்

பிருத்திய ,ஆசாரம் என்பது பிருத்யாசாரமாயிற்று. பிருத்தியம் என்ற வட மொழிச் சொல்லுக்கு 'அடிமை' என்பது பொருளாகும்.[12] பணிவெனும் ஒழுக்கமே பிருத்தியாசாரமாகும். பணிவு என்னும் ஒழுக்கம் மேலும்பல அறப்பண்புகள் உருவாகக் காரணமாகவுள்ளது.

"பணியுமாம் பெருமை சிறுமை என்றும்,
அணியுமாம் தன்னை வியந்து"[13]

என்னும் பொய்யாமொழியின் கூற்று ஒப்பிட்டு நோக்கற்பாலது. உலகிலுள்ள ஏனைய உயிர்களுக்கு தாம் பணியாளர் என்ற சிந்தனையில் பணிந்தொழுகித் தொண்டனாக வாழ்தல் வேண்டும் என்பது இவ் ஒழுக்கத்தின் நோக்கமாகும்.

சதாசாரம்

சத்,ஆசாரம் என்பது சதாசாரமாயிற்று. சத் என்பது உண்மை எனவும்,ஆசாரம் என்பது ஒழுக்கம் எனவும் பொருள்படும். ஆகவே உண்மை நெறி நிற்றலாகிய அறநெறியே சதாசாரமாகும். அறம் வளர்த்தல் என்பது ஒழுக்கமாகும். ஆதலின் அறம் வளர்த்தலை ஒவ்வொரு வீரசைவரும் மேற்கொள்ள வேண்டும் என்பது வீரசைவக் கோட்பாடு. இதனை சிவப்பிரகாசர்,

"நரர் வடிவாயினும் நன்மை ஆற்றுறா
மரபினில் உலகினில் வருதல் தப்புதல்
அரிது நல் அறம் புரி வழி அடுப்பினும்
மருவுதல் அரிது அறம் வளர்க்கும் அங்கமே"[14]

என எடுத்தாளுதல் நோக்குதற்குரியது. மெய்வருத்தம் என்பதனை அனுபவிக்க ஒவ்வொருவரும் முயலுதல் வேண்டும். அப்போதே பிறரை மதிக்கும் பண்பு உருவாகும் என்ற கருத்தின் அடிப்படையில் அனைவரையும் வீரசைவம், உழைக்கத் தூண்டியது. உண்மை வழிநிற்றலாகியஉழைப்பால் தம்மை நிலைநிறுத்திக் கொள்ளுதல் காரணமாக இவ்வொழுக்கம் 'தன்னிலை ஒழுக்கம்' எனப்பெற்றதாகும். சமூகத்தில் தனிநபர்களின் பெறுமானத்தினை தீர்மானிப்பதில் தன்னிறுத்தல் ஒழுக்கம் அவசியமாகின்றது.

கணாசாரம்

கணம் ஆசாரம் என்பது கணாசாரமாயிற்று. இங்கு கணம் என்பது கூட்டம் எனப் பொருள்பட்ட நிலையில் கூட்டமைப்பு ஒழுக்கமே கணாசாரம் என்பதாகும். சரணர்களாகிய சிவனாடியார்களைச் சிவனாகப் பாவித்து போற்றும் ஒழுக்கமே கணாசாரம் எனப்படும்.

சமூக அமைப்பில் அனைவர்க்குமுரிய நலன்களைப் பெற்றுத்தரும் ஓர் அமைப்பாக வீரசைவர் செயற்பட வேண்டும். இதற்கு ஒற்றுமை இன்றியமையாததாகும். எனவே ஒற்றுமை என்ற ஒழுக்க நெறியில் நின்று நல்லாரைப் பாதுகாக்கவும், தீயவர்களின் தீமைகளை அகற்றுவதற்காகவும் இக்கூட்டமைப்பு செயற்படுதல் வேண்டும். ஆதலினால் தன்னலங்கருதாது, பிறர்நலன் பேணும் தகைமையுடையவனாக ஒவ்வொரு வீரசைவனும் மாற வேண்டும் என்பதனையே கணாசாரம் வற்புறுத்துகின்றது.

இக்கூட்டமைப்பு ஒழுக்கம் ஒற்றுமை என்னும் பண்பில் தங்கியுள்ளது. ஆகவே ஒற்றுமைத் தன்மையை சமூகத்தில் நிலைநிறுத்துவதனூடாக ஒருங்கிணைந்து செய்யும் ஆக்கபூர்வமான செயற்பாடுகளுக்கு கூட்டமைப்பு ஒழுக்கம் வழிசமைக்குமெனலாம்.

சிவாசாரம்

சிவம் ஆசாரம் என்பது சிவாசாரமாயிற்று. வீரசைவர்களெல்லோரும் சிவசொரூபிகள் என்று எண்ணி வாழும் ஒழுக்கம் இதுவாகும். வீரசைவர் ஒவ்வொருவருக்கிடையிலும் வேறுபாடு காணாது இருத்தல் இதன் அடிப்படையாகும்.

"பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்"[15]

என்ற பொய்யாமொழிப்புலவரின் கூற்று இவ்வொழுக்கத்தினைஅரண் செய்கிறது. வீரசைவர்களின் ஆசாரங்களைக் கைக்கொண்டொழுகுபவரைக் கவனித்து, அவரது பால்,குலம், தொழில், முதலியவற்றைக் கவனியாதிருத்தல் இதன் பாற்படும்.

சமூகத்தில் நல்லிணக்கம் உருவாக சமத்துவம் பேணப்பட வேண்டும்.தீட்சை பெற்ற வீரசைவர்கள் தம்மைப்போன்று இட்டலிங்க பூசைபுரிகின்றவர்களை தம்மவராகவே மதித்து, அவர்களுடன் ஒன்றாக இருந்து உண்ணுதல் முதலிய எச்செயலையும் செய்ய முன்வருவர். இட்டலிங்க பூசை புரிவர்களிடையே வேறுபாடுகாணாது அனைவரும் சமம் என்னும் பண்பினை இவ்வொழுக்கம் நிலை நாட்ட முற்படுகின்றது.இத்தகைய உறுதிப்பாடுடைய வீரசைவத்தின் கோட்பாட்டினை சிவப்பிரகாசர்,

"இவ்விரதம் இல்லாதார் எவ்விரதர் ஆயிடினும்
அவ்வவரோ டொன்றாய் அருந்தல் முதல் எவ்வெவையும்
உள்ளத்தாலும் நினையா துற்ற இடம் சற்றகலாக்
கொள்கைத்தாம் கோலமும் வீரம்"[16]

என்று தெளிவுபடுத்துகின்றார்.

சிவனே முழுமுதற் பொருளாவான், அவரைக் காட்டிலும் மிகவுயர்ந்த பொருளில்லை. இப்பரம்பொருளைத் தவிர்த்து பிறதெய்வங்களை தொழுதல் கூடாது. எனவே, வழிபாட்டிற்குரியவன் சிவன் ஒருவனே, என்று தெளிந்து வழிபாடு செய்கின்ற ஒழுக்கமே சிவாசாரமாகும். இதனடிப்படையிலேயே வீரசைவ நெறி,'மறந்தும் புறந்தொழா நெறி' எனப் போற்றப்படுகின்றது.

முடிவுரை

வீரசைவம் ஒரு சீர்திருத்த நெறியாகும். இதன் அடிப்படைக் கோட்பாடுகள் இச்சமய நெறியின் சீர்மைக்கு வழிசமைப்பனவாகவுள்ளன. பௌத்த மதத்தில் பஞ்ச சீலக்கொள்கைகள் முதன்மை பெறுவது போன்று வீரசைவத்தில் பஞ்சாசாரங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன.மனிதநலம் பேணுவதே சமயத்தின் குறிக்கோளாகும். சமூகத்தில் சமயத்தின் தேவை என்ன? என்பதனை இவ்வொழுக்கங்கள் மூலமாக வீரசைவம் வெளிப்படுத்த

முயற்சித்திருக்கின்றது என்ற அடிப்படையில் வீரசைவ நெறியில் பஞ்சாசாரக் கொள்கைகள் முக்கிய இடம் வகிக்கின்றனவெனலாம்.

அடிக்குறிப்புகள்

1. ஊரன் அடிகள், (2009),வீரசைவ ஆதீனங்கள், ப. ஔவை.
2. பெரிய புராணம், பா. எ, 144.
3. Tamil lexicon , p. 3758.
4. இரத்தினசபாபதி, வை., (1977), வீரசைவம், ப. 8.
5. இரேவணசித்தர்,பேரளம்., (1970), சிவஞானதீபம், ப. ஞை.
6. சித்தாந்தசிகாமணி, உபதேசம்,பா. எ, 18.
7. மேலது,பா. எ, 16.
8. Ishwaran, k., Religious and Society among the டுைபெயலயவள பூக South India, p.115.
9. பிரபுலிங்கலீலை, இட்டலிங்ககதி, பா. எ, 17.
10. மேலது,பா. எ, 16.
11. மேலது,பா. எ, 18.
12. சித்தாந்தசிகாமணி,அத்துவித வெண்பா,பா. எ,36.
13. Tamil lexicon, p. 2705.
14. திருக்குறள், 978.
15. பிரபுலிங்கலீலை, இட்டலிங்ககதி, பா. எ, 11.
16. திருக்குறள், 972.
17. சித்தாந்தசிகாமணி,அத்துவித வெண்பா,பா. எ, 367.

திரு. நமனைன்
விரிவுரையாளர்,
இந்துநாகரிகத்துறை,
யாழ் பல்கலைக்கழகம்.

# பன்முக நுண்மதித்திறன்களும் வகுப்பறையில் அவற்றை விருத்தி செய்வதற்கு மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகளும்

தனித்துவமான உள்ளார்ந்த ஆற்றல்களுடன் தேவைகளுடனும் பிரச்சினைகளுடனும் விளங்குகின்ற பிள்ளை ஒவ்வொன்றும் தன்பிரச்சினைகளை தனதாக ஏற்றுக்கொண்டு அப்பிரச்சினைகளின் தன்மையை விளங்கி தன்னைப் பற்றிய சுயஉணர்வுடன் தன்னைத்தானே நெறிப்படுத்தி தன்னை சுற்றியுள்ள சூழலில் குடும்பம் சகபாடிகள் பாடசாலை சமூகம் வெகுசன தொடர்புசாதனங்கள் சமயநிறுவனங்கள் போன்ற பல்வேறு காரணிகளின் செல்வாக்குகளுக்கும் அப்பால் தனது பிரச்சினைகளுக்கு தீர்வுகாணக்கூடியதாக பிள்ளைகளிடத்து ஆற்றலை வளர்த்தாலே கல்விவழிகாட்டலினதும் கல்வி சீர்மியத்தினதும் அடிப்படை நோக்கமாகும்.பிள்ளையின் ஆற்றல்களையும் தனித்துவங்களையும் சிறப்பானமுறையிலே வெளிக்கொணர வேண்டும்.அப்பிள்ளைக்கே உரிய சிறப்பான ஆற்றல்கள் வெளிப்படுவதற்கான சந்தர்ப்பங்கள் பலவேளைகளில் அப்பிள்ளைக்கு கிடைக்காமல் போகலாம்.நுண்மதி என்பது ஒரு பிள்ளையின் உளஆற்றல் ஆகும்.அதாவது புரிந்து கொள்ளல் நியாயம் காணல் புதுமை புனைதல் தொடங்கிய செயலை தொடர்ந்து செய்தல் நடத்தை குறைபாடுகளை தானே உணர்தல் தீர்மானம் மேற்கொள்ளல் ஆகியவற்றின் ஒட்டுமொத்த பெறுமானமே நுண்மதியாகும் என அல்பிரட் பீனே என்பவர் குறிப்பிட்டார்.பின்னர் நுண்மதியை அளவிடுவதற்காக நுண்மதி ஈ.வு பயன்படுத்தப்பட்டது.

வகுப்பறையில் பலதரப்பட்ட மாணவர்கள்கல்வி கற்பார்கள்.அவர்களின் ஆற்றல்கள் வேறுபட்டதாக காணப்படும்.ஒரு மாணவனின் விளக்கம் பெறும் திறன் புலக்காட்சி பெறும் திறன்போன்ற பல உள ஆற்றல்கள் மாணவனுக்கு மாணவன் வித்தியாசம் காணப்படும் இவ்வாற்றல்கள் உயர்நிலையில் காணப்படின் அம்மாணவன் நுண்மதிமிக்க மாணவனாக காணப்படுவான்.அதே வேளையில் இவ் உள ஆற்றல்கள் குறைவாக உள்ள மாணவன் நுண்மதி குறைந்த மாணவனாக காணப்படுவான்.

ஹவாட் காடினர் (Horward Gardener) என்பவர் பல்வகை நுண்மதி கொள்கையை அறிமுகப்படுத்தினார்.பாடசாலைகள் இரு ஆற்றல்களை மட்டுமே கற்ப்பித்தும் பரீட்சித்தம் மீளவலியுறுத்தியும் வெகுமதி அளித்தும் வருகின்றன.

1. முதன்மை மொழிசார் ஆற்றல்
2. தர்க்க கணிதரீதியான ஆற்றல்

பல்நிலை நுண்மதிக்கொள்கையான கற்றலுக்கான பல்வேறு பிரதான வழிமுறைகளை எவ்வாறு வழங்குகிறது என்பதாகும்.மொழி அல்லது தர்க்கரீதியான

பாரம்பரிய கற்ப்பித்தல் முறைகளில் மாணவனுக்கு கற்பிப்பதில் சிரமப்படும் ஆசிரியர்களுக்கும் பல்நிலை நுண்மதி கொள்கையானது ஒருவரப்பிரசாதமாக அமையும். காடிடனர் மேலும் நுண்மதி பற்றி விபரிக்கும் போது மனித மனத்திறன் பரந்துபட்டவை.பல்வகைப்பட்டவை எனவே அவற்றை IQஎனும் ஒற்றை மதிப்பு மூலம் அளவிட முயற்சி செய்வது யானையை கண்ணாடிக்குப்பியில் அடைப்பதற்கு ஒப்பானது எனக் கூறினார்.

எனவே இவரது கருத்துப்படி பாடசாலைகளில் ஆரம்பக்கல்வி தொடக்கம் க.பொ.த சாதாரண தரம் வரைக்குரிய பாடவிதானங்கள் பாரம்பரிய வாய்மொழிமூல அல்லது மொழியியல் சார்ந்த காரணம் காணல் மற்றும் எண்சார் அல்லது கணிதம்சார் காரணம் காணல் நுண்மதிகள் ஊடாக கற்பிப்பதிலும் பார்க்க 9 நுண்மதிககளையும் வளம்படுத்தக்கூடிய வகையில் பல பாடங்களின் ஊடாக மாணவர்களுக்கு கற்பிப்பது இன்று ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.நாட்டியம், சங்கீதம்,விளையாட்டு, நாடகம், சமயக்கல்விகள் சித்திரம், விவசாயம், மீன்பிடியியல், தொழில்நுட்பக்கல்வி,சமூகக்கல்வி என்பவற்றின் உள்ளடக்கங்கள் பன்முக நுண்மதியை தூண்டுவதற்கு உதவியுள்ளன.

பல்வகை நுண்மதித்திறன் மூலம் நம் கல்வி முறையானது நுண்கலைகளில் வல்லமை படைத்தோர் சிற்பிகள்,ஓவியர்கள், இசைவல்லுனர்கள், இயற்கை வாதிகள் வடிவமைப்பாளர்கள், நடனக்கலைஞ்ஞர்கள்,மருத்துவ சிகிச்சையாளர்கள், அறுவை சிகிச்சை நிபுணர்கள் போன்றோரை உருவாக்குவதில் முன்நிற்க வேண்டும்.

பன்முக நுண்மதியினை Gardener9 வகையாக வகைப்படுத்துகின்றார்.

- மொழிசார் நுண்மதி(Verbal Linguist Intelligence)
- தர்க்கம் சார் கணித நுண்மதி(logical Mathematical Intelligence)
- இசைசார் நுண்மதி(Musical Rhythmic Intelligence)
- வெளி சார் நுண்மதி(Visual Spatial Intelligence)
- உடலியக்கம்சார் நுண்மதி (Bodily Kinesthetic Intelligence)
- ஆளிடைத்தொடர்பு சார் நுண்மதி(Inter personal Intelligence)
- ஆளகத்தொடர்பு சார் நுண்மதி(Intra personal Intelligence)
- இயற்கை சார் நுண்மதி(Naturalistic Intelligence)
- Existentialist Intelligence

மொழிசார் நுண்மதி(Verbal Linguist)

இந்நுண்மதி ஆனது தேவையான வகையில் கருத்துக்களை விளக்க எழுத்துக்களையும் சொல்களையும் கையாளும் திறனைக் குறிக்கின்றது. கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் மொழி முக்கிய இடம் பெறுகின்றது. கற்பவருக்கும் கற்பிப்பவருக்கும் இடையில் ஊடகமாக மொழி செயற்படுகின்றது. இவ்வகையில் மொழிசார் நுண்மதி தொடர்பான வகுப்பறை செயற்பாடுகள் பின்வருமாறு அமையும்.

- நாடகங்கள் கவிதைகள் நூல்கள் வானொலி உரையாடல் போன்றவையை இரசித்தல்
- நாடகப்பதிவுகள் விரிவுரைகள் என்பவற்றை செவிமடுத்தல்
- கருத்துக்களை வெளிப்படுத்தல் சிறந்த பேச்சு
- கற்ப்பிக்கும் போது விடயங்கள் தொடர்பாக சிறப்பாக விளக்கம் அளித்தல்
- எதையும் எழுதுவதற்கு விரும்புதல்
- மொழிகளை கற்பதில் ஆர்வம் கொள்ளல்

மேற்போன்ற செயற்பாடுகளின் மூலம் மொழிசார் நுண்மதித்திறனை அளவிடமுடியும் எனவே இத்தகைய மாணவர்களில் மொழிசார் நுண்மதித்திறனை அதிகரிக்க

- பாடசாலையில் நூலகப்பாடவேளை சிறுகதைகள் கவிதைகள் வாசிக்க வைக்க வேண்டும். அத்துடன் வாசித்துள்ளார்களா என்பதை குறித்த வகுப்பிற்குரிய தமிழ் பாடஆசிரியர் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும்.
- வாரத்தில் ஒரு சிறுகதை ஒரு கவிதை என வாசிப்பதன் மூலம் அவர்களுக்குரிய மொழிசார் நுண்மதித்திறனை வளர்க்க முடியும். இதன் மூலம் இப்பிள்ளைகளை ஆற்றுப்படுத்தக்கூடிய தொழில்துறைகளாக கவிதைத்துறை அல்லது எழுத்துத்துறை அல்லது பத்திரிகைத்துறை என்பவற்றை குறிப்பிடலாம்.

தர்க்கம் சார் கணிதநுண்மதி (logical Mathematical Intelligence)

தர்க்கரீதியான கோலங்களையும் எண்சார் கோலங்களையும் கிரகிக்கக்கூடிய ஆற்றலும் கண்டறியக்கூடிய நீண்டசங்கிலி போல் அமைந்த தர்க்கத்தொடர்களை கையாளக்கூடிய ஆற்றலும் தர்க்கம் சார் கணித நுண்மதி ஆகும். இது தற்காலத்தில் பல போட்டிப்பரீட்சையிலும் பரீட்சிக்கும் ஒரு கருவி ஆகும் தொழில் துறையாற்றுப்படுத்தலாக கணிதத்துறையும் விஞ்ஞானத்துறையும் அமையும்.

**இசைசார் நுண்மதி(Musical Rhythmic Intelligence)**

சுருதி லயம் அழகியல் சார் ஒலித்தொனிகள் என்பவற்றை உருவாக்கக்கூடிய ஆற்றலும் நயக்கும் ஆற்றலும் சங்கீத வடிவங்களின் வெளிப்பாட்டுத்திறனை விளங்க்கிக்கொள்ளலும் போன்ற செயற்பாடுகள் இசைசார் நுண்மதித்திறனை மதிப்பிடலாகும். எண்சார் நுண்மதி உள்ளவருக்கு இசையை இரசிக்கும் இசைசார நுண்மதித்திறன் கூடுதலாக காணப்படும். வகுப்பறைசெயற்பாட்டை மரநிழலிலே அல்லது வசதியான இயற்கை இடங்களிலே நடத்தும் போது இயற்கை ஒலிகளை இரசிக்க வைத்தல்.

- இசைத்தட்டுக்கள் மூலம் பொருத்தமான பாடல்களை கேட்கவைத்தல்
- பாடல் வரிகளை உடனே கிரகிப்பதற்கு மீண்டும் மீண்டும் பாடல்களை ஒலிக்க வைத்தல்.
- ஒன்றுக்கு மேற்ப்பட்ட சங்கீத உபகரணங்களை பயன்படுத்த பழக்குதல்.

இச்செயற்பாடுகள் காரணமாக மாணவர்களை இசையமைப்பு சங்கீதம் வயலின் துறைகளுக்கு தொழில் ரீதியாக ஆற்றுப்படுத்தலாம்.

**வெளிசார் நுண்மதி(Visual Spatial Intelligence)**

கட்புல-வெளியுலக புலக்காட்சிபெறல்.இப்புலக்காட்சிகளை உருமாற்றம் செய்யக்கூடிய ஆற்றல் தூண்டிகள் அற்ற நிலைமையிலேயே இத்தகைய புலக்காட்சி அனுபவங்களை மீள்உருவாக்கல் போன்ற ஆற்றல்கள் வெளிசார் நுண்மதி ஆகும்.இவ்வகையான நுண்ணறிவு ஓவியர்கள், சிற்பிகள்,கட்டிட வரைபடம் தயாரிப்போர்,பொறியியல், வல்லுநர்கள் ஆகிகோரிடம் இருந்து காணப்படுகிறது.

எதிர்காலத்தில் கட்டிட வரைபடம் தயாரிப்போர், பொறியியல் வல்லுநர்களாகவோ நெறிப்படுத்தலாம்.இவ்வகையான நுண்ணறிவை மேம்படுத்த

- உருவங்களை பார்த்துக்கீற சித்திர பாட ஆசிரியர் வழிப்படுத்தல்
- சரியான அளவுத்திட்டத்திற்கேற்ப தேசப்படப்பயிற்சியில் புவியியல் ஆசிரியர் வழிப்படுத்தல்
- மாணவர்களை அடிக்கடி சித்திரப்போட்டிகளில் பங்குபற்ற வைத்தல்
- சூழலை நன்கு அவதானிக்க செய்தல்.

உடலியக்கம்சார் நுண்மதி (Bodily Kinesthetic Intelligence)

நடனக்கலைஞர்கள் விளையாட்டு வீரர்கள் Intelligenceபோன்றோருக்கு இவ்வகை நுண்ணறிவு மிகவும் தேவை. பாடசாலைகளில் காலைப்பிரார்த்தனையின் போது உடற்பயிற்சி நடைபெறுகிறது.இது உடல் உள ஆரோக்கிய மேம்பாட்டிற்கு இன்றியமையாதது ஆகும்.வெளிப்பாடுகளை காட்டுவதற்காக உடலைத்திறனாக பயன்படுத்தல் பொருட்களை திறனாற்றலுடன் கையாளல்.இதை மேம்படுத்த

1. குழு விளையாட்டு அணிகளை உருவாக்கி தேசிய மட்டப் போட்டிகளில் பங்குபற்ற வைத்தல்.
2. நடனக்கலையை தேசியமட்டத்திற்கு கொண்டு செல்லல்
3. விளையாட்டுப்போட்டிகளை அனைத்து மாணவரும் பங்குபற்றக்கூடிய வகையில் நடாத்துதல்.
4. வாரத்தில் ஒருமுறை மாணவர்களை விளையாட்டு மைதானத்திற்கு அழைத்துச்சென்று விளையாட விடுதல்

ஆளிடைத் தொடர் நுண்மதி(Inter personal Intelligence)

ஏனையோரின் மனநிலையையும் சுபாவங்களையும் ஊக்கல்களையும் நோக்கங்களையும் கண்டறியக்கூடிய ஆற்றல் ஆளிடைத்தொடர்பு நுண்மதியாகும்.வகுப்பறையில் பல்தரப்பட்ட மாணவர்கள் கல்வி கற்கிறார்கள். அவர்கள் எல்லோரும் வெவ்வேறான குணாதிசியங்கள் நடத்தைக்கோலங்கள் என்பவற்றை கொண்டிருப்பர்.அவர்களிடையே ஒற்றுமையும் புரிந்துணர்வையும் ஏற்படுத்துதல் தொடர்பான செயற்பாடுகள் முதன்மை பெறுகின்றன. வகுப்றையில் சகமாணவர்களுடன் சேர்ந்து ஒத்துழைப்புடன் பணியாற்ற விரும்புதல் போன்ற செயற்பாடுகள் மூலம் அளவிடமுடியும்.கற்பித்தலின் போது குழுச்செயற்பாட்டு நடவடிக்கை மூலம் அறிந்து கொள்ளமுடியும்.இத்தகைய நுண்ணறிவை விருத்திசெய்ய

1. பாடசாலையில் கழகங்கள் மற்றும் சமூகசெயற்பாட்டில் ஈடுபடவைத்தல்.
2. குழுவேலைகளில் ஈடுபடவைத்தல் மூலம் சகபாடிகளின குணஇயல்புகள் பற்றி அறிய வைத்தல்.
3. மாணவர்கள் தொடர்பான பிரச்சினைகளுக்கு மாணவர்களை தீர்வுகாணும் நடவடிக்கைகளில் ஈடுபடுத்தல்.

மாணவர்களிடையே இந்நுண்மதித்திறனை வளர்ப்பதன் மூலம் உளவியல் துறைமக்கள் தொடர்பு அலுவலர்கள்,விற்பனை முகாமையாளர்கள் போன்ற தொழில்துறைகளுக்கு ஆற்றுப்படுத்தலாக அமையும்.

ஆள் அகத்தொடர்பு சார் நுண்மதி(**Intra personal Intelligence**)

தன்னை உணர்தல் தன்னை நெறிப்படுத்தல் தனது மனவெழுச்சியின் இயல்பைப் பொருத்தமானதாகக் கண்டறிதல். ஆள் அகத் தொடர்பு எனப்படும்.சுயமதிப்பீடு என்பது மிகமுக்கியத்துவம் வாய்ந்த விடயமாகும்.தன்னுடைய செயற்பாட்டின் வீச்சு தன்னடைய பலம் பலவீனம் வாய்ப்பு அச்சுறுத்தல் என்பன தன்னைத்தான் அறிவதற்கு அவசியமானது ஆகும்.திட்டம் தீட்டுதல் உத்திகளை உருவாக்குதல் ஆராட்சியாளர் போன்ற ஆற்றல்கள் உள்ளோரிடம் இவ்வகை நுண்ணறிவு மிகுதியாக காணப்படுகின்றது.பாடசாலைகளில் இல்லமெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டியில் இல்லத்தலைவர்களின் செயற்பாடுகள் க.பொ.த உயர்தர மன்றச்செயற்பாடுகளை வழிநடத்துபவர் செயற்பாடுகள் மூலம் ஆளகத்தொடர்பு நுண்மதியினை அறிந்து கொள்ள முடியும்.இந்நுண்மதித்திறனை மேம்படுத்த

1. மாதம் ஒருமுறை அனைத்து மாணவருக்கும் சுயமதிப்பீட்டு படிவம் ஒன்றை தயாரித்து வழங்கல்.
2. சமயம் சார்ந்த ஆன்மீக செயற்பாடுகளில் மாணவர்களை ஈடுபடுத்தல்.

இயற்கைசார் நுண்மதி(**Naturalistic Intelligence**)

உயிரினங்களை இனம்காணல் வேறுபிரித்தறிதல் வகைப்படுத்தல் இயற்கை உலகின் இயல்புகளை உணர்தல் போன்ற செயற்பாடுகள் இயற்கை சார் நுண்மதியாகும்.இத்தகைய நுண்ணறிவு தோட்டக்கலை வல்லுநர்கள் தாவரவியலாளர் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் ஆகியோரிடம் மிகையாகக் காணப்படுகிறது.பொதுவாக அழகியல் உணர்வுடைய அனைவரிடமும் இத்தகைய நுண்ணறிவு காணப்படும்.இந்நுண்ணறிவை மேம்படுத்த

1. பாடசாலைகளில் சுற்றாடல் தினம் கொண்டாடப்படல் வேண்டும்.
2. களப்பயணம் சென்று இயற்கையை இரசிக்கவும் வேறுபாடுகளை அறியவும் மாணவர்களுக்கு சந்தர்ப்பம் வழங்க வேண்டும்.

## Existentialist Intelligence

hilosopherஇவுறநமுசளைவ இத்துறைசார்ந்தவர்களுக்கு Existentialistநுண்ணறிவு காணப்படும்.பாடசாலையில் நுண்ணறிவு .T140 மேற்பட்ட மாணவர்களை (மீத்திறனான மாணவர்) இத்துறைக்கு வழிப்படுத்தலாம்.

கார்டினர் முன்வைத்த பன்முக நுண்மதிக் கோட்பாடானது மாணவர்களின் பன்முகப்பாடுகளை இனம் கண்டு இவர்களின் ஆற்றல்களை மதித்து அவர்களுக்கு பொருத்தமான துறையில் அவர்களை ஆற்றுப்படுத்தலில் உதவக்கூடியது.இதனால் மாணவர்கள் ஊக்கம் பெற்று தமது ஆற்றல்களை வளர்க்க முனைவர்.இன்று கார்டினர் முன்வைத்த நுண்மதி வகைகள் மேலும் விரிவாக்கம் பெறக்கூடியதான ஆய்வுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

துணைநூல்கள்


- மாற்றம் காணும் கல்வி உலகுடன் இணைதல் - கலாநிதி.த.கலாமணி
- 2014 வடக்கின் கல்வி முறைமை மீளாய்வு - NESR NEWPGபுடத்தும் குழு வடக்கு மாகாணம் கல்வி அமைச்சு
- கற்றல் - மனிதவளர்ச்சி – உளவியல்
- அகவிழி 2009.02.26



திருமதி. அருட்செல்வன்,

ஆசிரியர்,

யா/ முத்துத்தம்பி மகா வித்தியாலயம்.

# Mother's Love

Mother is the most lovable, pleasant and adorable person in the world for anyone. Mother is the best gift from God for everyone. She is the embodiment of love, kindness, affection, fortitude, perseverance, patience and tolerance, inaddition to all these, sherepresents the womanhood. The moment a child is somebody absotutely new blooming out from womanhood. All attributes of beauty, kindness. Politeness, patience, self confidence and courage spring from her. Someone said God created her because he cannot visit every home.

The most important person in our life is our mother from thetime the child is born she spends all her time caring for the chid .she makes great. Sacrifices, feeding, carrying, tending, guiding and nurturing all the while enjoying, feeling proud and foregoing all her comfors. That is mother, She is the kind of person who always demonstrates great zeal for every child without requiring anything in return. A motherproudly announces "Being a full time mother is one of the highest salaried jobs in the world since the payment is pure love"

No words can describe the role played by a mother. It seems that every mother is gifted with a strong willpower to face the toughest challenges in life and great, willingness to help everyone. She is by all means the best teacher and guide. She teaches the best lessons of life to her children in the best way and to appreciate life as a precious gift from God. She is probab ly the only patient listener when we want to talk. Mother is the only strength for a family. The contributions of a mother to the society are immeasurable.

We must thank God eternally for this fantastic gift called mother to mankind. We need to be thankful to her for giving life to us going through all pains. How caring and loving she is from the time the child is born till eternity? She doesn't expect anything in return. Even if we do not appreciate the doing of the

mother we must take a moment to thank at least once in a day for we would have beennothing in this vast world with out her.

What we are or we never hope to be , we owe it to our mother.

Mrs.Y. Jeyanthy,
Teacher,
J/ Muththuthamby Maha Vidyalayam.

# அரங்க செயற்பாடுகளும் ஆளுமை விருத்திகளும்

தாயின் அரவணைப்பில் இருந்து பிரிந்து பாடசாலைக்கு வரும் பிள்ளைஎல்லோரும் மிக்க மகிழ்ச்சியோடும்,ஆர்வத்தோடும், பாடசாலைக்கு வருவதில் அவரவர் சமுதாய சூழல்,சமுதாய கட்டமைப்பு பெற்றோர்,உறவினர் ,மொழிதொடர்பாடல் ,பொருளாதார பின்புலம் ஒன்று பல காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. இவற்றின் அடிப்படையில் ஒவ்வொரு பிள்ளைகளினிடத்திலும் தனித்துவம் வேறுபடும் தாழ்வுச்சிக்கல் போன்ற பல விடயங்கள் பிள்ளையின் கற்றலில் கல்வி நிலையில் பல்வேறு தாக்கத்தை ஏற்படுத்துகின்றன.

இதில் பல மோசமானதென கொள்ளத்தக்கவை தாழ்வுச்சிக்கல் தாழ்வுமனப்பான்மை,ஒதுங்கியிருத்தல் என்பனவாகும். வகுப்பறையில் பேசாது இருத்தல் எதிலும் ஆர்வத்தோடு இயங்காமை ஒழுங்கீனம் பிற இன்னோரேன்ன விடயங்கள் மாணவரை மிக விரைவாக இடை விலகலுக்கு தூண்டி விடுகின்றது. வக்கிர உணர்வுகளுடன் பழிவாங்கும் படலத்திற்கு செல்கின்றது.

இவ்வாறான மாணவர்களை இனம் கண்டு அரங்கச்செயற்பாடுகள், பயிற்சிகள், பல்வேறு அரங்க ஆற்றுகைகள் மூலம் மிக விரைவாக மீட்டெடுக்க முடியும்.நம்பிக்கையும் துணிவும் ஒரு பிள்ளையிடம் வந்தாலே போதும்,அது துலங்க தொடங்கிவிடும் .

முதலிலே பிள்ளையுடன் நேர் தொடர்பாடல்களை ஏற்படுத்துதல் வேண்டும்.பிள்ளை மனம்விட்டு பேச ஆசிரியர்களிடத்தே மிகத் துணிவோடும் நம்பிக்கையோடும் தனது கருத்துக்களை வெளிப்படுத்த சந்தர்ப்பம் அளிக்க வேண்டும் சிறப்பாக இனங்கண்ட பிள்ளைகளை பெயர் கூறி அன்பாக அழைத்தல் வேண்டும் சிறிய பொறுப்புக்களை அவர்களிடத்தில், ஒப்படைத்தல் அதைப்பற்றி அவர்களிடத்தில் உரையாடுதல் அவ்விடயத்திற்காக நன்றி கூறுதல் பாராட்டுதல் போன்ற விடயங்களை முடியுமான வரை செயற்படுத்தல் வேண்டும்

பயம் தாழ்வு மனப்பாண்மை ஒதுங்கியிருக்கும் பிள்ளைக்கு எடுத்த எடுப்பிலேயே கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுதல் பாடத்திட்டம் நிறைவுசெய்ய வேண்டும் அங்கலாய்த்து தீவிர நடவடிக்கையில் இறங்குதல் பெரும்பாலும் பொருத்தமற்ற செயற்பாடாக அமையும் அது "பிள்ளையார் பிடிக்கப்போய் குரங்கான கதையாகவே அமையும்...."

பிள்ளைகளின் செயற்பாட்டிற்கு மதிப்பீடாகவோ அன்றி பாராட்டாகவோ அமையலாம் இதில்பாடத்திட்டம் வேலைத்திட்டம் நிறைவடையவில்லை என ஆசிரியர் பதட்டமடையக்கூடாது இதற்கு ஆசிரியர்க்கு தற்துணிவு தேவை அரங்க செயற்பாடுகளில் மிக எளிமையானவற்றில் இருந்து செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படுதல் வேண்டும் படிப்படியாக அவற்றை ஆரம்பிக்கலாம்.

உடல் அசைவுகள்.விலங்குகள்.பறவைகள் போல செய்தல் ஆக்கியல் அசைவு பல்வோறு அரங்கச் செயற்பாடுகளை தாளத்திற்கு அசைதல் அல்லது இயங்குதல் இசைக்கேற்ற அசைவுகள் படைப்பாக்க அசைவுக் கருத்தூண்டல் பயிற்சிகள் மன ஒருமைப்பாட்டிற்கான பயிற்சிகள் கற்பனைத்தூண்டும் பயிற்சிகள் என படிப்படியாக பயிற்சிகளின்எல்லைகளை விரிவுபடுத்தல் வேண்டும்.தொடர்ந்து குரல் பயிற்சிகள் தொனிவேறுபாட்டிற்கான பயிற்சிகள் அரங்க அசைவுகளிற்கான பயிற்சிகள் ,போன்ற பிற இன்னோரன்ன பயிற்சிகளை தொடர்ச்சியாகவும் ஒழுங்கு முறைப்படியும் செயற்படுத்தல் வேண்டும். மாணவர் இடத்தே மனவெழுச்சி (Emotion)தூண்டப்படுகின்ற போது பெரு மகிழ்ச்சியும் துணிவும்,தன்னம்பிக்கையும் பிறக்கின்றன. இதனால் மாணவர்கள் இடத்தே சுயமதிப்பீடும் சற்று அவதானிக்கலாம்சுயவிமர்சனம் பகுத்தாராயும் தன்மை,பிரச்சினைக்கான காரணம்,அதற்கான தீர்வு போன்றவற்றை மிக எளிதில் கண்டுகொள்ளும். இதனால் எதிலும் ஆர்வம்,நாட்டம் வருகின்றது. அதற்காக முயற்சிக்கின்றது.

தன்னம்பிக்கையும் மகிழ்ச்சியும் ஒரு பிள்ளையிடத்தே வந்துவிட்டால் போதும் அவர்கள் சகலதுறைகளிலும் தேர்ச்சி பெற்று பிரகாசம் அடைவார்கள்.

திரு. வ.தயாநிதி,<br>ஆசிரியர்,<br>யா/முத்துத்தம்பி மகா வித்தியாலயம்.

# மாணவர்களும் வாசிப்புப் பழக்கங்களும்

மாணவர்கள் தமது பாடசாலைக் காலத்தில் பல விடயங்களும் கற்றுக்கொள்ள வேண்டியுள்ளது தமது கருத்தினை பிறருடன் தொடர்பு கொள்ளும் மூலமும் ஊடக மொழியாகும் இந்த மொழி அறிவில் தேர்ச்சிபெற வேண்டுமாயின் அவற்றிற்கு வாசிப்பு முக்கியமானதாகும் .வாசிப்பானது சிறுவயதிலிருந்தே வாழ்நாள் முழுவதும் தொடரவேண்டும் என மாணவர்களுக்கு வலியுறுத்த வேண்டும் இதனை செயற்படுத்தும் பொறுப்பு ஆசிரியரையே சார்ந்தது நூலகம் என்பது நூல்களின் தொகுதி என்றும் பொருளைக் கொண்டது நூல்களானது ஆரம்பகாலங்களில் கோயில்கள் மடாலாயங்களிலே காணப்பட்ட போதிலும் அவை மாணவர்களின் வாசிப்புத் தேவைக்காக அன்றி முன்னோர்களின் அறிவுப் பொக்கிசம் இலக்கியங்கள் இதிகாசங்கள் புராணங்கள் கவிதைகள் பண்கள் போன்ற அரும்பொக்கிசங்களை பாதுகாத்து வைக்கும் இடமாக இருந்துள்ளது

ஆரம்பகாலங்களில் நூல்களின் செயற்பாடுகள் மூடிய செயற்பாடுகளாகவே இருந்தன. காலப்போக்கில் அறிவு தொழில் நுட்ப வளர்ச்சிகாரணமாக அச்சியந்திரக்கண்டுபிடிப்பும் காகித கண்டுபிடிப்புகளும் நூல்கள் அதிகளவு உருப்பெற காரணமாயின இதனால் நூலக வரலாறு ஒரு புதிய பரிமாணத்தை எட்டியது இன்று நூல்கள் அச்சு ஊடகங்கள் மட்டுமின்றி இலத்திரனியல் சாதனங்களையும் கொண்டதாக மிளிர்கிறது. மாணவர்கள் நூல்களை வாசிக்கும்பொழுது தரமான நூல்களை வாசிக்க வேண்டும். எனினும் சில மாணவர்களிடத்தில் ஆர்வம் இன்றி காணப்படுகிறது. இதற்கு அவர்கள் வாசிக்க வேண்டியதன் அவசியம் உணர்த்தப்படாமை வாசிப்பு சிறு வயது தொடக்கம் ஈடுபாடு ஏற்படாமை பிறபொழுதுபோக்குகளால் அதிக கவனம் செலுத்துதல் வாசிப்பதற்கு குடும்ப சூழல் சாதகமாக அமையாமை பெற்றோரின் வாசிப்புப் பழக்கமின்மை பொருளாதார பின்னடைவு போன்ற காரணங்களை காணலாம்

வாசிப்பு என்பதன் விளக்கத்தை பார்க்கும் போது வாசிப்பு பல கருத்துக்களை உள்ளடக்கியுள்ளது.படித்தல் கற்றல் சொல்லுதல் போன்றவை மட்டுமன்றி இசைக்கருவிகளை வாசித்தல் வாசிப்பதற்காகவே கொள்ளப்படுகின்றது எழுதப்பட்ட அல்லது அச்சடிக்கப்பட்ட அல்லது பொறிக்கப்பட்ட வசனங்களை வாயாலோஅல்லது மனதாலோ எச்சரித்து அறிவால் பொருளுனரும் ஒரு செயலே வாசிப்பு எனப்படுகிறது எனவே வாசிப்புக்கு அறிவுதிறன் பார்வை நலம் மனநலம் சூழல் நலம் ஆகியன இன்றியமையாதது ஆகும் வாசிக்கும் போது மன ஒருமைப்பாட்டுடன் கண்கள் என்ற புலன் வழியாக ஒரு படைப்பாளியின் எண்ணங்களையும்

உணர்வுகளையும் எழுத்துக்கள் போன்ற கருவியினூடாக காணப்படுகிறது வாசிக்கும் பயண்களை பெற வாசிப்பின் வகைகள் பற்றி தெளிவினை பெறவேண்டும் ஆழமான வாசிப்பு கருத்தூன்றி வாசிப்பு உரத்துவாசிப்பு வரிக்கிரகமாக வாசித்தல் தெரிதல் நிலை வாசிப்பு எழுத்தெண்ணி வாசிப்பு மௌனமான வாசிப்ப ஆகிய வகைகளையும் அவற்றின் முறையியலையும் அவற்றால் ஏற்படும் பயன்பாடுகளையும் அறிந்து வாசித்து வினைத்திறனாக கொண்டால் சிறந்த வினைத்திறனைத் தரும். குற்பித்தல் கற்றல் நோக்கங்களின் அடிப்படையில் வாசிப்பு பல நிகழ்வுகளை உள்ளடக்கியதாக காணப்படுகின்றது

- வரிவடிவத்தை புரிந்து கொள்ளுதல்
- மையக்கருத்து இனங்கானல்
- மையக்கருத்து துனைக்கருத்தின் வேறுபாடல்களை உணர்ந்துகொள்ளல் வெளிப்படையாக கூறாத செய்திகளைப் புரிந்து கொள்ளல்
- வாக்கியங்களுக்கு இடையிலான தொடர்பானை இனங்கானல்
- புதிய சொற்களின் பொருளை ஊகித்தல் போன்ற அம்சங்களை உள்ளடக்கியதாக காணப்படுகின்றன.
- கற்றலில் நான்கு திறன்கள் காணப்படுகின்றன கேட்டல் வாசிப்பு எழுத்து பேச்சு இவற்றிலேயே வாசிப்பு முதன்மையானது என போட்றரன்ட் ராஸ்ல் என்பவர் குறிப்பிடுகின்றார்.
- வாசிப்பு சிந்தனைகளை மனதில் தூண்டிவிடுகின்றன. மனதைப் பண்படுத்துகின்றன இதனால் மனிதனில் மாற்றங்கள் ஏற்படக் காரணமாக அமைகிறது
- வாசிப்பு ஒருவரின் கற்பனைச் சக்தியை விரிவடையச் செய்வதோடு உணர்ச்சிகளை பயன்படுத்தி மனதை நெறிப்படுத்துகின்றன.
- மௌனத்தையும் அடக்கத்தையும் ஆளுமையையும் பெற முடிகின்றது.
- ஞாபகசக்தியை மேலும் வளர்க்கிறது.
- எழுத்தாற்றலில் ஈடுபட வைக்கின்றது .

மாணவர்கள் தமது கற்றலை மேம்படுத்ததுவதற்கு பாடசாலை நூலகம் மிகவும் பயனுள்ளதாக அமைகிறது. இந் நூலகங்களின் ஆரம்பக்கல்வி தொடக்கம் உயர்கல்வி மாணவர்கள் வரை பயன்படக்கூடியதாக உள்ளது ஆசிரியரின் கற்றல் கற்பித்தல் பயன்பாட்டிற்கு உதவும் மையமாகவும் பாடசாலை நூலகம் காணாப்படுகின்றது.மாணவர்களுக்கிடையே வாசிப்பு பழக்கங்களை மேம்படுத்த நூலின்

சிறப்புக்களை எடுத்துக் கூறுதல் அவசியமாகும்.ஆசிரியர் பாடத்தின் போது விடயங்களுக்கு பொருத்தமான நூல்களை குறிப்பிட்டுப்பேசுவதால் மாணவர்கள் தாமாகவே சென்று விரும்பிய நூல்களை வாசிக்கக் கூடியதாக இருக்கும் இதனால் வாசிப்பு ஆர்வம் மாணவர்களிடையே தானாகவே ஏற்பட்டு விடும் நூலகத்தில் அறிவு சாதனங்களை சேகரித்தல் வேண்டும் அது அறிவை வளர்க்க உதவுகின்றது.

கார்ல் ரோஜஸ் தனது மானிடக் கோட்பாட்டில் கற்றல் என்பது தன்நெறிப்பாடு கொண்டதாகவும் விடுதலை கொண்டதாகவும் அமைய வேண்டும் இதற்கு வாசிப்பினை அடிப்படையாகக் கொண்ட சுயகற்றல் மிகவும் பிரதானமானது எனக்குறிப்பிட்டுள்ளார் மாணவர்கள் தமக்கு தேவையான விடயங்களை மிகவும் ஆழமாகக் கற்றல் வேண்டும் அவ்வாறு கற்ற அறிவினை திரட்டிக்கொள்ளுதல் முக்கியமானதாகும்.

இன்றைய காலத்தில் மாணவர்களிடம் அறிவினை வளர்ப்பதற்கு பலவகையான நவீன வெகுசனத் தொடர்புச்சாதனங்கள் காணப்பட்ட போதிலும் நூல்களுக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டு வருகின்றது. இந்நூல்களானது நவீன அறிவு வழங்கும் ஊடகமாகவும் காணப்படுகின்றது இத்தகைய நூல்களை வாசிப்பதால் மாணவர்கள் பெரும் நன்மைகள் அடைகின்றனர். இதனை எல்லா மாணவர்களும் மேற்கொண்டால் வாசிப்பினால் மனிதன் பூரணமடைய முடியும் என்பதுமிகையன்று.

ஆசிரியர்
திருமதி. து. சதீஸ்கரன்,
யா/ முத்துத்தம்பி மகா வித்தியாலயம்.

# பாடசாலைக் கல்வியின் பண்புத்தரவிருத்தி

அறிமுகம்

பாடசாலை செயலொழுங்கில் பண்புத்தர விருத்தி என்பது முக்கியமான ஒன்றாக அமைகின்றது. தேசிய கல்விக் கொள்கையை உரிய வழி முறைகளில் பின்பற்றிச் செல்வதற்கு இது அவசியமாகிறது. தனிப்பட்ட வாழ்க்கைத் தேவைகளை நிறைவேற்றுவதற்கும் சமூகத்தின் ஒழுங்கான நிலைப்பாட்டிற்கும் அபிவருத்தியை நோக்கிச் செயற்திறனுள்ள பங்களிப்பை பெற்றுக் கொள்வதற்குரிய தேர்ச்சி மிக்க ஆளணியை உருவாக்குவதற்கும் உகந்த கல்விச் செயற்பாடுகளே பண்புத்தரம் கொண்டவையாகும். கல்வி அமைச்சு பாடசாலைகளுக்கு எவ்வித பாகுபாடுமின்றி பண்புத் தர விருத்திக்கான செயற்பாட்டுக்களையும் அதற்கான நிதி உதவிகளையும் , ஏனைய வளங்களையும் அளிக்கின்றது.

பண்பு சார் கல்வியும் தர விருத்தியும்

தரமான சமூகத்திற்கு தரமான கல்வி (Quatity Education For a Quality Society) என்னும் நோக்குடன் பாடசாலைகளில் கல்வியை நவீன மயப்படுத்தும் திட்டமே கல்வியின் பண்புத்தர விருத்தியாகும் இதற்கமைவாக மாணவர்கள் தமது வாழ்க்கையை முழுமையாக வெற்றி கொள்ளக் கூடியதாகும் அவர்களை சமூக நோக்கை மீள வலியுறுத்துகின்றன. பொறுப்புள்ள குடிமக்களாக உருவாகுவதற்குமான ஆக்கபூர்வ சிந்தனைத் திறனை விருத்தி செய்து தற்கால அபிவிருத்தி செயற்பாட்டினை முன்னெடுத்து செல்வதற்குமான அனைத்துத் தேர்ச்சிகளையும் தமது ஆற்றலுக்கேற்ப பெறுவதாகும். வியாபார பண்டம் ஒன்றினைப் போன்று கல்வியின் தரக்குறியீட்டை நாம் மதிப்பீடு செய்ய முடியாதெனினும் வாடிக்கையாளர்களான மாணவர்களின் திருப்தியை கவனத்தில் கொள்ள வேண்டும். மாணவர்கள் தனது ஆரம்ப பள்ளி வாழ்க்கையின் நுழைவு நாளில் எண்ணிறைந்த கற்பனைகளை சுமந்து எதிர்கால கனவுகளுடன் தமது கல்வியை தொடங்குகிறார்கள் இவர்களில் எத்தனை பேரது எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுகின்ற களங்களாக பாடசாலைகள் அமைக்கின்றன அல்லது எதிர்விளைவுகளை தோற்றுவிக்கும் களங்களாக செயற்படாமல் இருந்திருக்கின்றன என்பதிலேயே பாடசாலை கல்வியின் பண்புத்தரம் காத்திரம் பெறுகிறது.

கல்விச் சேவையை பெற வருகின்ற எல்லா மாணவர்களையும் வாடிக்கையாளர்களாக ஏற்க வேண்டும்.பாடசாலையில் இந்த மாணவன் படிக்க வந்துள்ளான்

இன்னொரு மாணவன் படிக்க வரவில்லை காலம் கழிப்பதற்கு வந்துள்ளான் என்ற மனோ நிலைகளை உருவாக்க முடியாது. எழுத தெரியாத, வாசிக தெரியாத அல்லது அவற்றின் மீது நாட்டத்தை தவிர்க்கும்மாணவர்களை அவர்களுக்கென விசேட திட்டங்களின் மூலம் எழுதுபவர்களாகவும் வாசிப்பவர்களாகவும் மாற்ற வேண்டும் இலக்கினுடாக அடையக் கூடிய 100சதவீதமான எழுத்தறிவு தரமான கல்வி செயற்பாட்டின் எதிர்பார்ப்பாக அமைகிறது. ஆரம்ப பருவ மாணவர்கள் எழுதுவதற்கும் வாசிப்பதற்குமான உரிய தேர்ச்சிகளை பெற்றிடச் செய்வது ஆசிரியர்களின் பணியாகும். ஆனால் இவ்வாறாக செய்யாது இடை நிலை வகுப்புக்களில் அவர்களை பாடசாலைக் கல்வியை வெறுக்க வைப்பதும் படிப்பறிபவர்களாக மாற்றி விடுவதும் சமூக ஆரோக்கியத்திற்கு மிகவும் கெடானது தரம் 2 வகையை சேர்ந்த பாடசாலைகளில்உரிய தேர்ச்சி மட்டங்களை எய்த்துபவர்களை விட தேர்ச்சி பெறாதவர்கள் தொகையே அதிகமாக காணப்படுகிறது.

தர விருதிகளுக்கான நடைமுறைகள்

பாடசாலைகள் மனிதவளம், பௌதீகவளம், நிதி வளம் என்னும் மூன்றினையும் ஒன்று சேர்த்த கல்விச் சேவையை வழங்கும் அமைப்பாகத் தொழிற்படுகிறது. இவ்வளங்களின் இணைப்புக்கள் பாடசாலைகள் பொறுத்து சரியாக நிறைவு செய்யப்படுகின்றது என்று சொல்ல முடியாது. இருப்பினும் அரசினாலும் சமுகத்தினாலும் கிடைக்கப் பெறும் வளங்களை உச்ச அளவில் பயன்பாடு செய்ய வேண்டிய நிறுவனங்களாக தொழிற்பட வேண்டி உள்ளது.பாடசாலை கல்வி நடைமுறையின் பாரிய குறைபாடு தர உறுதிப்பாட்டின்மை ஆகும் இதனை நிவர்த்தி செய்ய கல்வி அமைச்சினூடாக பல செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்துகிறது. அவையாவன

- நவீனமயப்படுத்தம் செயற்திட்டம்.
- பாடசாலை முகாமைத்துவ தர உறுதிப்பாடு.

முதலாவது செயற்பாட்டினூடாக பல்வேறுபட்ட நிதி ஒதுக்கீடுகளும், பாடத்திட்ட நடைமுறைகளும் மேற்கொள்ளப்பட்டு கல்வியை நவீன மயப்படுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுபவை

உ-ம்:-

I. இடைநிலைக் கல்வி அபிவிருத்திக்காக வழங்கப்படும் நிதிகள்.

II. உலக வங்கி நிதி உதவியுடன் நடைபெறும் செயற்திட்டங்கள்.

III. புதிய பாடத்திட்டங்கள் , பாடப் பிரிவுகளை அறிமுகப்படுத்தல்.

போன்றன

இரண்டாவது செயற்பாட்டினூடாக பாடசாலையில் நடைபெறும் சகல செயற்பாடுகளும் பண்புத்தரங்களையும் நியதிகளையும் அடிப்படையாக கொண்டு துறையாக வகுக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்படுகிறது இது தொடர்ச்சித் தன்மை வாய்ந்ததாக அமைகிறது . அத்துடன் விருத்தியையும் உறுதிப்பாட்டையும் பேணும் தன்மை கொண்டு அமைகிறது.

உ+ம்:-

I. பாடசாலை உள்வாரி மதிப்பீடு

II. பாடசாலை வெளிவாரி மதிப்பீடு

III. முறையான பாட விதான மதிப்பீடு

போன்றன .

கல்வியின் தரவிருத்திக்கு கல்விச் சமூகத்தினரது கூட்டுமுயற்சி அவசியம் நிர்வாக அமைப்பின் உயர்வு தாழ்வுக் கருத்துக்கள் அவசியமற்றவை. இலங்கையைப் பொறுத்தவரை ஏகாதிபத்திய ஆட்சியின் பண்புகளும் பரிமாணங்களும் அதிகார நடைமுறைகளாக இன்றும் மலிந்து கிடக்கின்றன. அவற்றை முழுமையாக அகற்ற வேண்டும் வளங்கள் குறைந்த நாடுகள் கூடஅபிவிருத்தியின் உச்ச நிலையை கல்வி சிறந்த முகாமை என்பவற்றினால் எட்டியுள்ளன.வளங்கள் குறைவு என்ற கருத்துக்களை இயன்ற வரை தவிர்க்க வேண்டும். முகாமை நடைமுறைகள் சாத்தியமான அழுத்தங்களை விடுத்து சாத்தியமான நட்ப நிலை செயற்பாடுகளை தோற்றுவிக்க வேண்டும். அதிபர்களும் ஆசிரியர்களும் ஏனைய அலுவலகங்களும் நட்பார்ந்த நிலையில் தத்தமது கடமைகளை நிறைவேற்றுதல் . மாணவர்களும் ஆசிரியர்களும் நட்புறவுடன் வகுப்பறை செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்லல் போன்றவை தரமான பாடசாலைச் சூழலை இலகுவாக ஏற்படுத்தும் உத்திகளாக இருக்கின்றன.

மாணவனுக்க பாடப் புத்தக விடயங்களை சமர்ப்பிப்பதை விட மாணவர்களுக்குரிய கௌரவமான கௌரவத்தையும் மதிப்பையும் கொடுப்பதன் மூலம் ஆசிரியர்கள் கௌரவமான மாணவர்கள் தாமாகவே ஆசிரியர்களிடம் பலவற்றை பெற விரும்புவர் இதன் மூலம் பாடசாலை வாழ்க்கையை வெற்றிகரமாக நிறைவேற்றும் பல சந்தர்ப்பங்களை மாணவர்களுக்கு கொடுக்கலாம் இச் சந்தர்ப்பங்கள் ஊடாக ஒவ்வொருவரது பலமும் பலவீனமும் வெளிப்படும். இதனடிப்படையில் மாணவர்களின் அறிவும் ஆற்றலும் தொடர்ச்சியாக மேலோங்கிச் செல்லும்.

கல்வித் தர மதிப்பீடு

கல்வி செயற்பாடுகளின் மதிப்பீடானது கல்வி அமைச்சின் முகாமைத்துவ தர உறுதிப்பாட்டு அலகினால் மேற்கொள்ளப்படுகிறது இதற்கான கையேடுகளும் வெளியிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. நடைமுறை சாத்தியப்பாடுடையதான புதிய கையேடும் தற்போது வெளிவந்துள்ளது பாடசாலையின் சகல அம்சங்களும் 7 வகையாக வகைப்பட்டு அவற்றிற்குரிய பண்புத் தரங்களும் சுட்டிகளும் தயாரிக்கப்பட்டுள்ளது இதற்கான முன்னோடி செயற்திட்டத்தில் 30 பாடசாலைகள் பரீட்சார்த்தியமாக பங்குபற்றியுள்ளன. இதனடிப்படையில் 53 பண்புத்தரங்களும் 180 சுட்டிகளும் 900 மேற்பட்ட நியதிகளும் ஏற்படுத்தப்பட்டன. இவற்றின் மூலம் மதிப்பீடு அளவு ரீதியாக மட்டுமன்றி பண்பு ரீதியாகவும் மதிப்பிட்டு பாடசாலைக்குரிய நிலை தீர்மானிக்கப்படுகிறது.

பண்புத்தர அனுகூலங்களும் பிரதி கூலங்களும்

பாடசாலைகளில் பண்புத்தர நியமங்களைப் பின்பற்றுவதால் கிடைக்க கூடிய அனுகூலங்கள் அதிகமாக காணப்படுகிறது. அதே போல் இவற்றை கடைப்பிடிக்காமல் விடுவதால் பல பிரதி கூலங்களும் ஏற்படுகிறது.

அனுகூலங்களாக பின்வரும் விடயங்களை கூறமுடியும்.

1. தேசிய கல்வி தரக் கோட்பாடுகளுக்கு ஏற்ப பாடசாலைக் கல்விச் செயலொழுங்கு இயக்கம் பெறும்.
2. பாடசாலையின் மதிப்பீட்டு நடைமுறைகளது தேசிய தரக்கோட்பாடுகளுக்கு இசைவானதாக நடைபெற முடியும்
3. அதிபர்கள், ஆசிரியர்கள் தேர்ச்சி விருத்திக்கு ஏற்ப தொழில் வாண்மை பெறுபவர்.
4. பௌதீக, மனித , நிதி வளங்களின் உரிய பயன்பாட்டை அனுபவிக்கலாம்.
5. முகாமை விருத்தியை ஏற்படுத்தி அதன் வினைத் திறனையும் அதிகரிக்க முடியும்
6. வாடிக்கையாளரான மாணவர்களும் பெற்றோரும், சமூகம் உச்ச திருப்தி நிலையை அனுபவிக்கலாம்.
7. மதிப்பீட்டு கலாச்சாரம் ஒன்று உருவாக்கப்படும்.
8. பாடசாலைகளில் பலமும்,பலவீனமும் இனங்கண்டு பலங்கள் விருத்தி பெறவும் பலவீனங்கள் நிவர்த்திக்கப்படவும் வாய்ப்பு ஏற்படும்.
9. சகல பாடசாலைகளும் ஒழுங்குபடுத்தப்பட்டு நாட்டின் கல்வித்தர உறுதிப்பாடு பேணப்படும்.

தீமைகள்

1. தேசிய ரீதியான தர உறுதிப்பாட்டை பேண முடியாது.

2. சிறந்த மதிப்பீட்டு நடைமுறைகளை பின்பற்ற முடியாது.

3. சகல வளங்களின் வினைத் திறனும் வீணடிக்கப்பட்டு விளைத்திறன் பாதிக்கப்படும் .

4. கல்வியின் பயன் பெறும் வாடிக்கையாளும் சமூகமும் உச்ச திருப்தியை அனுபவிக்க முடியாது.

5. அனைத்துப் பிரிவினராலும் கிடைக்கக் கூடிய அர்பனிப்பு சேவை கிடைக்க முடியாது .

6. பாடசாலையின் பலம் பலவீனங்கள் கண்டறியப்படாத நிலை உருவாகும் பலங்கள் நலிவடையுவும் பலவீனங்கள் அதிகரிக்க படவும் வாய்ப்புகள் ஏற்படும்.

7. முகாமைத்துவ பண்புகளில் விருத்தி காணப்பட மாட்டாது.

8. கௌரவமான மாணவர்கள் உருவாக்கப்பட மாட்டார்கள்.

9. தரமான கல்வியூடாக தரமான சமூகம் என்ற எதிர்பார்ப்ப தோல்வி பெறும்.

முடிவுரை

தேர்ச்சி பெற்ற மாணவர்களை உருவாக்குவதை இலக்காக கொண்ட பண்புதரக் கல்வி பாடசாலைகளில் கிடைப்பதை வலுவூட்டுவதற்கு பல திட்டங்கள் முன்வைக்கப்பட்டுள்ளது. அவற்றின் செயற்பாட்டினை அதிகரித்துக் கொள்வதற்கான மதிப்பீட்டு கலாச்சார நடைமுறை ஒன்றும் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இவற்றினைப் பின்பற்றி தரமான பாடசாலையையும் தரமான சமூகத்தையும் உருவாக்க வேண்டியுள்ளது. மூலம் தரமான பாடசாலைகள் என்ற எதிர்பார்ப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

திருமதி. க. கபிலன்,
ஆசிரியர்,
யா/ முத்துத்தம்பி மகா வித்தியாலயம்.

# கல்வியின் இலக்கு நோக்கி

மழைபெய்துநிலம் குளிர்ச்சியாக இருந்தாலும் விதையை விதைக்காவிட்டால் பயிர் வளராது. விதையை நட்டிருந்தும் மழை பெய்யாவிட்டாலும் பயிர் வளராது. அதே போல கற்றலும் கற்பித்தலும் இணையும் போதே கல்விவிளையும். நல்ல வினைத்திறனுடனான விளைதிறன் கிடைக்கும். இளமையின் துடிப்பும், முதுமையின் அனுபவமும் இணையும் போது தூரநோக்குடனான வினைதிறனை வினைதிறனுடையதாகும் என்பதில் ஐயமில்லை.

மாணவர்கள் வெறும் ஏட்டுக்கல்வியைமட்டும் எதிர்பார்ப்பவர்கள் இல்லை. அன்பினையும் அரவணைப்பையும் எதிர்பார்ப்பவர்கள். அன்புஎன்பதுஎந்தப் பரிசையும் எதிர்பார்க்காதது. ஏனெனில் அதுவே ஒரு பரிசுதான்.

"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்துஅதனைஅவன் கண் விடல்" ஆசானாகக் கற்பிப்போனாக ஒருவருக்குக் கிடைப்பது இறைவனின் கொடையாகும். அக்கொடையின் மூலம் ஈகை செய்து வாழ்வதே இதன் தாற்பரியம் ஆகும். தலையீடுகள் ,குறுக்கீடுகள் ஏற்படினும் தன் சேவையிலே தளராது உறுதியாக நின்று செயலாற்றுதல் வேண்டும். தன் சேவையிலே மனத்திருப்தி கொள்ளும் இயல்பே மனிதனின் மகத்தானபலம் ,நற்குணமும் பிறருக்கு உதவும் தாகமும் சிங்கத்தின் தைரியமும் அளிக்க வேண்டியதே கல்வி. அத்தகைய கல்வியே நம் மாணாக்கருக்குத் தேவையானது.

அவ்வாறின்றி மனிதனை வெறும் இயந்திரமாக மாற்றும் சுய நலத்தின் தந்திரங்களைக் கற்பிக்கும் குறுகிய புத்தியுள்ளவர்களாக ஆக்கும் கல்வியால் சமூகத்திற்கும் நாட்டிற்கும் யாது பயன்?

இன்று இளையசமுதாயத்தவரிடையேயும் சரி,மக்கள் சமூகத்திலும் சரி இறை நம்பிக்கை என்பது அருகிக்கொண்டே செல்கிறது. இதனை மீட்டெடுக்க வேண்டிய பொறுப்பு பன்முகவகிபாகம் கொண்ட ஒவ்வொரு ஆசிரியனது பொறுப்பும், கடமையுமாகும் .இறைவன் மீது உறுதியான நம்பிக்கை வைக்கக் கூடியதும் இறைவனே உற்ற நண்பன் என உணரக் கூடியதுமான ஆன்மீகம் சார்ந்த கல்வி போதிக்கப்பட வேண்டும். வெறும் பகட்டுக்களும், படாடோபங்களும் கொண்ட தெய்வவழிபாட்டிலும் பார்க்க, அமைதியாக ஒரு இடத்தில் இருந்து இறைவனை வணங்கும் உண்மையான வழிபாட்டை சமர்ப்பணத்துடனான பக்தியை கல்வியானது வழங்கவேண்டும்.

இவ்வாறான கல்வி வழங்கப்படுமேயானால் பொறுப்புக்களிலிருந்து தப்பிஓடாமல் சாட்சியின்படி, கட்டளைப்படி நிறைவேற்றுத்தலும் பலனை எதிர்பாராமல் கர்மம் செய்ப வரும் எளிமையான வாழ்க்கை வாழ்பவரும், பணிவு நிறைந்தவரும் பிறருக்கு உதவும் குணமுள்ளவரும் பெற்றோரையும் குருவையும் மாத்திரமன்றி அனைத்து உயிரினங்களையும் மதிப்பதும் சமர்ப்பணமனோபாவத்துடன் வாழ்வதுமாகிய உத்தமமான கல்வியையே நல்லாசிரியா் வழங்க வேண்டும். இவ்வாறான கல்வியை வழங்கும் எல்லா கல்வியியலாளரும் ஒருமுனைப்போடு செயலாற்ற முன்வர வேண்டும். செயற்பட வேண்டும். இத்தகைய விழிப்புணா்வு கற்றவா்களிடம் ஏற்பட வேண்டும்.

ஆசிரியா்களால் மேற்கொள்ளப்படும் கற்றல் கற்பித்தலானது மாணவரைத் தானாகச் செய்யத்தூண்டுவதாக அமைய வேண்டும். நற்பழக்கங்களை ஆசிரியரைப் பார்த்ததும் பின்பற்றச் செய்யத்தூண்டும் ஆசிரியத்துவம் மிளிரவேண்டும். பொதுச் சொத்துக்களைப் பாதுகாக்கும் மனப்பக்குவம் மாணவரிடம் ஏற்படவழிப்படுத்த வேண்டும். ஓரிடத்திலிருந்து வெளியே செல்லும்போது மின்விசிறியின் ஆளியை நிறுத்துவதிலும் ,தெருவைக் கடக்கும் போதும் வகுப்பில் இருக்கும் போதும் கவனமாக இருப்பதிலும் உணவை வீணாக்காமல் இருப்பதிலும் பொதுச் சொத்துக்களைப் பேணுவதிலும் மெல்லப் பேசுவதிலும் தீயநட்புடன் சேராதிருப்பதிலும், புலன்களின் பிடியில் பட்டுமனமும் உடலும் பக்தியும் வீணாகாமல் கவனமாக இருப்பது என்பது எல்லாம் நாம் விழிப்புணர்வை அடைவதற்கான சிரத்தையாகும். ஆசிரியா் மாணவரிடையேபாலமாக அமைய வேண்டும். பண்பாட்டை அடிப்படையாகக் கொண்ட கல்வி முறையிலேபோதிக்கவேண்டும். யாரோபோட்ட பாடத்திட்டத்தை திணிப்பதனால் மாணவா்க்கு வெறுப்பு. இதனால் ஆசிரியரும் மாணவரும் அருகில் இருந்தாலும் தூரம் அதிகமாகவே உள்ளது. வகுப்புக்கள் வெறும் பிரசங்க மேடைகளாகவும்,தம் வித்துவத்தைக் காட்டும் களங்களாகவும் தொழில் நுட்பசாதனங்களைப் பயன்படுத்தி அதனால் ஏற்படும் நிமிட நேர மகிழ்வுக்களங்களாகவும் மாற்றமடைகின்றன. ஆனால் எம் மாணவருக்கு வேண்டியதுயாது? தம்மைத் தாமே அறிந்துகொள்கின்ற .தம் திறமைகளை இனம் காண்கின்றதம் முன்னே ஏற்படும் சவால்களை எதிர்கொள்கின்ற பண்பட்டக் கல்வியே வேண்டியது.

ஒரு மாணவனின் திறமையை இனம் கண்டு, அவனை மேலும் மேன்மையுறச் செய்யும் கல்விமுறையே வேண்டியது. கற்றல் என்பது விருப்போடு கற்பதாகும். அவ்வாறு கற்கும் போது அது எமக்கு மகிழ்வைத் தருகிறது. அந்தமகிழ்வு ஆனந்தமாகும் போது கற்றல்

என்பது சுயமாக நடைபெறவாய்ப்புண்டு. மற்றவர்களுக்காக மற்றவர் வற்புறுத்தலுக்காகச் செய்யும் காரியங்கள் பயனற்றவை. விளைவுகள் நன்மையும் தரமாட்டாது. அத்துடன் காலத்தேசெய்யும் காரியங்கள் உரியபயனைப் பெறுமதியுடன் தரும்.

கற்றல் என்பது விடாமுயற்சி நம்பிக்கை ஊக்கம் என்பதாகும். ஒரு செயலில் இன்பம் காண்போர். அச்செயலில் பல மணிநேரம் தம்மை மறந்து ஈடுபவார். அவர்களுக்குப் பசியோ, களைப்போ ஏற்படமாட்டாது. கற்றலின் போதுபுதிய விடயத்தை அறியவேண்டும் என்னும் ஆர்வத்தை ஏற்படுத்த வேண்டும். முன்னர் கைவரப் பெறாத ஆற்றல் தானாக வந்து விடுகிறது. இதனால் முன்பு இல்லாத மனப்பாங்கு கற்றலில் ஏற்பட்டு அதனை உணர்ந்து மகிழ்ந்து படித்தால் எவ்வளவு நேரமும் கற்கலாம். அதனால் மேன்மேலும் கற்க வேண்டும் என்னும் பேரார்வம் உந்தித்தள்ளும் நாம் நல்ல பழக்கங்களைக் கைக்கொள்வதற்கு நம் நல்ல பழக்கங்களே வழிகாட்டுகின்றன என்பது உண்மையன்றோ!

“சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம் வைத்ததொரு கல்வி மனப்பழக்கம்” என்பது ஆன்றோர் வாக்கு. எனவே நம்மை நாமே ஆள்வதற்குநம் பழக்கங்களே முன்னிற்கின்றன.

கல்வி என்பது உண்பதாக இருக்காமல் ஊட்டுவதாக இருக்க வேண்டும் “சொல்லிக் கொடுத்த புத்தியும் கட்டிக் கொடுத்த சோறும்” தருணத்திற்கு உதவாது. கல்வி என்பது கட்டடங்களுக்குள் மட்டும் நடக்கிற பரிவர்த்தனையாக இருக்கக் கூடாது. ஒவ்வொரு நொடியிலும் நிகழ்ந்து கொண்டிருப்பதே கல்வி. படிக்க ஆரம்பிப்பதற்கு முன்பே தொடங்கிப் படித்துப் பட்டங்கள் பெற்று வெளியே வந்த பின்பும் தொடர்கின்ற ஒரு வாழ்வியல் சாதனம். ஆனால் இன்று கல்வி கசப்பதற்குக் காரணம் அதனைச் செலுத்துகின்ற தன்மைதான். கடப்பாறையைப் போல் கல்விகடினமாகப் பிரயோகப்படாமல் பூக்களுக்கு வலிக்காமல் தேனீக்கள் தேன் எடுக்கிற நேர்த்தியுடனும், பூமிக்கு நோகாமல் விதைகள் வேர்விடுகிற நயத்தியுடனும் போதிக்கப் பட்டால் அதைஎல்லோரும் நேசிப்பார்கள். கல்வியின் இன்றைய கட்டியம் வகுப்பின் கடைசி மாணவனை இலக்காகக் கொள்ள வேண்டும் என்பது தான்.

கல்வி என்பது தன்னை உணரவைக்கின்ற சாதனமாக வேண்டும். மலரை, பறவையை. புல்லை, புழுவை ஆழமாக நேசிக்கக் கற்றுத் தருவதாக அமைய வேண்டும். உற்று நோக்கவும் விழிப்புணர்வு அடையவும் அது பயிற்சியளிக்க வேண்டும் அந்நிலையை அடைந்தவர்கள், எந்தத்துறையில் சென்றாலும் அவர்களை உயர்த்திக் கொள்வார்கள். தங்கள்

கால்களால் பூசிக்குள் புதைந்து போகாமல் அவற்றையே மேடையாக்கி மேன்மையடைவார்கள்.

நம் எதிர் காலச் சந்ததியினரை சமயோசித புத்தி யுடையவர்களாகவும், வாழும் தருணத்தை உணர்ந்தவர்களாகவும் வாழ வைக்க வேண்டும். குழந்தைகள், கபடமற்றவர்கள். அவர்களுக்கு வழிகாட்டும் போது நிகழ்காலத்திலே பெரியவர்கள். பயணிக்க வேண்டும். இறந்த காலத்திலோ, எதிர்காலத்திலோ பயணிக்கக் கூடாது. கற்றுத்தருபவன் வழிகாட்டி. வேறொருவனிடம் வழியைத் தெரிந்து கொண்டவர்கள். வெறும் ஆசிரியர். ஆனால் அந்த வழியிலேயே போய் வந்தவர்கள் ஆசானாகத் திகழ்கிறார்கள் அவசரப்படுபவர்கள். சரியானபாதையைத் தேர்ந்தெடுக்க முடிவதில்லை. பாதைக்கும் பாதத்திற்கும் இடையே ஒரு தொடர்புண்டு. கல்வி என்பது கணனியோடு நின்று விடுவது அல்ல.

இயற்கையை நேசிப்பது
மலர்களைச் சுவாசிப்பது
ஆற்றில் கால் நனைத்து மகிழ்வது
குளத்தில் கல் எறிந்துவட்டங்கள் உருவாவதைக் கண்டுகளிப்பது எல்லாம் தான் என்பதை உணர வேண்டும். எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்கு பொய்யா விளக்கே விளக்கு.

எனவே உண்மையான கல்வியானது வெறும் அறிவை மட்டும் வளர்த்தால் ஆபத்தை விளைவிக்கும். இதயம் வளர்ச்சியடைவது தான் முக்கியம் வாழ்க்கையை வழிகாட்டியாக மாற்ற பெற்றோரும் .பெரியோர்களும் முன்வந்தால் இன்றைய தலைமுறையை வழிதடுமாறிச் செல்ல விடாமல் நிச்சியமாகக் காப்பாற்ற முடியும். வெறும் பேச்சு மட்டும் போதாது. செயல் மூலம் வெளிப்படுத்தவும் தியாகம் வேண்டும். அன்பு வேண்டும். இவை அனைத்தையும் வயதில் பெரியவர்களாகிய நாம் பின்பற்றினால் அதுவே பண்பாட்டை அடிப்படையாகக் கொண்ட கல்வி முறையாக மலரும் என்பதில் ஐயமில்லை. எனவே ஒன்று படுவோம் அதன் மூலம் ஆரோக்கியமான சமுதாயத்தைக் கட்டியெழுப்ப எல்லோமும் ஒன்றுபடுவோம்.

விதையின் ஏக்கம் விருட்சமாவது
ஓவ்வொரு குழந்தையும் ஓவ்வொரு விதை
விதையின் விருப்பம் முளை விடுவதாகும்

எனவே கல்வியில் குழந்தைகளின் போக்கிற்கேற்ப பொருத்தமான கல்வி வாய்ப்புக்கள், சாத்தியக்கூறம், நம்பிக்கைக் கீற்றுக்கள் வெளிச்சவிதைகள், அவைவிரல்களைப்

பார்த்தே புரிந்து கொள்ளவும் வித்தைகள் அனைத்தையும் தெரிந்து கொள்ளவும் வழிகாட்டினோமானால் பரந்த புதியதொடு வானம் நம் கண் முன்னே தெரிகிறது.

திருமதி.அ. இளங்கோவன்,
பகுதித் தலைவர் (6-9),
யா/முத்துத்தம்பி மகா வித்தியாலயம்,

# குறள் கூறும் வாழ்வியலின் பண்புகள்

இவ்வுலகில் மனிதன் பெறுமதி மிக்கவனாக மாறுவது அவன் உயர்ந்த பண்புகளை வெளிக்காட்டும் பொழுதுதான். வரலாற்றில் யேசுபிரான், கௌதம புத்தர் , நபிகள் நாயகம், இராமகிருஷ்ண பரமஹம்ச சர்,பகவான் சத்திய சாயி பாபா போன்றோர் மனிதர்களாகப் பிறந்தும் தம் சிறந்த பண்புகளை வெளிக்காட்டி மக்களை அன்பினூடாக நல்வழிப்படுத்தியமையால் தெய்வீகத் தன்மையைப் பெற்றனர் இவர்கஆளாட சுவாமி விவேகானந்தர் ,காந்தியடிகள் ,அன்னை தெரேசா என்பலர் தம் உயர் பண்புகளை வெளிக்காட்டி உத்தமர்களாக வாழ்ந்து காட்டினர்.

மனிதனிடம் அன்பு இரக்கம் ,வாய்மை,நேர்மை,கொல்லாமை, அழுக்காறமை, நன்றி மறவாமை போன்ற பல உயரிய குணங்கள் இருந்த போதும் அவற்றை விடுத்து எதிர் மாறாக செயற்படுகின்றபன் இதனால் மனிதனது வாழ்வு பல துன்ப துயரங்கள் நிறைந்ததாகக் காணப்படுகிறது.ஆனால் மனித வாழ்வின் ஒவ்வொரு இயல்புகளையும் அவற்றின் விழைவுகளையும் மிகவும் துல்லியமாக விளங்கிக் கொண்ட வள்ளுவர் குறட்பாவில் அவை பற்றித்தெளிவாக விளங்கி உள்ளார் பொய்யா மொழிப் புலவராம் வள்ளுவர் தனது 1330 பாடல்களையும்இரண்டு அடிகளில் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் எனும் பகுதிகளாக வகுத்து வாழ்வியலின் தத்துவத்தை சிறப்பித்துள்ளார்.

இவ்வகையில் அறத்துப்பால் என்ற பகுதியில் மனிதன் மனிதனாக ,சிறப்போடு வாழ எவற்றைக் கை விட வேண்டும் இவற்றின் விளைவுகள் எத்தகையயவை உலகில் நிச்சியமானவை,நிச்சயமற்றவை எவை என எடுத்தியம்பியுள்ளன.இவ்வுலகின் நிலைப்புக்கும் நம்பிக்கைக்கும் ஆதாரமான இறைவனை சிலர் இன்று வரை விவாதத்திற்கு உட்படுத்தும் கருப்பொருளாக காண்கின்றனர். ஆனால் வள்ளுவர் இறைவன் பற்றி

"அகர முதல எழுத்தெல்லாம் -ஆதி
பகவன் முதற்றே உலகு"

எழுத்துக்களெல்லாம் அகரம் எப்படி அடிப்படையாக உள்ளதோ அப்படியே உலகமும் இறைவனை அடிப்படையாக கொண்டு இயங்குகிறது. என அன்றே கூறிவிட்டார்.அறம் என்பது தர்மம். ஆஅறம் செய்ய விரும்பு என்பது ஔவையார் கூற்று அறம் என்றால் தான தர்மம் செய்தல் ஒன்றே என நம்மத்தியில் நம்புகின்றோம்.ஆனால் வள்ளுவர் குறட்பாவில் எத்தகைய அறங்களினூடாக மனிதன் வாழ்வாங்கு வாழலாம் என அறத்திைப் பல்வேறு நிலைகளினூடாக விளக்கி உள்ளார்.

"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன்

ஆகுல நீர பிற "

"அழுக்காறு அவா வெகுளி இன்னாச் சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம்"

அதாவது ஒருவன் தன் மனத்தின் பால் குற்றமற்றவனாக இருக்க வேண்டும். அதுவே அறம் மற்றவையெல்லாம் ஆரவாரம் என்றும் பொறாமை, ஆசை ,சினம், கடும்சொல் எனற நான்கு குற்றங்களும் இடம் கொடுக்காமல் அவற்றை கழந்து ஒழுகவதே அறம் என்கிறார். எனவே மனிதர்களாகிய நாமும் அறம் என்பது என்ன என விளங்கிக் கொண்டு ஒழுகி வாழ்தல் சிறப்புடையதாகும். ஆழகான மனித வாழ்விற்கு .அமைதி, நின்மதி, என்பன அணிகலனாகும். இவற்றை தரவல்லது "அன்பு" ஒன்று தான் ஆனால் இன்று உலகில் அன்பு என்ற பினைப்புக் குறைந்து அரக்க குணம் மேலோங்கி நிற்கிறது. இதனால்மனிதன் சொல்லொணாத் துன்பங்களை அனுபவிக்கிறான் இந்த அன்பு பற்றி வள்ளுவர் பின்வருமாறு கூறுகிறார்

"அன்போடு இயைந்த வழக்கென்ப ஆருயிர்க்கு
அன்போடு இயைந்த தொடர்பு"

அருமையான எமது உயிருக்கு உடம்போடு பொருந்தி இருக்கின்ற உறவு எதுவென்றால் அன்போடு பொருந்தி வாழும் வாழ்க்கையின் பயன் என அன்பின் மகத்துவத்தை அழகாக கூறுகிறார். இவ்வாறு வாழ்வில் அன்பின் சிறப்பினைக் கூறும் வள்ளுவர் இல் வாழ்வில் கூறியுள்ளதை நோக்கின் மனிதனானவன் பொருள் சேர்க்கும் பொழுது பழிக்கு அஞ்சி சேர்த்து செலவு செய்யும் போது பகுத்து உண்பதை மேற்கொண்டால், அவ்வாழ்க்கையின் பண்பும் பயனும் சிறப்புடையதாகும் என்பதைப் பின்வரும் பாடலூடாக விளக்குகிறார்.

"பழியஞ்சி பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை
வழியெஞ்சல் எஞ்ஞான்றும் இல் "

இத்தகைய வாழ்வில் மனிதர்களாகிய நாம் எவ்வகையில் பொருள் சேர்த்து , அதனை எவ்வகையில் செலவு செய்தல் வேண்டும் என்பதனை தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார் காட்டு மிருகங்களாய் அன்றி, அறிவு படைத்த உணர்வு நிறைந்த மனிதர்களாகிய நாம் நம்மிடையே இனிய சொற்களைப் பேசி, இன்முகத்தோடு

விருந்தோம்பலை மேற்கொண்டு இனிய வாழ்வு வாழும் முறையை "இனியவை கூறல் " விருந்தோம்பல்" என்ற அதிகாரங்களினூடாக சிறப்பித்துக் கூறியுள்ளார்.

"பணிவுடையன் இன்சொலான் ஆதல் ஒருவற்கு
ஆணி அல்ல மற்றுப் பிற"

எவன் அடக்கமுடையவனாயும், இன்சொல் பேசுவனாகவும் இருப்பானோ. அவனுக்கு அவையே அணிகலன்களாகும், மற்றவை அணிகளல்ல என்றும்

"இருந்து ஓம்பி இல்வாழ்வது எல்லாம் விருந்து ஓம்பி
வேளாண்மை செய்தல் பொருட்டு"

என இல் வாழ்வில் பொருட்களை காத்து இல் வாழ்வு நடத்துவதெல்லாம் விருந்தினரைப் போற்றி உதவி செய்யும். பொருட்டே என்கிறார். ஒழுக்கம் பல்வகைப்பட்டது. எத்தகைய ஒழுக்கமாயினும் அது எம் உயிரினும் மேலாக மதிக்கப்பட வேண்டியது. ஆத்தகைய ஒழுக்கம் பற்றி "ஒழுக்கமுடமை" எனும் அதிகாரத்தில் புலவர் பல்வேறு வகைகளில் விளங்கியுள்ளார்.

"ஒழுக்கம் விழுப்பம் தரலாம் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும்"

அது போன்றே அடக்கம் என்பது எத்தகையது நாம் தவம் போன் எத்தகைய நிலமையிலும் அடக்கம் காப்போமாயின் அதன் சிறப்ப மேன்மை தரும் இதில் நாவடக்கம் பற்றி வள்ளுவர் கூறுவது சிறப்பானதாகும்.

"யாகாவர் ஆயினும் நாகாக்க –காவாக்கால்
சோகப்பர் சொல்லிழுக்கப் பட்டு"

என் நாவடக்கத்தின் முக்கியத்துவத்தை மனித வாழ்வில் வலியுறுத்துகிறார். இன்று மனிதர்களிடையே மலிந்து காணப்படும் பண்பு தீயவற்றை செய்வதற்கு அஞ்சாமல் பஞ்சமா பாதகங்களைச் செய்தலாகும் இதன் விளைவுகளால் ஒவ்வொரு மனிதனும் துன்பப்படுகின்றான் இது பற்றி தீவினை அச்சம் எனும் அதிகாரத்தினூடே வள்ளுவர் எடுத்துக் கூறுகிறார்

"எனைப் பகை உற்றாரும் உய்வர் வினைப் பகை
வீயாது பின் சென்று அடும்"

அதாவது எவ்வளவு கொடிய பகை உண்டாகும் தப்பி வாழ முடியும் ஆனால் தீய செயல்களைச் செய்தால் வரும் தீ வினையாகிய பகை நீங்காமல் பின் சென்று வருத்தும் என்பதாகும். இன்றும் இப் பூவுலகில் மனிதன் கொண்டிருக்க வேண்டிய மாபொரும் பண்பு செய்நண்றி மறவாமை ஆகும். பேற்ற தாய் தந்தையர் செய்த நன்மைகளையே மறந்து போகும் இன்றைய மனிதன் தம் வாழ்வில் மற்றவர்கள் செய்யும் நண்றியை எப்படி நினைப்பார் இத்தகையவர்கள் தம் வாழ்வில் வள்ளுவரின் " செய் நன்றி அறிதல்" எனும் அதிகாரத்தினைப் படிப்பதன் மூலம் அறிந்து கொள்ள வேண்டியவை அதிகம் செய் நன்றி பற்றி வள்ளுவர் கூறும் போது எந்த அறத்தை அழித்தவர்க்கும் தப்பிப்பிழைக்க வழி உண்டாம் ஆனால் ஒருவர் செய்த உதவியை மறந்து அளித்தவனுக்கு உய்வில்லை என்பதைப் பின்வரும் பாடலடிகளுடா வெளிப்படுத்துகிறார்.

"எந் நன்றி கொண்றார்க்கும் உய்வுண்டாம உய்வில்லை
செய் நன்றி கொன்ற மகற்கு"

மனித சமூகத்தின் உயிர் நாடியாக விளங்கும் வாய்மை என்பது ஒரு தவம் வாய்மை என்பது ஒரு அறம் வாய்மை என்பது ஒரு புகழ் எனவெல்லாம் சிறப்பிக்கப்படும் வாய்மையின் சிறப்பினை பின்வரும் பாடலடிகளுடாக சிறப்பித்துள்ளார்.

"மனத்தொடு வாய்மை மொழியில்
தவத்தொடு தாளம் செய்வாரின் தலை"

ஒருவன் தன் உள்ளத் தொடு பொருந்த உண்மை போசுவானானால் அவன் தவத்தொடு தாளமும் ஒருங்கே செய்வாரை விடச் சிறந்த தவம் என்கிறார். இவ்வாறாக வாழ்வில் நாம் எவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று கூறிய வள்ளுவர் மனிதன் வாழ்வில் பின்பற்றக் கூடாதவை செய்யத் தகாதவை எவை என்பதை பின்வரும் அதிகாரங்களுடாக விளக்கிகிறார். அழுக்காறாமை, புறங்கூடாமை, பயன் இல் சொல்லாமை, புலால் மறுத்தல், கள்ளாமை, கொள்ளாமை, பிறன் இல் விழையாமை, போன்ற பல அதிகாரங்களினூடாக விளக்கி மனித வாழ்வின் விழுமியங்களை வெளிப்படுத்தியுள்ளார்

"அணுவைத் துளைத்து ஏழ் கடலைபட புகட்டிக்
குறுகத் தறித்த குறள்"

என்ற ஔவையார் மொழிக்கிணங்க மனித இனத்தின் மேம்பாடடிற்கான உயர் சிந்தனைகளைத் தரும் குறப்பாவில் பொறித்திருக்கும் உண்ணத கருத்துக்களை உணர்ந்து கொண்டு அவற்றை எமத ஒவ்வொருவர் வாழ்விலும் கடைப்பிடித்து ஒழுகுவோமாயின் மனித குலமே மேம்பாடுடையதாகம் என்பத திண்ணம்

திருமதி வ. அம்பிகைபாலன்,

ஆசிரியர்,

யா/ பெரியபுலம் மகா வித்தியாலயம்.

# Z- புள்ளி ஓர் கண்ணோட்டம்

தற்போதைய கல்வி முறையில் மாண வர்களைப் பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவு செய்யும் முறையாக Z புள்ளி முறை பயன்படுத்தப் பட்டுள்ளது. அனைவரும் அறிந்ததே. இத்தெரிவு முறை ஏற்கனவே பல நாடுகளில் நடைமுறை யிலுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

எமது நாட்டை பொறுத்தவரை இம் முறை பொருத்தமற்றது என ஒருசாராரும், பொருத்தமானது என ஒருசாராரும் பலதரப்பட்ட கருத்துக்களைத் தெரிவித்து வருகின்றனர்.

எனவே இச் Z புள்ளி பற்றிய ஓர் கண்ணோட்டத்தை எடுத்து நோக்குவோமாயின், முதலில் Z புள்ளி என்றால் என்ன? இது எவ் வாறு கணிக்கப்படுகிறது. இதன் மூலம் மாண வர்கள் எப்படியான நன்மையை பெறுகின்றனர். எவ்வாறான பாதிப்பை அடைகின்றனர். என்பது பற்றிய ஓர் விளக்கத்தை ஆராய்தல் இன்றிய மையாத தொன்றாகும்.

**இடைப்புள்ளி ($\overline{x}$)**

இடைப்புள்ளி என்பது மொத்தப் புள்ளிகளின் சராசரியாகும்.

அதாவது

$$\overline{X} = \frac{\text{புள்ளிகளின் கூட்டுத்தொகை}}{\text{புள்ளிகளின் எண்ணிக்கை}}$$

உதாரணம்: 40,84,65,66,90 எனும் புள்ளி களின் இடைப்புள்ளி $\overline{X}$ ஆனது பின்வருமாறு கணிக்கப்படும்.

$$\overline{X} = \frac{40+84+65+66+90}{5}$$

$$= 69$$

இடைப்புள்ளி = 69 ஆகும்.

**நியம விலகல் ($\sigma$)**

நியம விலகல் என்பது ஒவ்வொரு ஈட்டும் இடைப்புள்ளியிலிருந்து சராசரியாக விலகி யிருக்கும் அளவாகும்.

நியமவிலகானது பின்வரும் சமன் பாட்டின் மூலம் கணிக்கப்படுகிறது.

$$\sigma = \sqrt{\frac{\Sigma(X-\overline{X})^2}{\Sigma f}}$$

உதாரணம்:-

40, 84, 65, 66, 90 எனும் புள்ளி களின் நியமவிலகல் ஆனது பின்வருமாறு கணிக் கலாம்.

$$\sigma = \sqrt{\frac{(40-69)^2+(65-69)^2+(66-69)^2+(84-69)^2+(90-69)^2}{5}}$$

$$= \sqrt{\frac{841+16+9+225+441}{5}}$$

$$= 17.5043$$

∴ நியம விலகல் = 17.5043 ஆகும்

எனவே எந்த ஓர் புள்ளித் தொடைகள் தரப்படு மிடத்து அவற்றுக்கான இடை X நியம விலகல் என்பன கணிக்க முடியும்.

**Z புள்ளி**

மூலப் புள்ளிகளின் தொடையிலுள்ள ஓர் புள்ளியின் Z புள்ளி என்பது அப்புள்ளியின் இடை-

யிலிருந்தான அதிகரிப்பின், நியம விலகலின் மடங்காகும். எனவே

Z புள்ளியானது பின்வரும் சமன்பாட்டின் மூலம் கணிக்கப்படுகிறது.

$$Z = \frac{X - \overline{X}}{\sigma}$$

இங்கு

$\overline{X}$ என்பது புள்ளிகளின் இடையாகும்

$\sigma$ என்பது புள்ளிகளின் நியம விலகலாகும்

X என்பது Z புள்ளி காண வேண்டிய புள்ளி யாகும்.

உதாரணம்:

40, 84, 65, 66, 90 எனும் ஒரு தொடைப் புள்ளிகளை நோக்கும் போது 84 எனும் புள்ளியின் Z புள்ளியைக் காண்போம்.

முன்னைய உதாரணங்களிலிருந்து

$$\overline{X} = 69$$

$$\sigma = 17.5043$$

$$Z = \frac{X - \overline{X}}{\sigma}$$

$$= \frac{84-69}{17.5043}$$

$$= 0.8569$$

∴ இத்தொகுதியில் 84 எனும் புள்ளியின் Z புள்ளி 0.8569 ஆகும்.

எனவே ஒவ்வொரு பாடத்திற்கும் அகில இலங்கை ரீதியாக மாணவர்கள் பெற்ற புள்ளி களின் இடை $\overline{X}$ நியம விலகல் $\sigma$ என்பன கணிக் கப்பட்டு அதன் மூலம் ஒவ்வொரு மாணவனும் ஒவ்வொரு பாடத்திலும் பெற்ற Z புள்ளி, அவன் பெற்ற புள்ளிக்கமைய

$$Z = \frac{X - \overline{X}}{\sigma}$$ எனும் சமன்பாட்டின்

மூலம் கணிக்கப்படுகிறது. இவ்வாறு க.பொ.த. (உ/த) பரீட்சையில் மாணவன் தோற்றிய மூன்று பாடத்திற்குமுரிய Z புள்ளிகள் வெவ்வேறாகக் கணிக்கப்பட்டு இம்மூன்று Z புள்ளிகளினதும் இடைச் Z புள்ளியாக மூன்று Z புள்ளிகளின் கூட்டுத்தொகையை 3 ஆல் வகுத்துப் பெறப்படு கிறது. இதுவே மாணவனுக்குரிய Z புள்ளியாக வெளியிடப்படுகிறது.

**Z புள்ளிமுறை மொத்தப் புள்ளி முறையை எவ்வாறு பாதிக்கிறது எனப் பார்ப்போம்.**

**1. வேறுபட்ட பாடத் தெரிவுகளிலுள்ள பாதிப்பு**

குறித்த ஓர் காலப் பகுதியில் நடாத்தப்பட்ட உயர்தரப் பரீட்சையில் பின்வரும் பாடங்களில் இடை, நியம விலகல்கள் அட்டவணையிலுள்ள வாறு காணப்பட்டது எனக் கருதுவோம்.

| பாடம் | $\overline{X}$ | $\sigma$ |
|---|---|---|
| கணக்கியல் | 54.4 | 3.6 |
| பொருளியல் | 51.6 | 6.8 |
| அளவையியல் | 60.7 | 9.5 |
| வணிகக்கல்வி | 43.4 | 5.4 |

A என்ற மாணவன் பின்வருமாறு புள்ளிகளைப் பெறுகின்றான் எனக் கொள்வோம்.

கணக்கியல் = 68 புள்ளிகள்
பொருளியல் = 78 புள்ளிகள்
வணிகக்கல்வி = 55 புள்ளிகள்

B என்ற மாணவன் பின்வருமாறு புள்ளிகளைப் பெறுகின்றான் எனக் கொள்வோம்.

கணக்கியல் = 65 புள்ளிகள்
பொருளியல் = 52 புள்ளிகள்
அளவையியல் = 80 புள்ளிகள்

மொத்தப்புள்ளி முறைப்படி

A பெறும் மொத்தப்புள்ளி = 198
B பெறும் மொத்தப் புள்ளி = 200

இதன்படி மொத்தப்புள்ளி அடிப்படையில் மாணவன் B, மாணவன் A யை விட கூடிய நிலையிலுள்ளான்.

Z புள்ளி முறைப்படி

A என்ற மாணவன் கணக்கியல் பாடத்தில் பெற்ற Z புள்ளி $= \frac{65-54.4}{3.6}$

$= 2.9444$

A என்ற மாணவன் பொருளியல் பாடத்தில் பெற்ற Z புள்ளி $= \frac{78-51.6}{6.8}$

$= 3.8824$

A என்ற மாணவன் வணிகக்கல்வி பாடத்தில் பெற்ற Z புள்ளி $= \frac{55-43.4}{5.4}$

$= 2.14815$

எனவே மாணவன் A பெறும் Z புள்ளி

$= \frac{2.9444+3.8824+2.14815}{3}$

$= 2.9917$

B என்ற மாணவன் கணக்கியல் பாடத்தில் பெற்ற Z புள்ளி $= \frac{68-54.4}{3.6}$

$= 3.7778$

B என்ற மாணவன் பொருளியல் பாடத்தில் பெற்ற Z புள்ளி $= \frac{52-51.6}{6.8}$

$= 0.0588$

B என்ற மாணவன் அளவையியல் பாடத்தில் பெற்ற Z புள்ளி $= \frac{80-60.7}{9.5}$

$= 2.03158$

எனவே மாணவன் B பெறும் Z புள்ளி

$= \frac{3.7778+0.0588+2.0316}{3}$

$= 1.9561$

ஆகவே Z புள்ளியின்படி மாணவன் A மாணவன் B யை விட கூடிய நிலையிலுள்ளான்.

**2. ஒரே பாடத்தில் தெரிவுள்ள மாண வரிடையே உள்ள பாதிப்பு**

குறித்த ஒரு வருடத்தில் நடைபெற்ற உயர்தரப் பரீட்சையில் இணைந்த கணிதம், பௌதிகவியல், இரசாயனவியல் ஆகிய பாடங் களுக்கான இடை, நியமவிலகல் என்பன பின்வரு மாறு காணப்பட்டன எனக் கருதுவோம்.

| பாடம் | இடை | நியம விலகல் |
|---|---|---|
| இணைந்த கணிதம் | 50.51 | 8.44 |
| பௌதீகவியல் | 51.04 | 6.53 |
| இரசாயனவியல் | 47.74 | 5.15 |

இப்பரீட்சையில் லோஜி எனும் மாணவி பெற்ற புள்ளிகள் பின்வருமாறு

இணைந்த கணிதம் - 76 புள்ளிகள்
பௌதிகவியல் - 69 புள்ளிகள்
இரசாயனவியல் - 61 புள்ளிகள்

தற்போது லோஜி பெற்ற Z புள்ளியை பார்ப்போம்.

இணைந்த கணிதத்தில் பெற்ற Z புள்ளி $= \frac{76-50.51}{8.44}$

$= 3.02014$

பௌதிகவியலில் பெற்ற Z புள்ளி $= \frac{69-51.04}{6.53}$

$= 2.75038$

இரசாயனவியலில் பெற்ற Z புள்ளி $= \frac{61-47.74}{5.15}$

$= 2.57476$

ஆகவே லோஜி பெற்ற Z புள்ளி

$= \frac{3.02014+2.75038+2.5747}{3}$

$= 2.7818$

ஆனால் லோஜி பெற்ற மொத்தப் புள்ளி $= 76+69+61$

$= 206$

இப்பரீட்சையில் சுஜித்தா எனும் மாணவி பெற்ற புள்ளிகள் பின்வருமாறு

இணைந்த கணிதம் - 65 புள்ளிகள்
பௌதிகவியல் - 75 புள்ளிகள்
இரசாயனவியல் - 63 புள்ளிகள்

தற்போது சுஜித்தா பெற்ற Z புள்ளியைப் பார்ப்போம்

இணைந்த கணிதத்தில் பெற்ற Z புள்ளி $= \frac{65-50.51}{8.44}$

$= 1.71682$

பௌதிகவியலில் பெற்ற Z புள்ளி $= \frac{75-51.04}{6.53}$

$= 3.66922$

இரசாயனவியலில் பெற்ற Z புள்ளி $= \frac{63-47.74}{5.15}$

$= 2.96311$

ஆகவே சுஜித்தா பெற்ற Z புள்ளி

$= \frac{1.71682+3.66922+2.96311}{3}$

$= 2.7831$

ஆனால் சுஜித்தா பெற்ற மொத்தப்புள்ளி

$= 65+75+63$

$= 203$

இங்கு பெறப்பட்ட முடிவுகளின்படி பின்வரும் அட்டவணையைக் கவனிக்குக.

| மாணவர் பெயர் | மொத்தப் புள்ளி | Z புள்ளி |
|---|---|---|
| லோஜி | 206 | 2.7818 |
| சுஜித்தா | 203 | 2.7831 |

இதன்படி நோக்கும் போது மொத்தப் புள்ளி முறையில் லோஜி முதல் நிலையில் உள்ளாள் ஆனால் Z புள்ளிப்படி சுஜித்தாவே முதல் நிலையில் உள்ளாள்.

எனவே Z புள்ளி முறையை எடுத்து நோக்கும் போது பாடச்சேர்மானம் இடையிலிருந்து பெற்ற புள்ளி விலகியிருக்கும் தன்மை என்பதற்கேற்ப மொத்தப்புள்ளி முறையில் தாக்கத்தை ஏற்படுத்துகின்ற போதிலும் இம்முறையினால் பாடங்களின் கடினத் தன்மை தவிர்க்கப் பட்டுள்ள ஓர் நிலையே காணப்படுகிறது.

தற்போது நாங்கள் வேறுபட்ட பாடச்சேர்மானமுள்ள A, B எனும் இரு மாணவர்களையும் ஒரே பாடச்சேர்மானமுள்ள லோஜி, சுஜித்தா எனும் இரு மாணவிகளையும் எடுத்து நோக்கினோம். இதிலிருந்து நாம் எடுக்கும் முடிவு என்னவெனில் வழமையான மொத்தப்புள்ளி முறையை இச் Z புள்ளி முறையானது மாணவர் Bக்கும் மாணவி லோஜிக்கும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது என்றே கூறலாம். இருந்த போதும் எமது நாட்டிலுள்ள வேறுபட்ட பாடச் சேர்மானங்களிலுள்ள பாடங்களின் இலகுத்தன்மை முற்றிலும் வேறுபட்டதாகவே உள்ளது. அதாவது வணிகக் கல்வியிலும், அளவையியல் இலகுவான ஓர் பாடமாகும். எனவே அளவையியல் எடுப்பவர் மொத்தப்புள்ளி முறையில் கூடிய புள்ளி எடுக்க வாய்ப்பு உள்ளது. ஆனால் Z புள்ளி முறையானது இப்பிரச்சினைக்குத் தீர்வளிக்கிறது. அத்துடன் நான்கு பாடத்திலிருந்து மூன்று பாடமாகக் குறைக்கப்பட்ட போது கலைப்பிரிவு மாணவர்களில் பெரும்பாலானோர் பொருளியல் எனும் பாடத்தினை எடுப்பதில்லை. ஆனால் தற்போதைய Z புள்ளி முறையானது பொருளியலை ஓர் பாடமாக எடுக்கும் கலைப்பிரிவு மாணவர்களுக்கும் ஓர் வரப்பிரசாதமாகும். மேலும் பௌதிகவியல், விவசாய விஞ்ஞானம் போன்ற பாடத்தெரிவுகள் மற்றும் சமய ரீதியான பாடத்தெரிவுகளிலும் கடின இலகு தன்மைகள் காணப்படுகிறது. எனவே இவ்வகையான பிரச்சினைகளுக்கு இச் Z புள்ளி எனும் நியமப்புள்ளி முறை தீர்வளிக்கிறது என்றே கூறமுடியும்.

Z புள்ளியானது பரீட்சைக்குத் தோற்றும் மொத்த மாணவர்களினதும் பரம்பலிலேயே தங்கியுள்ளது. இச் Z புள்ளியின் ஆளுமையில் ஒவ்வொரு மாணவனும் தங்கியுள்ளான். எமது நாட்டிலுள்ள மாணவர்களின் கல்வி நிலையை எடுத்து நோக்கும் போது பின் தங்கிய கிராமப்புறமாகவும், வசதி கூடிய நகரப்பகுதிகளாகவும், பலவாறாக அமைந்துள்ள படியினால் மாணவர்களின் குடித்தொகை ஏகவினமானதாக அமையாது போகலாம். எனவே Z புள்ளி குடித்தொகைப் பரம்பலுக்கேற்ப சிறுமாற்றம் செய்யலாம் தவிர இதனை முற்றாக நிராகரித்துவிட முடியாது என்றே கூறலாம்.

**திரு.த.நித்தியானந்தம்**

*ஆசிரியர்*

*யா/முத்துத்தம்பி மகா வித்தியாலயம்*

# நன்றியுரை

எம் பாடசாலையில் மணிவிழாக் காணும் ஆசிரியர் திருமதி. சத்தியபாமா. சிவகுமாரன் அவர்களின் சேவை நயப்பினை நினைந்து கௌரவிக்கும் முகமாக அவரது அகவை அறுபதிலே மணிவிழா நிகழ்வினை அழகாக செய்து மணிவிழா மலரினை மலரச் செய்ய வேண்டும். அம் மலர் அன்றைய தினமே விழாவிற்காக வரும் அனைவர் கரங்களிலும் தவழ வேண்டும். என்னும் வித்தினை விதைத்து அதனை விருட்சமாக்கி அவ் விருடசத்தில் மலரை மலரச் செய்வதற்கு வேராகக் கொண்டு ஊக்கமளித்தவருமான பாடசாலை முதல்வருக்கு முதற்கண் நன்றிகள் .

எமது பிரதி அதிபரின் பாடசாலைக்கால அர்த்தம் நிறைந்த வாழ்க்கை பதிவுகளை "சத்தியோதயம்" என்னும் மணிவிழா சிறப்பு மலராக வெளியிடுவதற்கு முன்னின்று ஆக்கமும் ஊக்கமும் அளித்த அனைத்து உள்ளங்களுக்கும் எமது இதயபூர்வமான நன்றிகள். அத்துடன் மணிவிழா மலரினை வெளியிடுவதற்கான ஆசிச் செய்தியை வழங்கிய நல்லை ஆதீன குரு மகாசந்நிதானம் அவர்களுக்கும் வாழ்த்துச்செய்திகளை தந்துதவிய யாழ் வலயக்கல்வி அலுவலகம், வலயக்கல்விப்பணிப்பாளர், பிரதிக்கல்விப் பணிப்பாளர் நல்லூர் கோட்டக்கல்வி அதிகாரிகள், வாழ்நாள் பேராசிரியர்கள், பேராசிரியர்கள், ஆசிரியர்கள் கல்விசாரா ஊழியர், பழைய மாணவர்கள், மாணவர்கள் அனைவருக்கும் இப்பொன்னான சந்தர்ப்பத்தில் நன்றிகள் உரித்தாகட்டும்.

மேலும் இம் மலருக்குத் தேவையான ஆக்கங்களை தந்துதவிய கல்வியாளர்கள், பழைய மாணவர்கள், ஆசிரியர்கள்,மாணவர்கள், அனைவர்க்கும் மனம் கனிந்த நன்றியினைக் கூறுவதில் பேருவகை அடைகின்றோம். இம் மணிவிழா மலரினை மிகக் குறுகிய காலத்தில் சிறந்த முறையில் ஆக்கித்தந்த அனைவருக்கும் எம் இதயம் கனிந்த நன்றியை தெரிவிப்பதில் உவகையடைகிறோம்.

மேலும் இம் மணிவிழா நிகழ்வானது சிறப்பாக நடைபெறுவதற்கு ஒத்துழைப்பு வழங்கிய அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திக்குழுவினர், கல்வி சாரா ஊழியர்கள் அனைவருக்கும் நன்றிகள்.

மணிவிழாக்குழு,
யா/ முத்துத்தம்பி மகா வித்தியாலயம்.





எமது பாடசாலையின் பிரதி அதிபர் அவர்கள் 38வருட கல்விச் சேவையில்.
எமது பாடசாலையில் 30 வருடங்களுக்கு மேலாக பணியாற்றியமையால்
அவரின் சேவையையும் அர்ப்பணிப்புக்களையும் பாராட்டும் முகமாக
"சத்தியோதயம்" பாடசாலைச் சமூகத்தினால் வெளியிட்டு வைக்கப்படுகிறது.

MATHI COLOURS 021 222928